221

# உலகப் போக்கு

மு. மு. இஸ்மாயில்

VI
N51
108773

வெளியீடுகள்

# உலகப் போக்கு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1951
MADRAS

மு. மு. இஸ்மாயில்

திரு. வி. க. வின் சிறப்புரையுடன்

விந்திய வெளியீடுகள்
வேப்பேரி :: சென்னை

காபிரைட்] [விலை ரூ. 2

முதற் பதிப்பு—1951

TAMIL NADU ARCHIVES LIBRARY
FORT. MADRAS
108773

Kabeer Printing Works, Madras-5

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 APR 1951
MADRAS

# சிறப்புரை

(திரு. வி. க. கூறியது)

"உலகப் போக்கு" என்னும் இந்நூல் என் பார்வைக்கு வந்தது. படலக் கண்ணுக்கு எழுத்துக்கள் புலனாகவில்லை. அதனால் நூல் என் முன்னிலையில் படிக்கப் பட்டது. பொருள்கள் செவியில் புகுந்தன.

இந்நூலாசிரியர் தோழர் மு. மு. இஸ்மாயிலை யான் நீண்ட காலமாக அறிவேன். அவர்தம் வடிவும், நோக்கும், பேச்சும், நடையும், குரலும், கருத்தும், பிறவும் என் உள்ளத்தைக் கவரும். "உலகை ஒன்றுபடுத்தும் அறிஞருள் இஸ்மாயிலும் ஒருவராவர்" என்று எனது நெஞ்சம் எண்ணியதுண்டு. இப்பொழுது அவர் அவ்வொருவராயினர் என்றே கூறலாம். இதற்குச் சான்றுகள் பல வேண்டுவதில்லை. இந்நூற்சான்று ஒன்றே சாலும்.

இந்நூல், ஒரு பொழில்—ஒரு கலைப்பொழில். மரப் பொழில் ஊரை ஓம்பும். கலைப்பொழில் உலகை ஓம்பும்; என்றும் ஓம்பும்; நின்றும் ஓம்பும். இக்கலைப் பொழிலுள் நுழைக; உலவுக; அறிவுக் காட்சிகளைக் காண்க.

"உலகப் போக்கு," பலதிறக் கட்டுரைகளால் ஆக்கப் பெற்றது. கட்டுரைகளில் செறிந்து கிடக்கும் பொருள்கள் பல. அவற்றுள் குறிக்கத்தக்கன சில. அவை: காந்தியம், கல்வி, கிராமம், பொதுமை, பொருண்மை, உலகம், ஜன நாயகம், சர்வதேச சங்கம், விஞ்ஞானம், சரித்திரம் முதலியன. ஒவ்வொரு பொருளும் பழமைக்கும் புதுமைக்கும்

அரனுமாறு விளக்கஞ் செய்யப்பட்டிருக்கிறது. விளக்கம், ஆசிரியரது ஆராய்ச்சித் திறத்தைப் புலப்படுத்துகிறது.

கட்டுரைகளில் காந்திய மணம் கமழ்கிறது. காந்தியப் பெயர் இன்று தோன்றியது; பொருள் என்றோ தோன்றியது. பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னர், பெரியோர், " அஹிம்சா பரமோதர்ம: " என்ற கொள்கையை விதைத்தனர். அத்தர்மம் வாழையடி வாழையென வளர்ந்து வருகிறது. அவ்வழி வந்தது காந்தியம். அஃது, உலகப் பிணக்குகளை எளிதில் களையும் ஆற்றல் வாய்ந்தது. காந்தியம், உலகமயமாயின், ஆசிரியர் உள்ளம் குளிரும் போலும்! அவர் உள்ளம் குளிர ஆண்டவன் அருள் புரிவானாக.

கல்வி, வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அது மனிதரிடத்துள்ள விலங்கியல்பைக் கல்லும் பண்புடையது. இத்தகைய கல்வி செம்முறையில் நடைபெறுதல்வேண்டும். இல்லையேல், உலகுக்குக் கேடே விளையும். இக்காலக் கல்வி எப்படி யிருக்கிறது? இக்கால நாகரிகக் கல்வி தன்னலத்துக்கு வித்திடுவது; சுரண்டலை ஊக்குவது; இரக்கத்தைத் தூக்கிடுவது; மூர்க்கப் போரை மூட்டுவது; உலகைக் கொலைக்களனுக்குவது. இன்னும் விரிக்க நாவெழவில்லை. இக்கல்வி முறை மாறுதல் வேண்டுமன்றோ! கலைஞர் இஸ்மாயில் வழிகாட்டுகிறார்.

உலகத்தின் உயிர் நாடி கிராமம். காந்தியத்துக்குத் தாயகமும் அதுவே. காந்தியடிகள், " கிராமம்-கிராமம் " என்று முழங்கிச் சென்றனர். அம்முழக்கத்தின் எதிரொலி இந்நூல் என்று கூறல் மிகையாகாது. இந்நாளில் கிராமம் எந்நிலை எய்தியுள்ளது? கிராமம் சுரண்டப்படுகிறது. அதனால் அது சவலையுறுகிறது. சுரண்டலும் சவலையும் போதல்வேண்டும். ஆசிரியரால் சில சீர்திருத்தங்கள் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளன. அவர் ஓரிடத்தில்

கிராமக் கைக்தொழில்கள் அறவே தொலேதல் கூடா தென்றும், விஞ்ஞானப் பொறிகளைக் கிராம மக்கள் ஓரளவி லேயே பயன்படுத்தல் வேண்டுமென்றும் கூறுகிறார். இக் கூற்று ஆராயற்பாலது.

பொதுமை, பண்டைநாளில் நன்றாயிருந்தது; இடை யில் சிற்சில மாறுதலடைந்தது; இப்பொழுது குலைந்தது. இக்கால உலகம் பொதுமையைக் குறிக்கொண்டு செல் வதை அறியாதார் இல்லை. பொதுமையைப் பற்றிப் பலதிறக் கருத்துக்கள் தோன்றிவருகின்றன. கருத்து வேற்றுமையை வரவேற்பது எனது வழக்கம். அவ் வேற்றுமை அறிவுப் போரை நிகழ்த்தும். அப்போரால் உண்மை படிப்படியே விளங்கிக்கொண்டுபோகும்.

அஹிம்சா தர்மத்தை முதல் முதல் அறிவுறுத்தியவர் முதல் தீர்த்தங்கரர். அத்தர்ம வளர்ச்சிக்கெனச் சில சீலங்களையும் அவர் அருளினர். அச்சீலங்களுள் ஒன்று, "மிகுபொருள் விரும்பாமை" என்பது. இது, பொதுமை யைத் தானே அரும்பச் செய்யும்.

இவ்வேளையில் பொதுமை யாண்டும் பேசப்படுகிறது. அது மார்க்ஸியத்தை அடிப்படையாகக் கொண்டது. மார்க்ஸியத்தை யான் வெறுப்பவன் அல்லன். ஆனால் அதனூடே அஹிம்சையும் ஆன்மார்த்தமும் விரவுதல் வேண்டுமென்பது எனது உட்கிடக்கை. இக்காரணம் பற்றியே காந்தியங் கலந்த மார்க்ஸியம் தேவை என்று யான் பறைசாற்றி வருகிறேன். அஹிம்சையையும் ஆன்மார்த்தத்தையும் கொண்ட பொதுமை இந்நூலா சிரியருக்கு உடன்பாடே.

"பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை" என்பது வள்ளுவம். "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன் னால் முடியும்......" என்பது மணிவாசகம். பொருள் எதற்கு? அருளைப்பெறுதற்கு என்க. அருளை வழங்காத

பொருளால் உலகில் அமைதி நிலைபெருது; ஒருபோதும் நிலைபெருது. அமைதிக்கென்று பொருள் நூல்கள் நாளுக்குநாள் குவிந்தவண்ணமிருக்கின்றன. அவற்றுள் ளும் இகல் இல்லாமலில்லை. பொருள் ஒருபால் பெருகி, மற்ருெருபால் அருகுதலால், அருள்நெறி வளர்ச்சிக்குத் தடை நேர்கிறதென்று சில அறிஞர் கருதுகின்றனர். இக்கருத்துப் போற்றற் குரியதே. தடையை எப்படி விலக்குவது? "மிகுபொருள் விரும்பாமை" என்ற சீலம் மன்பதையில் பரவிஞல் தடை தானே விலகும். "மிகு பொருள் விரும்பாமை"யை மக்களிடை நிலைபெறுத்து தற்கு மூர்க்கப் போர் வேண்டுவதில்லை; சட்ட திட்டங்கள் வேண்டுவதில்லை. பின்னே என்ன வேண்டும்? கடவுள் உண்மையில் உறுதியும், உயிர்களிடத்து அன்பும் வேண்டும். இதை இந்நூல் வெறுக்கவில்லை.

"உலகம்" என்னும் சொல் பொருளாகும் காலம் உற்றுள்ளது. யான் இளமையில், "முதலில் தமிழன் - பின்னே இந்தியன் - பின்னே உலகவன்" என்று சொல்லி வந்தேன்; இப்பொழுது, "முதலில் உலகவன் - பின்னே இந்தியன் - பின்னே தமிழன்" என்று சொல்லிவருகிறேன். காலநிலை என் கருத்தை மாற்றியது. ஒரு சிறு குண் டூசியை எடுத்து ஆராய்ந்தாலும், அதன்கண் உலகக் கூட்டுறவு இருத்தல் விளங்கும்; நனி விளங்கும். எந்த நாடும் உலகக் கூட்டுறவு இன்றி இனி வாழ்தல் அரிது; அரிது அரிது என்று அறுதியிடலாம். இந்நாளில் உலகை ஒருகுலமாக்க இயற்கை முயன்று வருவது கண்கூடு. அம்முயற்சிக்குத் துணைபோவது இந்நூல்.

உலகில் அமைதியை நிலைபெறுத்தல் வேண்டும் என்னும் நோக்குடன், "ஜனநாயக"ப் பெயரால், சர்வ தேச சங்கம், உலக ஒற்றுமைச் சங்கம், பலதிற அரசியல் அமைப்புக்கள் முதலியன காணப்பெற்றன. சர்வ தேச

சங்கம் சாய்ந்தது ; உலக ஒற்றுமைச் சங்கம் உடைந்து வருகிறது ; மற்ற அமைப்புக்களும் மறைந்து விட்டன. காரணம் நூலிற் பார்க்க.

நூற்கண் போந்துள்ள விஞ்ஞானக் குறிப்புக் களும், சரித்திரக் குறிப்புக்களும் பாராட்டற்குரியன. ஆக்கப் பணிக்கென்று விஞ்ஞானம் தோன்றியது. அதை வேறு வழியில் பயன்படுத்தல் அறியாமை. அழிவுக்கு விஞ்ஞானத்தைப் பயன்படுத்துங் "கலைஞர்" கொலைஞரே யாவர்.

காலத்துக் கேற்ற முறையில், "உலகப் போக்கு" என்னும் சீரிய நூலைத் தந்த தோழர் இஸ்மாயிலுக்கு நீண்டநாளையும், நோயற்ற யாக்கையையும், பிற பேறுகளை யும் வழங்குமாறு எல்லாம் வல்ல ஆண்டவனை வழுத்து கிறேன்.

# முகவுரை

**உலகப்போக்கு** என்னும் இந்நூலில் பன்னிரண்டு கட்டுரைகள் அடங்கியுள்ளன. அவைகளில் எட்டு, அகில இந்தியரேடியோவின் சென்னை, டில்லி நிலையங்களிலிருந்து ஒலி பரப்புவதற்காக எழுதப்பட்டவை. மற்ற நான்கு கட்டுரைகளும் தமிழ்ப் பத்திரிகைகளுக்காக எழுதப் பட்டவை. இக்கட்டுரைகள் வெளியான காலமும், சந்தர்ப்பமும் கட்டுரைகளின் ஆரம்பத்தில் கொடுக்கப்பட் டிருக்கின்றன.

இவைகள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பொருள்பற்றி எழுதப்பட்டவை. என்றாலும், இவற்றி னூடே யாரும் எளிதில்கண்டுகொள்ளக்கூடிய முறையில் சில பொதுவான உணர்ச்சிகள் அடிப்படையாக அமைந் திருக்கின்றன. அவ்வுணர்ச்சிகள் இக்கட்டுரைகளுக்கு மாத்திரம் பொதுவானவையல்ல; நம்முடைய நேற்றையப் போக்கிற்கும் இன்றைய நடப்பிற்கும் பொதுவானவையுங் கூட: முழு உலகின் போக்கிற்கும் பொதுவானவை. ஆகையால், அவைகளின் தொகுதியாகிய இந்நூலுக்கு **உலகப்போக்கு** என்று மகுடஞ் சூட்டத் துணிந்தேன். உலக நிகழ்ச்சிகள் பெரிய அளவில் உதாரணங்களாகவும், மேற்கோள்களாகவும், ஆதாரங்களாகவும் ஆளப்பட்டிருப் பதை வாசகர்கள் எளிதிலே காணலாம்

அவ்வப்போது நடந்து மறைந்துபோன நிகழ்ச்சிகள் பல இக்கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; ஆனால் அந்நிகழ்ச்சிகளின் தொகுதியல்ல இக்கட்டுரைகள். அந் நிகழ்ச்சிகள், சில உண்மைகளை விளக்கும் வகையில் அமைந்திருக்கின்றன; அத்தகைய உண்மைகளோ

என்றும் மறுக்கமுடியாதவை; இன்றும் மறுக்கமுடியாதன. ஆகையால் இக்கட்டுரைகளை எவ்விதத் திருத்தமுமின்றி— முதன்முதலாக அவை எப்படி எழுதப்பட்டனவோ அப்படியே வெளியிட்டிருக்கிறேன். மேலும், இங்கே குறிக்கப்பட்டிருக்கும் கடந்த காலச் சம்பவங்கள் அதிவேகமாக மாறிக் கொண்டிருக்கிற உலக அரங்கத்தைப் பற்றிய நம் நினைவுக்குச் சற்று ஸ்திரத்தையும், தொடர்ச்சியையும் கொடுப்பதோடு, நிரந்தரமான சில உண்மைகளைத் தெளிவாக விளக்கிக்காட்டும் நடந்த நிகழ்ச்சிகளாகவும் ஆகும்.

காந்திஜியைப் பற்றிய முதற் கட்டுரை காந்திஜி உயிருடனிருக்கும்போது எழுதப்பட்டது; இந்திய சுதந்திரப் போரில் அவருடைய வெற்றி இறுதியாக ஸ்தாபிக்கப்படுவதற்குமுன் எழுதப்பட்டது. ஆனால், அதில் குறிக்கப்பட்டிருக்கும் அவருடைய பெருமையை, அவருடைய காலத்துக்குப் பின்னால்—நம்முடைய தோல்விகளுக்கும், தாழ்விற்கும், பலவீனத்துக்குமிடையே—இன்று நன்றாகக் காணமுடிகிறது. **மனிதனுக்குரிய திட்டம்** என்ற கட்டுரை இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னால் எழுதப்பட்டது. இந்தியாவின் பொருளாதார நிர்மாணம் எப்படி அமையவேண்டுமென்பதை அக்கட்டுரை ஆராய்கிறது. இந்தியா சுதந்திரம் அடைந்த அன்றிலிருந்து இன்றுவரையிலுள்ள நம் நாட்டின் நிலையைக் கூர்ந்து கவனித்திருப்பவர்கள், அப்பொருள் பற்றிய கட்டுரையை இன்று எழுதினாலும் வேறு விதமாக எழுதமுடியாதென்பதை உணர்வார்கள். **ஸ்திர சமூகம்** என்ற கட்டுரை பொருள் வசதியில் ஏற்றத் தாழ்வு மிகுந்திருக்கும் மக்களிடையே, சமூகம் முழுவதையும் அமைதி குலையாத நிலையிலே வைத்திருப்பதற்காக, சமூகத்தின் பிரதிநிதியாகிய ஜனநாயக சர்க்கார் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. காந்திஜியின்

தர்மகர்த்தாக் கொள்கையை அடிப்படையாகக்கொண்டது **பசு** என்னும் கட்டுரை. செல்வந்தர்கள் மட்டுமின்றி அறிஞர்களும், அரசியல்—நிர்வாக அதிகாரம் பெற்றவர்களும் அதில் தர்மகர்த்தாக்களாகக் கருதப்படுகிருர்கள். மதம், கலே, நாகரிகம், அரசியல், பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளிலும் இந்தியா ஆதிமுதல் காட்டிவந்த **தாராளத் தன்மையை** ஐந்தாவது கட்டுரை வற்புறுத்துகிறது. 27-2-51-ல் லண்டனில் நடந்த கூட்டமொன்றில் "தாராளத் தன்மை என்பதற்கு எதிர்மறை (Negative), நிகழ்ச்சி (Positive) என்ற இரு புறங்களிருக்கின்றன. எதிர்மறையாக, நாம்தாம் நிச்சயமானதும், கலப்பற்றதும், முற்ருனதும், முடிவானதுமான சத்தியத்தை உடையவர்களாயிருக்கிரேமென்று ஆக்ரமிப்புத் தொனிக்க உரிமை கொண்டாடுவதை விட்டொழிப்பதே அதன் பொருள். நிகழ்ச்சி முறையிலே, திறந்த மனத்துடனிருப்பதையும், புதிய கருத்துக்களே உணரும் சக்தி பெற்றிருப்பதையும், பிற மதங்களில் ஏற்றுக்கொள்வதற்குத் தகுதியானவை என்று கொள்ளப்பட்டிருக்கும் கருத்துக்களேயும் சித்தாந்தங்களேயும் அங்கீகரிப்பதன் மூலம் ஒரு மதக் கருத்தை விஸ்தரிக்கவும் வளரவும் செய்வதையும் அது குறிக்கிறது" என்று கூறினர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன். இந்த இருபுறக் கருத்துக்களில் இந்தியாவின் புராதனத் தாராளத் தன்மையை இக்கட்டுரை விளக்குகிறது. **வகுப்பு ஒற்றுமை** என்ற கட்டுரை நம் நாட்டில் வாழும் பல வகுப்பாரும், குறிப்பாக இந்துக்களும், முஸ்லிம்களும் எவ்வித வேறுபாடுமின்றி எல்லோருக்கும் பொதுவான ஒரே ஆட்சியின்கீழ் ஒரே தேசீய இனமாக வாழவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துகிறது. **சிறுபான்மையோர் பிரச்னே** நம் நாட்டிற்கு மாத்திரம் பிரத்தியேகமானதன்று. கோரமான யுத்தங்கள் தோன்று

வதற்குச் சிறுபான்மையோர் பிரச்னை காரணமாக இருந்திருக்கிறது. அத்தகைய சிறுபான்மையோருடைய உரிமைகளையும் கடமைகளையும் பற்றி ஆராய்கிறது ஏழாவது கட்டுரை. மேல்நாடுகளின் கருத்திலே ஜனநாயக யாத்திரையை இந்தியா இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறது. இதில் வெற்றிபெறுவதற்குப் பலமும் பொறுப்பும் வாய்ந்த எதிர்க் கட்சியொன்று என்ன செய்யமுடியுமென்பதை அடுத்த கட்டுரை கூறுகிறது. இந்த ஆண்டில் இந்தியாவின் குடியரசு அரசியல் திட்டத்தின்கீழ் பிரம்மாண்டமான அளவிலே முதன்முதலாகத் தேர்தல் நடக்கவிருக்கிறது. எதிர்க்கட்சி என்ற பெயருக்குத் தகுதியானதாக இன்று நம் நாட்டில் எந்தக் கட்சியுமில்லை. இந்த நிலை ஜனநாயக வளர்ச்சிக்கு உகந்ததாகாது. ஆசியாவின் அந்தஸ்து சர்வதேச அரங்கில் சிறிது சிறிதாக உயர்ந்து கொண்டே வருகிறது. ஆசியா தன் பலத்தையும், பொறுப்பையும் உணர ஆரம்பித்திருக்கிறது. இதற்குக் காரணம் ஆசிய நாடுகள் ஒவ்வொன்றும் அரசியல் அடிமைவாழ்விலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டு வருவதேயாகும். இந்த நிலைமையையும், இதனால் எழும் பிரச்னைகளையும், குறிப்பாகத் தற்காப்புப் பிரச்னையையும் பற்றி இந்நூலின் ஒன்பதாவது கட்டுரை ஆராய்கிறது. பத்தாவது கட்டுரை ஒரு உலகத்தை அடையும் முயற்சியையும் அதில் சர்வதேச சங்கத்தின் பங்கையும் பற்றிக் குறிப்பிடுகிறது. இடையே சர்வதேச சங்கமும், ஐக்கிய நாடுகளின் சங்கமும் ஒப்பிடப்படுகின்றன. அடுத்த கட்டுரையில் பொதுவாகக் கல்வியின் சிறப்பும் அவசியமும் எடுத்துக்காட்டப்படுவதுடன், நம் நாட்டின் அரசியல் திட்டப்படி வயது வந்தோர் அனைவருக்கும் வோட்டுரிமை வழங்கப்பட்டிருப்பதால், அவர்கள் அந்த உரிமையைப் பொறுப்புணர்ச்சியுடன் உபயோகிப்பதற்காக அவர்களுக்கு

அரசியல் அறிவு அளிப்பதன் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது. இந்நூலின் கடைசிக் கட்டுரை சரித்திரத்தின் பண்புகளை விஞ்ஞானத்தின் பண்புகளோடு ஒப்பிட்டு, விஞ்ஞானப்பான்மை சரித்திரத்தில் எந்த அளவில் அமைந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இக்கட்டுரைகளை எழுதும்போது பொதுவாக நான் இரண்டு நோக்கங்களை மனதில் கொண்டிருந்தேன். ஒன்று நடையைப் பற்றியது; மற்றது கருத்தைப் பற்றியது.

தமிழ் மொழியிலே எழுத்தளவிலாவது இரண்டு நடைகள் இன்று வழக்கிலிருப்பது யாவரும் அறிந்ததே. பிழையின்றியும் தனித்தும் இருக்கவேண்டுமென்பதற்காக, பெரும்பாலோருக்கு எளிதில் புரியாத விதமாக, அரிய சொற்களுடனும் இலக்கணப் பொருத்தத்துடனும் எழுதப் படுவது ஒரு நடை. எல்லோருக்கும் புரியவேண்டுமென்பதற்காக இலக்கண விதிகளைப் பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், ஒரு குறிப்பிட்ட சிறு வகுப்பாரிடையில் மாத்திரம் வழக்கிலிருக்கும் சொற்களையும் தாராளமாகக் கையாண்டு எழுதப்படுவது மற்றொரு நடை. இவ்விரண்டு நடைகளுமே மொழி வளர்ச்சிக்கும், வாசகர்களின் அறிவு வளர்ச்சிக்கும் உகந்ததாகா என்பது சிறிது சிந்திப்பவர்களுக்கும் தெற்றென விளங்கும். கல்வி அறிவு மிகக் குறைவாக வாய்க்கப் பெற்ற நம் மக்களிடையே, அறிவை எவ்வளவு துரிதமாகப் பரப்ப முடியுமோ அவ்வளவு துரிதமாகப் பரப்பவேண்டும்; அதே சமயத்தில் அந்த அறிவு திருத்தமானதாக விருக்கிறதா வென்பதையும் கவனித்துக் கொள்ளவேண்டும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால், முற்கூறப்பட்ட இரண்டு நடைகளுக்கும் இடையிலே அமைந்ததான மற்றொரு நடை தாராளமாகக் கையாளப்படவேண்டும். எளிமை, தெளிவு, திருத்தம் ஆகிய மூன்றும் சேர்ந்தாற் போல அந்நடையின் பண்புகளாக இருக்கவேண்டும். இந்த

அடிப்படையின்மேலேயே என்னுடைய நடையை அமைத்துக்கொள்ள நான் முயன்றிருக்கிறேன். அந்த முயற்சியின் பலனை அளவிடும் பொறுப்பை வாசகர்களுக்கு விட்டுவிடுகிறேன்.

கருத்தளவிலும் இப்படியே. கேட்பவர்கள் எதை ரசிப்பார்கள், படிப்பவர்களுக்கு எது பிடிக்குமென்பதே பேச்சுக்கும் எழுத்திற்கும் பொருள் அளவில் அளவுகோலாக இருக்கிறது. அவர்களுக்கு எது தேவை, எது உகந்தது என்று சிந்தித்துப் பார்த்து அவைகளைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் மிகமிக அரிதாகிவிட்டன. அவ்வாறுகப் பேசவும் எழுதவும் துணிபவர்களும் தங்கள் கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்துவதில் அவ்வளவாக வெற்றிபெறுவதில்லை. அதற்குக் காரணம், கேட்பவர்களுடையவும் வாசிப்பவர்களுடையுவுமான மனோ நிலையையும், அறிவு நிலையையும் கவனத்தில்கொண்டு பேசாததும் எழுதாததுமே யாகும். இவை இரண்டையும் கவனத்திலிருத்தி, அவர்களுக்குப் பிடித்ததையும் தெரிந்ததையும் முதலில் எடுத்துக்காட்டி, அவற்றின் அடிப்படையின்மேல் படிப்படியாகப் புதிய கருத்துக்களைத் தர்க்கரீதியில் எடுத்துவிளக்கிக் கொண்டுபோனால் எதிரிலிருப்பவர்களின் கவனத்தையும் அறிவையும் ஒன்றுகக் கவரமுடியும். இந்தப் பொது முடிவை மனதிலிருத்திக்கொண்டு இக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றேன். இதிலும் என் முயற்சியின் பலனை அளவிடுவது வாசகர்களின் பொறுப்பாகும்.

மக்களிடையே பொது அறிவை வளர்க்கவேண்டும்; அவர்களிடையே சிந்திக்கும் பழக்கத்தை உண்டுபண்ணவேண்டும்; அப்போதுதான் நம்முடைய புதிய அரசியல் அந்தஸ்தை உணர்ந்து அநுபவிக்கவும், அதிலிருந்து பிறந்த பொறுப்புக்களை அறிந்து நிறைவேற்றவும் முடியும்; இந்தக் காரியத்தைச் செய்வது இந்த நாட்டிலே வாழும் படித்த

வர்கள் ஒவ்வொருவருக்கும் தவிர்க்கமுடியாத கடமையாகுமென்பது என்னுடைய தாழ்மையான எண்ணம். அந்த எண்ணத்தின் விளைவே இம்முயற்சி. இந்த நூல் அறிவின் எத்தரத்திலுமுள்ள மக்களுக்கும் பயன்படுமென்று கருதுகிறேன். தமிழகம் இம்முயற்சிக்கு ஆசி கூறுமாக.

இந்நூலை வெளியிடும் வேலையில் ஆதிமுதல் என்னை ஊக்கியும், அச்சாகும் காலத்தில் ஒப்புநோக்கியும் உதவிய பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுக்கும் சென்னை தமிழ்ப் புத்தகாலய நண்பராகிய திரு. ஆர். எம். ஷண்முகம் அவர்களுக்கும் என் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

கண்ணின் ஒளியையும் இழந்துவிட்டுப் படுக்கையோடு இருந்த நிலையிலும், இந்நூல் முழுவதையும் படிக்கக் கேட்டு, இதற்குப் பரிவுடன் சிறப்புரை கூறி உதவிய தமிழ்ப் பெருந் தலைவர் திரு. வி. க. அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

இறுதியாக, அகில இந்திய ரேடியோ நிலையத்தாருக்கும், ''குமரி மலர்'', ''கலை மலர்'', ''பாரிஜாதம்'' ஆகிய பத்திரிகைகளின் அதிபர்களுக்கும், ஆக்கூர் உயர் நிலைப்பள்ளி அதிகாரிகளுக்கும் என் நன்றி.

மயிலாப்பூர்,
சென்னை
28-2-1951

மு. மு. இஸ்மாயில்

# பொருளடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மகாத்மா காந்தி | ... | 1 |
| 2. | மனிதனுக்குரிய திட்டம் | ... | 8 |
| 3. | ஸ்திர சமூகம் | ... | 30 |
| 4. | பசு | ... | 42 |
| 5. | இந்தியரின் தாராள மனப்பான்மை | ... | 51 |
| 6. | வகுப்பு ஒற்றுமை | ... | 60 |
| 7. | சிறுபான்மையோர் பிரச்னை | ... | 72 |
| 8. | ஜனநாயகம் ஓங்க—இடித்துக்காட்டும் எதிர்க்கட்சி | ... | 84 |
| 9. | ஆசியப் பிரச்சனைகள் | ... | 96 |
| 10. | ஒரு உலகம்—சர்வதேச சங்கம் | ... | 109 |
| 11. | முதல் வேலை—கல்வி | ... | 120 |
| 12. | சரித்திரத்தின் விஞ்ஞானப் பான்மை | ... | 126 |

# உலகப் போக்கு

## 1. மகாத்மா காந்தி

மகாத்மா காந்தியின் 78-வது பிறந்த தினம் இம் மாதம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. உலகின் பல பாகங்களிலுமுள்ள இந்தியர்கள் புதிய இந்தியாவின் பிதா பல்லாண்டு வாழவேண்டுமென்று பெருமையுடனும் பக்தி யுடனும் பிரார்த்தித்தார்கள். மனித வாழ்க்கை மதிப் புடனும் கண்ணியத்துடனும் விளங்க வேண்டுமென்று விரும்பும் மக்கள் அத்தகைய வாழ்க்கைக்கு அடிகோலி, வழிகாட்டிய மகான் நிரந்தரமாக நிலைபெற்றிருக்க வேண்டுமென்று உருக்கத்துடன் வேண்டிக் கொண் டார்கள். குருடர்களாகப் பள்ளத்தில் வீழ்ந்து கிடந்த உயிர்ப் பிணங்களை மனிதர்களாக்கிய 'எம்மான்' என்று எண்ணற்றோர் தங்கள் நன்றியைக் காட்டிக் கொண்டார்கள். குத்துயிராய்க் கிடந்த கோடிக் கணக் கான இந்தியர்களுக்குப் புத்துயிர் அளித்த மருத்துவன் என்று திக்கு நோக்கித் தண்டமிட்டோர் எத்துணையோ பேர். புத்தருக்குப்பின் அன்பு மதத்தை அமுல் நடத்திய

இக்கட்டுரை புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'கலைமலர்' என்ற மாத சஞ்சிகையின் 1946-ம் ஆண்டு அக்டோபர் மாத இதழில் வெளியாயிற்று. இக்கட்டுரை வெளியான காலத்தில் இந்தியா விடுதலையடையவில்லை. மகாத்மாவும் இம்மண்ணுலகிலிருந்து மறைந்து விடவில்லை.

ஐயன் என்று ஆணையிட்டோர் அநேகர். கிறிஸ்து மகானின் இன்றைய உண்மையான உயிர்ப்பிரதிநிதி காந்தியே என்று அறுதியிட்ட கிறிஸ்தவர்கள் பலர். ஹிந்து மதத்தின் சாரமே காந்தி உருவாகப் பிறந்திருக்கிற தென்று கொண்டோர் கோடிக்கணக்கான பேர். இன்று உலகில் வாழும் உண்மையான முஸ்லிம்களில் காந்தியும் ஒருவர் என்று ஒரு சில முஸ்லிம்கள் தங்கள் மனத்துக் குள்ளாயினும் எண்ணி இருக்கக்கூடும்.

இத்தகைய இணையும் எல்லையுமற்ற புகழ்ச்சிக்கும், வாழ்த்துக்கும், நன்றிக்கும் காந்தி எப்படி உரியவரானார்? மனித வர்க்கம் செயலற்ற நிலையிலிருந்தபோது, அதன் கடமையை அதற்கு அவர் எடுத்துக் காட்டினார்; அதன் பாதையை அதற்குச் சுட்டிக் காட்டியதோடன்றி அதில் தாம் நடந்தும் காட்டினார். அறிவுக்கும் ஆசைக்கும் இடையே உண்டான முரண்பாட்டிலே மக்கள் அறிவைக் கைவிட்டு விட்டார்கள்; சத்தியத்துக்கும் சந்தர்ப்பத்துக்குமிடையே தோன்றிய மோதலிலே மக்கள் சத்தியத்தைக் கைவிட்டு விட்டார்கள்; அன்புக்கும் கோபத்துக்கு மிடையே தோன்றிய போராட்டத்தில் மக்கள் அன்பைக் கைவிட்டு விட்டார்கள். இந்த நிலையில் "மனிதர் உணவை மனிதர் பறிப்பதும்", "மனிதர் நோக மனிதர் பார்ப்பதும்" சாதாரண நிகழ்ச்சிகளாயின; வறுமையும் நோயும், உயர்வும் தாழ்வும், மேலும் கீழும் வாழ்க்கையின் விதிகளாயின; சுருங்கச் சொன்னால், மனித வாழ்க்கை மனித தர்மத்துக்கு நேர்மாறாக இருந்தது; நாகரிகமென்ற வார்த்தையின் பொருளே உருமாறிப் போயிருந்தது. இந்த நிலையை மாற்றத்தான் காந்திஜி முயன்றார்; தம் முயற்சியில் வெற்றியும் பெற்றார். இதுதான் காந்திஜியின் ஒப்புயர்வற்ற உன்னதத்துக்குக் காரணம்.

தம்முடைய நோக்கம் நிறைவேறுவதாக இருந்தால்,

அதற்காக எந்த முறையை வேண்டுமானாலும் கையாள லாம் என்பவர்களின் இனத்தைச் சேர்ந்தவரல்ல காந்தி. முறைவழிதான் முடிவும். அழுக்குத்துணி கொண்டு அழுக்கைத் துடைக்க முடியாது; அழுக்குத் தண்ணீரினால் அழுக்கைக் கழுவ முடியாது; அன்பை நிலைநாட்டுவதற்கு அன்பைத்தான் கையாள வேண்டும்; மறத்தை ஒழிப்பதற்கு அறவழிதான் ராஜபாதை; சத்தியத்தை அடைவதற்கு அசத்தியம் ஆயுதமாகாது. இதைச் சொல்வதும் உணர்வதும் சுலபம்; ஆனால் அதன்படி நடப்பது கடினம். ஏனெனில், இன்றைய வாழ்க்கை சிக்கலானது; வாழ்க்கையில் தோன்றும் பிரச்னைகள் எளிதாக முடிவு காணக் கூடியவையல்ல. எனவே, சந்தர்ப்பத்துக்கேற்பத் தன் போக்கையும், நிலையையும் மாற்றிக்கொள்வதைச் சுலபமானதாகவும், லாபமானதாகவும், சௌகரியமான தாகவும் மனிதன் காண்கிறான். லக்ஷியப்பாதை கரடு முரடான முள் நிறைந்த பாதையாகத் தோன்றுகிறது. ஆகையால், லக்ஷியத்தைப் பற்றியோ, கொள்கைகளைப் பற்றியோ கொஞ்சமும் கவலைப்படாமல் சுலபமானதும், இன்பமானதுமாக எது தோன்றுகிறதோ, அத்தகைய வாழ்க்கையையே மனிதர்கள் நடத்தி வந்தார்கள். ஆனால் இத்தகைய வாழ்க்கையின் அடிப்படையின் மேல் உலகில் சமாதானமும், அமைதியும் நிலவ முடியாது: ஏனெனில், ஒருவனோ, ஒரு நாடோ தனக்கு நல்லது என்று கருதுவது மற்றொருவனோ, மற்றொரு நாடோ தனக்கு நல்லது என்று கருதுவதற்கு முற்றிலும் முரணாக இருக்கக்கூடும். இந்த நிலையில் வேற்றுமையும், விரோதமும், ஆத்திரமும் உண்டாவதற்குச் சாதகம் ஏற்படுகிறது. அதற்கு மாறாக, ஒருவனுக்கு நல்லது எது—தனக்கு நல்லது எது, தன் நாட்டுக்கு நல்லது எது—என்பதை லக்ஷியமாகக் கொள்ளாமல், உலகத்துக்கு நல்லது எது—மனிதவர்க்கத்

துக்கு நல்லது எது—என்பதை லக்ஷியமாகக் கொண்டு பிற யாவற்றையும் அதற்கு உடன்படுத்தும்போது ஜக முழுவதிலும் சாந்தி அமைகிறது; அமைதி நிலவுகிறது; ஒற்றுமை ஓங்குகிறது. இத்தகைய லக்ஷிய வாழ்க்கையை அநுபவத்தில் காட்டியதுதான் காந்தியின் மகாத்மியம்; அதுதான் உலக சரித்திரத்தில் அவர் இன்று வகிக்கிற, என்றும் வகிக்கப்போகிற உன்னத ஸ்தானத்துக்குக் காரணம். இந்த லக்ஷியத்திலிருந்துதான் அவருடைய அஹிம்சை பிறந்தது; அவருடைய பொதுவுடைமை பிறந்தது.

மகாத்மா காந்தியின் வாழ்க்கைப் பணியை இரண்டு பிரிவுகளாகக் காணலாம்: (1) அடிமையில் ஆழ்ந்து கிடந்த இந்தியாவுக்குச் சுதந்திரம் தேடியது; (2) ஒரு புதிய சமுதாயத்தையும், நாகரிகத்தையும் உலகில் சிருஷ்டிக்க முயன்றது. இரண்டாவது நோக்கம் நிறைவேற வேண்டுமானுல், உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் சுதந்திர மாக இருக்கவேண்டும். அதன்படி இந்தியாவும் சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும். எனவே முதல் முயற்சி இரண் டாவது பெரு முயற்சியின் பகுதியாக ஆகி விடுகிறது. ஆனுல் இந்த முயற்சிகளில் காந்தி கையாண்ட முறைகள் தாம் புதியவை. பொய்யும், வஞ்சனையும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவதுமே ராஜதந்திரத்தின் சின்னங்களாக இதுவரையில் கருதப்பட்டு வந்தன: இல்லை, உண்மையே ராஜதந்திரத்தின் சிகரமென்று காந்தி மெய்ப்படுத்திஞர். மற்ருெருவனை அடித்து, வதைத்து இரத்தத்தைப் பெருக்கி அவன் உயிரைப் போக்குவதுதான் வீரமென்றும், விடுதலைப் போரென்றும் உலகம் இதுவரை கருதிக்கொண்டிருந்தது; இல்லை, கொல்லாமல் தனக்கு எதிரி இழைக்கும் கேடுகளை மனக்கசப்பின்றிப் புன்முறுவ லுடன் ஏற்றுக்கொள்வதுதான் வீரத்தின் உச்சம் என்று

காந்தி நிரூபித்துக் காண்பித்தார். இவை சரித்திரத்தில் காணுத புதுமை; ஆனால் நம் கண் முன்னே நடக்கும் உண்மை.

காந்திஜி தம் மேதையை மற்ரெரு முறையிலும் காண்பித்திருக்கிருர். அவருடைய சுயராஜ்யம் வெறுமனே வெள்ளைக்காரரை இந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து நீக்குவதல்ல: வெள்ளைக்கார ஆட்சி முறையின் அடிப் படையை மாற்றுவதே அவருடைய சுயராஜ்யம். பழையதை அழித்துவிட்டுப் புதியதை அதனிடத்தில் அமைப்பதல்ல அவருடைய சுயராஜ்யம்; புதியதொன்றை அமைப்பதின் மூலம் பழையதின் போக்கை மாற்ற வேண்டும்; ஆக்கமும் அழிப்பும் ஒருங்கே நடைபெற வேண்டும்; புதிய சுதந்திர இந்தியாவை நம் பலங்கொண்டு சிருஷ்டிப்பதின் மூலம் அடிமை இந்தியாவின் அமைப்பு அடியோடு மாறிப்போகச் செய்வதுதான் காந்திஜியின் முயற்சி. காந்தீயத்தின் அடிப்படை சிருஷ்டியேயன்றி சிதைவல்ல. வெள்ளைக்காரரை இந்நாட்டிலிருந்து விரட்டு வதால் சுயராஜ்யம் வந்துவிடாது. நிர்மாணத் திட்டத்தைக் காரியத்தில் நிறைவேற்றுவதுதான் சுயராஜ்யம் அடைவ தாகும். நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றினேமானல், வெள்ளைக்காரர்களுக்கு இந்நாட்டை ஆளுவதுக்கு அடிப் படையான காரணங்கள் மறைந்து விடுகின்றன; வெள்ளை யாட்சி தானே வெளியேறி விடுகிறது; அதற்காகத் தனி முயற்சி செய்யவேண்டிய அவசியமில்லை.

காந்தி செய்த மகத்தான புரட்சி வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களையும் ஒருமைப்படுத்தி அவைகளுக்கு ஒரு பொதுவான அடிப்படையை அளித்ததாகும். ஒழுக்க நியதிப்படி, தார்மிக முறைப்படி எது நியாயமற்றதோ அது அரசியலிலும் நியாயமற்றதே; தனிவாழ்க்கையில் எது சிறந்ததோ அது பொதுவாழ்விலும் சிறந்தது;

பரிசுத்தம் உள்ளுக்கும் புறத்துக்கும் பொதுவானது. மதமும் அரசியலும் ஒரே பிரச்னையைத்தான் தீர்க்கப் பார்க்கின்றன. பிறருடன் சம்பந்தப்படுகிற வாழ்க்கையிலே நாம் அனுஷ்டிக்கிற மதம்தான் அரசியல்; ஏதோ அரசியல் என்பது மதத்தினின்றும் புறம்பானதன்று. மனித உறவிலே ஒரு புதிய நிதானத்தையும், நியாயத்தையும், அளவு—அடிப்படையையும் உண்டுபண்ண வேண்டும். ஒருவனின் தரமும் தன்மையும் அவனுடைய செல்வத்தையோ, உடைமையையோ, பிறப்பையோ, சமயத்தையோ பொறுத்திருக்கவில்லை; அவனுடைய அந்தரங்க சுத்தியையும், நியாய உணர்ச்சியையும், நாணயத்தையும், கடமை யுணர்ச்சியையுமே அவை சார்ந்திருக்கின்றன. இப்புதிய வாழ்க்கையைப் போதித்ததோடல்லாமல் தாமே நடத்திக் காட்டியதுதான் காந்தி நிகழ்த்திய அற்புதம். இதுதான் உலகம் இதுவரையில் கண்டுள்ள புரட்சிகளிலெல்லாம் மகத்தானது. ஒருவன் உயிரைப் போக்குவதைவிட அவன் உள்ளத்தைப் பக்குவப்படுத்துவது அதிகப் புரட்சிகர மானது. இருப்பதை அழித்துவிட்டுப் புதிதாக மற்றொன்றை உண்டாக்க முயல்வதைவிட சிருஷ்டிக்கப்பட்டிருப்பதையே புதியதாக மாற்ற முயல்வது அதிகப் புரட்சிகரமானது. இதுவே காந்தீய சமுதாயத்தின் அஹிம்சை அடிப்படை. இதுவே சமய அடிப்படை; பொதுவுடைமை அடிப்படையும் கூட.

காந்தி, இந்தியாவில் நிகழ்த்திய புதுமையை உலகிலும் வெற்றிகரமாக நிகழச்செய்வது காந்தியுகத்தில் வாழும் இந்தியர்களின் பெருமையும் கடமையுமாகும். மேல் நாட்டு நாகரிகம் நிலைபெற்றிருக்க முடியாதென்பதை சமீபகால சம்பவங்கள் நிரூபித்துவிட்டன. ஆகையால், உலகை ஆத்மிக அடிப்படையின்மேல் அமைப்பதற்கு இது ஒரு சிறந்த தருணம். இதைப் பயன்படுத்திக் கொள்ள

இந்தியர்கள் முன்வரவேண்டும். அஹிம்சையின் மூலம் இன்று அநேகமாக அடைந்துவிட்ட இந்தியாவின் சுதந்திரத்தை அஹிம்சையின் மூலமே காப்போம் என்று நாம் உறுதி செய்துகொள்ள வேண்டும். சர்வதேசச் சிக்கல்களையும் பூசல்களையும் அஹிம்சையின் மூலம் தீர்க்க முடியுமென்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். பழத்துக்கு முன்னால் புஷ்பம் தோன்றுவதே போல், நடத்தைக்கு முன்னால் நம்பிக்கை உதயமாகவேண்டும். இன்று உலகில் வாழ்பவர்களில் காந்திதான் சத்தியத்தின் சாட்சி; சாந்தியின் குரல்; சமாதானத்தின் எதிர்காலம். உலகம் உய்ய வேண்டுமானால், மக்களின் உள்ளத்தில் காந்தீயம் இடம்பெறவேண்டும். இந்த மகத்தான பொறுப்பிலே இந்தியர்களின் பங்கு மிகப் பெரிது.

## 2. மனிதனுக்குரிய திட்டம்

யுத்தத்திஞல் சிதைவுண்டும் சீர் கெட்டும் போன தங்கள் தேசீய வாழ்வைத் திருத்தி அமைப்பதில் உலக நாடுகள் இன்று ஈடுபட்டிருக்கின்றன. ஆஞல் இந்தியாவின் தேசீய வாழ்வோ, இனிமேல் தான் முதல் முதலாக நிர்மாணிக்கப்படவேண்டும். இருநூறு ஆண்டுகளாகத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொண்டிருந்த நிலத்தை விட்டு இன்று ஆங்கிலேயர் வெளியேறப் போகிருர்கள்.* அந்த நிலத்தின் மேல் இனி இந்தியர் தம் சுயராஜ்ய மாளிகையைக் கட்டவேண்டும். அந்த மாளிகையின் நிர்மாணம் எப்படி இருக்கவேண்டும் என்பது இன்று நம்முடைய பிரதானமான பூர்வாங்கப் பிரச்னே. நியூயார்க் நகரில் ஆகாயத்தை யளாவி 60 மாடிகளுடன் நிற்கும் கட்டடங்களேப் போல நம்முடைய சுதந்திர மாளிகை நிற்கப் போகிறதா, அல்லது விஸ்தாரமான பிரதேசத்தில் விசாலமான பகுதிகளேக் கொண்டு பரந்து விளங்கும் மாளிகையாக அமையப்போகிறதா என்பது உடனே முடிவு செய்ய வேண்டிய விஷயம். உயர்ந்து நிற்கும் கட்டடத்தின் கனம் முழுதும் ஒரு குறுகிய அஸ்திவாரத்தின் மேல் விழுவதஞல் அக்கட்டடம் அவ்வளவு ஸ்திரமாக, பலம் பொருந்தியதாக, இருப்பதில்லே. அடிக்கடி அதிகக் கவனத்துடன் பழுது பார்க்காவிட்டால், கட்டடத்தில் ஏதாவதொரு பகுதியில் உண்டாகும் குறை, கட்டடம் முழுவதையுமே அபாயத்துக் குள்ளாக்கிவிடும். அதற்கு நேர்மாருக, இரண்டாவது மாதிரியான கட்டடத்தில் அதன் முழுக்கனமும் விஸ்

* இக்கட்டுரை "குமரி மலரி"ன் 1947-ம் ஆண்டு ஜனவரி மாத இதழில் பிரசுரமாயிற்று.

தாரமான அஸ்திவாரத்தின் மேல் பகிர்ந்து நிற்கிறது. அதனால் கட்டடம் அதிக ஸ்திரமாகவும், நீண்ட நாளைக்கும் வாழ்கிறது. அம்மாதிரிக் கட்டடத்தில் ஏதாவதொரு பகுதியில் உண்டாகும் பழுது பிறபகுதிகளைப் பாதிப்பதில்லை. அந்தப் பழுதை அப்படியே சீர்ப்படுத்தி விடலாம். நம் அரசியல் சுதந்திர மாளிகையும் அப்படித்தான். சமூகத்தின் அதிகாரம் பரந்து அதன் எல்லாப் பகுதிகளுக்கும் செல்லாமல் ஒரே மத்திய பாகத்தில் மாத்திரம் தேங்கியிருக்குமானால் அந்தச் சமுதாய அமைப்பு அடிக்கடி ஆட்டங்கண்டு போகும். நிரந்தரமாக, சமாதானத்துடனும், சுபிட்சத்துடனும் ஒரு சமூகம் வாழ வேண்டுமானால், அந்தச் சமூகத்துக்குள்ள உண்மையான அதிகாரத்தில் அதன் எல்லாத் தனி நபர்களுக்கும் பங்கிருக்கும்படியாக அதன் சமுதாய அமைப்பு நிர்ணயிக்கப் படவேண்டும். அரசியல், பொருளாதாரம், சமூகம் என்ற முத்துறைகளிலும் ஜனநாயகக் கொள்கை அடிப்படையான இடம் பெறுவதே, இதை அடைவதற்கான வழி. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்கே விசேஷமான பண்புகளும், சக்திகளும் பரிபூரணமாக வளர்ந்து வெளிப்படுவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களைத் தாராளமாகவும் தங்கு தடையின்றியும் அளிப்பதே ஜனநாயகக் கொள்கையின் அடிப்படை நியமம்.

வருங்காலச் சுதந்திர இந்தியாவின் சமுதாய அமைப்பு இந்நாட்டு மக்கள் கொண்டுள்ள லக்ஷியங்களுக்கும், இந்நாட்டிலே இன்று நிலவும் சாதனங்களுக்கும் பொருத்தமாக இருக்கவேண்டும். லக்ஷியங்களை விட்டு, கிடைக்கும் சாதனங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிறுவப்படும் எந்த அமைப்பைக் கொண்டும் முன்னேற்றத்துக்கு வழிகோல முடியாது. அந்த அமைப்புக்குட்பட்ட மக்கள் செக்கு மாட்டைப் போலச் செக்கையே சுற்றிச்

சுற்றி வந்து கொண்டிருக்க வேண்டும். அம்மாதிரியே, இருக்கும் சாதனங்களை விட்டு லக்ஷியங்களை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும் எந்த அமைப்பும் பூரணமாக வளரமுடியாது; இருக்கும் சக்திகள் சந்தர்ப்பமற்றுப்போகும்; புதிய சக்திகள் பிறந்து பலனற்று மடியும்; குழப்பமே எங்கும் குடிகொள்ளும். ஆகையால், நம் நாடு சம்பந்தப் பட்டவரையில், நம் லக்ஷியங்கள் யாவை? நாம் பெற்றிருக்கும் சாதனங்கள் யாவை? இவை இரண்டுக்கும் பொருத்தமாக நாம் நிர்மாணிக்கப் போகும் சுதந்திர மாளிகை எப்படி இருக்கவேண்டும் என்பதைக் கவனிப்போம்.

உலகத்தின் வேறு நாடுகளின் வியவகாரங்களிலிருந்து இந்தியா தனித்து நிற்க முடியாது. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியினால் தேசீய வரம்புகள் மறைந்து கொண்டே இருக்கின்றன. உலகின் ஏதாவதொரு மூலையில் நடக்கும் சிறியதொரு சம்பவம் உலகம் முழுவதையுமே பாதிக்கிறது. எனவே, நம்முடைய லக்ஷியங்கள் எவை என்பதைப் பற்றிச் சிந்திக்கும்போது இந்த உண்மையை அடிப்படையாக வைத்துக்கொள்ளவேண்டும். ஆகையால், சர்வதேச கட்டத்தில் நம்முடைய லக்ஷியங்கள் பொதுவாக இரண்டு என்று கூறலாம். முதலாவதாக, உலகில் எந்தப் பாகத்திலுமே, எந்த விதமான ஏகாதிபத்தியமும் எந்த அளவிலும் தலைகாட்டக் கூடாது. எல்லா நாட்டு மக்களும் தங்கள் வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் தாங்களே நிர்ணயித்துக் கொள்வதற்கு வேண்டிய உரிமையும், அதிகாரமும் பெற்றவர்களாக இருக்க வேண்டும். ஏதாவதொரு நாடு மற்றொரு நாட்டின் ஏகாதிபத்தியத்துக்கு அடிமையாக இருக்குமானால், இந்தத் தொத்து வியாதி உலக முழுவதையும் பிடித்துக்கொள்வது திண்ணம். அமைதி குலையும்; அராஜகம் ஆளும். இரண்

டாவதாக, சர்வ தேசப் பிரச்னைகள் ஆயுதத்தினுல் தான் தீர்க்கப்பட முடியும் என்ற எண்ணம் ஒழியவேண்டும். சுதந்திர நாடுகளுக் கிடையே எழும் பிரச்னைகள், ஒரு கட்சியார் மற்ருெரு கட்சியாரின் மேல் ஆதிக்க வெறி கொண்டிராவிட்டால், வெகு சுலபமாகத் தீர்ந்து விடும். இதற்கு அடிப்படை, நாம் நம் இச்சைப்படி வாழ விரும்பு வதைப்போல், பிறரையும் அவர்கள் இச்சைப்படி வாழ விடுவது. இருவருடைய உறவிலும் பகைமையும் சந்தேக மும் இடம் பெற்றிருப்பதற்குப் பதிலாக அன்பும் நம்பிக்கை யும் இடம் பெற்றிருக்க வேண்டும். எல்லோருக்கும் நன்மை பயக்கும் இந்த நிலையைச் சர்வதேச கட்டத்தில் நாம் உண்டாக்க விரும்புகிருேம்.

மேற் கூறப்பட்ட லக்ஷியங்களுக்கு இணக்கமாகவே உள்நாட்டுக் கட்டத்தில் நம் லக்ஷியங்கள் இருக்கவேண் டும். இவற்றைப் பொதுவாக மூன்ருய்ப் பிரிக்கலாம். ஒன்று, நாட்டில் வாழும் ஒவ்வொருவனும் தன்னுடைய தேவை களைத் தானே தெரிந்துகொள்ளக்கூடியவனுக இருக்க வேண்டும். அவனுடைய உரிமைகளை அவனுக்கு எடுத்துக் கூறுவதற்கு ஒரு வக்கீலின் அவசியம் இருக்கக்கூடாது; ஆரோக்கியத்தை உண்டுபண்ணும் உணவு எப்படி அமைந் திருக்கவேண்டும் என்பதை அவனுக்கு விளக்கிக் கூறு வதற்கு ஒரு வைத்தியரின் அவசியம் இருக்கக்கூடாது. அவனுடைய கடமைகளை வற்புறுத்துவதற்குத் தண்டனை பயத்தை அடிப்படையாகக் கொண்ட வெளி அதிகாரத்தின் அவசியம் இருக்கக்கூடாது. அவனுக்கும் அவன் சமூகத் துக்கும் எது நல்லது என்பதை அவனே அறிந்தவனுக இருக்கவேண்டும். இரண்டு, தன் உழைப்பினுல், சம உழைப்பினுல் மற்ருெருவன் பெறுவதைவிட அதிகமாகப் பெறும் நிலையில் எவனும் இருக்கக் கூடாது. ஒவ்வொருவ னுடைய தேவையும் பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட

வேண்டும். ஆனால், அவன் தேவைக்கும் சக்திக்கும் ஏற்ப அவன் உழைக்கத் தயாராக இருக்க வேண்டும். மூன்று, தனி மனிதன் தான் அரசாங்கத்தின் அடிப்படையான அங்கம். அவனுடைய மதமும், வகுப்பும், சாதியும், அரசாங்கத்துக்கும் அவனுக்கு மிடையிலுள்ள உறவு சம்பந்தப் பட்டவரையில் அணுவும் இடம்பெறக் கூடா. அவனுடைய அறிவும், திறமையும், சக்தியுமே அரசாங்கத்தின் அளவுகோலாக வேண்டுமே யன்றி, அவனுடைய ஜாதியும், நிறமும், வர்க்கமும் ஆகலாகா. அரசாங்கத்தின் அடிப்படை அவனே. அவனுடைய மதமன்று; அவனுடைய ஜாதியன்று; அவனுடைய கட்சியுமன்று.

மேற் கூறப்பட்டவைகள் தாம் ஒவ்வொரு நாட்டின் லக்ஷியமாக இருக்கவேண்டு மென்பதைப் பற்றிச் சிறிதும் சந்தேகமில்லை. உலக நாடுகள் பலவற்றிலுமுள்ள மக்களின் இன்றைய வாழ்க்கை இதனைப் பெரிதும் வலியுறுத்துகிறது. ஆனால், இந்த லக்ஷியங்கள் அந்தந்த நாட்டில் அமைந்திருக்கும் சாதனங்களுடன் பிணைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த லக்ஷியங்களை அடைவது சாத்தியமாகும். நம் நாட்டில் நமக்கிருக்கும் சாதனங்கள் யாவை? ஒன்று, நம் நாட்டின் கிராமப் பொதுவுடைமை மரபு. இந்தியாவில் ஆதிகாலந் தொட்டு ஒவ்வொரு கிராமமும் ஒரு சிறிய குடியரசாக இருந்தது. கூட்டுறவு அடிப்படையில் விவசாயம் நடந்தது. கிராம நிர்வாகத்தின் சகல அம்சங்களையும் கிராம வாசிகள் சுயேச்சையாகத் தாங்களே கவனித்துக் கொண்டார்கள். பண்டமாற்று அடிப்படையில் அவைகளின் உறவு அமைந்திருந்தது. வெளியே நிகழ்ந்த ஆட்சி மாறுதல்கள் அவர்களுடைய அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கவில்லை. இது மிகப் பழமை வாய்ந்தது; பலம் பொருந்தியது. சர் ஹென்றி மெய்ன் (Sir Henry Maine), கார்ல் மார்க்ஸ் (Karl Marx),

சர் சார்லஸ் மெட்கால்ப் (Sir Charles Matcalfe) முதலியவர்கள் இதை உறுதிப்படுத்துகிறார்கள். "ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பள்ளிக்கூடம் உண்டு. அதற்கு நிலம் மான்யமாக இருந்தது. அந்தக் கிராம நிர்வாகத்தின் எல்லாப் பகுதிகளிலும் அதனுடைய உத்தியோகஸ்தர்களே இருந்தார்கள். இப்படியாக ஒவ்வொரு கிராமமும் ஒரு ஜன நாயக அங்கமாக விளங்கிற்று" என்று ஜே. மத்தாய் (J. Mathai) "பிரிட்டிஷ் இந்தியாவில் கிராம அரசாங்கம்" (Village Government in British India) என்ற தம்முடைய நூலில் கூறுகிறார். இரண்டு, நம் நாட்டிலே மனிதச் செல்வம் செறிந்து கிடக்கிறது. திறமையும் அறிவும் மிகவுள்ள கோடிக்கணக்கான மக்கள் உழைப்பதற்கு வசதியும், வழியுமின்றித் தங்கள் சக்தியை விரயமாக்குகிறார்கள்; ஒழுக்கங்கெட்டுப்போகிறார்கள்; சோம்பேறிகளாகத் திரிகிறார்கள்; பட்டினி கிடக்கிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்து நிற்கிறது. மூன்று, நாட்டின் பெரும்பான்மையோரின் வறுமையின் காரணமாக நாணய வடிவில் நம் நாட்டில் மூலதனம் அதிகமாக இல்லை. ஆனால், இயற்கையின் கொடையோ அளவற்றது. முதன்மையான தேசமொன்றுக்கு வேண்டிய யாவும் இங்கே கிடைக்கும். ஆனால் அவை ஒரு பெட்டிக்குள் வைத்துப் பூட்டப்பட்டிருப்பது போன்றிருக்கின்றன. சரியாக வகுக்கப் பட்டதொரு திட்டத்தின் அடிப்படையில் நடக்கும் கட்டுப்பாட்டுக்குட்பட்ட உழைப்புத்தான் அப்பெட்டியின் சாவி.

இனி, "மேலே கூறப்பட்ட லக்ஷியங்களை இன்றைய உலகின் பல நாடுகளிலும் நிலவும் சமுதாய அடிப்படைகளின் மூலமாக அடையமுடியுமா?" என்பதைப் பார்ப்போம். இங்கிலாந்து, அமெரிக்கா, சோவியத் ருஷ்யா ஆகிய மூன்று நாடுகளின் அமைப்பை ஆராய்வதே

இங்குப் போதுமானதாகும். இங்கிலாந்தில் அரசியலில் ஜனநாயகம் நிலவுகிறது; (இந்த ஜனநாயகம் ஆங்கில நாட்டுக்கு மாத்திரம்தான்; அதன் ஆதிபத்தியத்துக்குக் கீழுள்ள நாடுகளுக்கன்று.) ஆனல் சமூக வாழ்விலும், பொருளாதார வாழ்விலும் அங்கு ஜனநாயகமில்லை. பிரபுக்கள் வம்சம் தன் அந்தஸ்தையும் செல்வாக்கையும் இழந்துவிடவில்லை; முதலாளிகள் இன்னும் தங்கள் அதிகாரத்தை விட்டுவிடவில்லை. இந்நிலைமையை மாற்ற பெவரிட்ஜ் திட்டம் (Beveridge Plan) அந்நாட்டார்களுடைய பொருளாதார வாழ்க்கையில் ஒரு மாறுதலைச் செய்ய முயன்றது. ஆனல் அம்மாறுதலின் மூலம் உண்மையான ஜனநாயகம் உண்டாகிவிடாது. பணக்காரர்களிடமிருந்தும், முதலாளிகளிட மிருந்தும் வரியாக வசூலிக்கும் பணத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கவே பார்த்தது அது. இன்று அதிகாரத்திலிருக்கும் தொழிற்கட்சிச் சர்க்கார், இன்னொரு மாறுதலை உண்டு பண்ணப் பார்க்கிறது. முக்கியமான தொழிற்சாலைகளையும், சுரங்கங்களையும், பாங்கிகளையும் தேசீயமயமாக்க அந்தச் சர்க்கார் விரும்புகிறது. ஆனல், இதன் மூலமாகவும் பொருளாதார வாழ்வில் ஜனநாயகத்தை ஸ்தாபித்துவிட முடியாது. ஏனெனில், இதற்குமுன் முதலாளிகள் என்று பெயர் வைத்துக்கொண்டிருந்தவர்களின் கையிலிருந்த அதிகாரம் இனிச் சர்க்காரில் அங்கம் வகிக்கும் ஒரு சில மனிதர்களின் கையிலிருக்கப் போகிறது. அமெரிக்காவின் நிலைமையும் அநேகமாக இப்படிப்பட்டதே. அரசியல் உலகில் ஜனநாயகம்; சமூகவாழ்வில் ஓரளவு ஜனநாயகம் (நீக்ரோக்களுக்குச் சமத்துவம் கிட்டாதவரையில் பூரண ஜனநாயகம் உண்டாகாது); பொருளாதாரத் துறையில் கலப்பற்ற முதலாளித்துவம். காலஞ்சென்ற ஜனதிபதி ரூஸ்வெல்ட் இந்நிலையிலிருந்து அடிப்படையான மாறுதல்

எதுவும் செய்ய முயலாவிட்டாலும், ஒரு சில சீர்திருத்தங்களைச் செய்ய முயன்றூர். ஆனால், இன்று அமெரிக்கக் காங்கிரஸில் பெரும்பான்மையோராக இருக்கும் கட்சி முதலாளித்துவ அடிப்படையில் எந்தவிதமான மாறுதலும் செய்யக்கூடியதாக இல்லை. இனி, சோவியத் ருஷ்யாவின் அமைப்புத்தான் இதுவரையிலும் பெரும்பான்மையான லக்ஷ்யவாதிகளின் புகழுக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திர மானதாக இருக்கிறது. ஆனால் கூர்ந்து ஆராயும்போது சோவியத் ருஷ்ய அமைப்பு தன் நோக்கத்தில் தவறி விட்டது என்பது விளங்கும். நசுக்கப்பட்டுக் கிடந்த உழைப்பாளிகளுக்குப் புதிய உயிரும், புதிய வாழ்வும் அத்திட்டத்தால் கிடைத்தது என்பது உண்மையே. என்றாலும், அவர்கள் வாழ்க்கையில் ஒளி இல்லை ; உயர்வு இல்லை. ருஷ்யாவில் சமூக வாழ்வில் ஜனநாயகம் நிலவுகிறது. ஆனால் அரசியல் துறையிலும், பொருளாதார அமைப்பிலும் வகுப்பு ஆட்சி நடக்கிறது. அரசியல் துறையில் அங்கு நிலவுவது ஒரே கட்சியின் எதேச்சாதிகாரம். அதைப் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் என்று அழைக்கிறார்கள். பொதுவுடைமைத் திட்டத்தை வகுப்பதற்குக் காரணமானவர்கள், இத்தகைய சர்வாதிகாரத்தை விட்டுக்கொடுக்க முடியாது ; ஆனால் அது நிரந்தரமானதன்று ; நாளடைவில் தானாகவே மறைந்துவிடும் ; அரசாங்கம் என்பதுவே உதிர்ந்து போகும் (wither away) என்று கூறுகிறார்கள். ஆனால், எந்தச் சர்வாதிகாரமும் தன்னிடத்தில் குவிந்து கிடக்கும் ஆதிக்கத்தையும், செல்வாக்கையும், அதிகாரத்தையும் தானே விட்டுவிடாது. சரித்திரமும், மனோதத்துவமும் இதைச் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கின்றன. இந்தப் பொது விதிக்குப் பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் விலக்காகாது. ஆகையால், அரசாங்கம் உதிர்ந்து போவதற்குப் பதிலாகப்

பலமாக வேரூன்றிச் செழிப்பாக அடர்ந்து வளரத்தான் செய்யும். எனவே, தனி மனிதன் நிரந்தரமான அரசியலின் அடிமையாகவே வாழவேண்டிவரும். அத்தகைய சர் வாதிகார அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு மற்ருெரு புரட்சி வேண்டிவரும். இந்தச் சர்வாதிகார சர்க்கார் நாட்டின் உற்பத்திச் சாதனங்களைத் தேசீயமயமாக்கும்போது அரசியல் அதிகாரத்துடன் பொருளாதார அதிகாரமும் சேர்ந்து ஒரு சிலரிடம் தேங்கிவிடுகிறது. இதன் காரண மாக, தனி மனிதன் அரசியல், பொருளாதாரத் துறைகளில் நிரந்தரமான அடிமையாகி விடுகிருன். மேலும் சோவியத் ருஷ்யாவில் தனி மனிதர்களுக்கிடையேயுள்ள வருமான வேறுபாடு பெருகிக்கொண்டே போகிறது என்று அறிஞர் கள் கூறுகிருர்கள். ஆகையால் பொதுவுடைமை நியம அமைப்பிலும், அதை அமுல் நடத்தும் முறையிலும் அடிப் படையான மாறுதல்கள் ஏற்பட்டாலொழிய முன்னே கூறப்பட்ட லக்ஷியங்களை அதன் மூலமாக அடைய முடியாது.

ஆகவே, இன்று உலகில் பிரதானமாகத் தோன்றும் மூன்று நாடுகளின் சமுதாய அமைப்புக்களும் நம்முடைய லக்ஷியங்களை அடைவதற்குத் துணை புரிவதாக இல்லை. ஆனால், மனிதனுடைய புத்திசாதுர்யம் அவனுடைய வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்கான புதிய வழிகளைக் கண்டுபிடிக்கும் திறமையற்றுப் போகவில்லை. மனித வாழ்க்கையின் அடிப்படையையும், உலக நாடுகளின் அமைப்பையும் மனித உணர்ச்சியுடன் கூடிய கண்ணோடு கண்ட காந்திஜி அந்தப் புதிய வழியைக் கண்டுபிடித்திருக் கிருர். அந்த வழி மனிதனுடைய உடலையும், உயிரையும் மாத்திரம் பாதுகாக்க முற்படவில்லை; அவனுடைய ஆத்மாவையும், ஒழுக்கத்தையும் பாதுகாக்க முற்படுகிறது! பாதுகாப்பதோடு மாத்திரமன்றி அவை பூரணமாக வளர்

வதற்கான சகல சந்தர்ப்பங்களையும் அவனுக்கு அளிக்க முற்படுகிறது. ஒரு மனிதனுக்கு மாத்திரமல்லாமல், ஒவ்வொரு மனிதனுக்கும் இந்தச் சந்தர்ப்பங்களை அது அளிக்கப் பார்க்கிறது. ஆகவே, இந்தக் காந்தீய வழி மேற் கூறப்பட்ட லக்ஷியங்களை நமக்கிருக்கும் சாதனங்களைக் கொண்டு அடைவதற்கு எப்படி உதவக்கூடும் என்பதை இனிப் பார்க்கலாம்.

இப்புதிய வழியின் முதல் நியமம், அரசியல், பொரு ளாதாரம் ஆகிய துறைகளில் தோன்றும் அதிகாரம் ஒரு சில இடங்களிலோ, ஒரு சில மனிதர்களிடமோ குவிந்து, தேங்கிக் கிடக்காமல், தேச முழுவதிலும், எல்லா மக்க ளிடமும் பரவிக் கிடக்கவேண்டுமென்பது. இத்தகைய அதிகாரம் குவிந்து கிடப்பது சர்வாதிகாரத்தையும் ஏகாதி பத்தியத்தையும் பிறப்பிக்கிறது. தனி மனிதனிடம் அதி காரமில்லாததன் காரணமாக அவனுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டுப் போகிறது. செறிந்து கிடக்கும் அதிகாரத் தின் இருப்பிடத்தையே எல்லாக் காரியங்களுக்கும் எதிர் நோக்குவதன் மூலம், தனி மனிதன் தன்னம்பிக்கையை யும், தன்னைத்தானே சார்ந்து நிற்கும் சக்தியையும் இழந்து விடுகிறான். எனவே, குவியல் முறையின் அடிப்படையிலே அமைக்கப்பட்டிருக்கும் சமுதாயம் மக்களின் அன்பும் ஆதரவுமில்லாமல் ஆட்சியின் பூரணப் பொறுப்பையும் ஒரு சிறிய அஸ்திவாரத்தின் மேலேயே தாங்கி நிற்கிறது. அத் தகைய சமுதாயம், என்று வேண்டுமானாலும் தன் பாரத் தைத் தாங்க முடியாமலேயே கவிழ்ந்துவிடும். அடிக்கடி ஆட்டங் கண்டுகொண்டேயிருக்கும். எனவே, ஸ்திரமாக, மக்களின் திட்டமான அபிமானத்தின் மேலும், அவர் களுடைய நேரடியான கூட்டுறவின் மூலமும் வாழும் சமு தாயத்தில், சமூகத்தின் அதிகார முழுதும் அதன் பல அங் கங்களிலும் பகிர்ந்து நிற்கவேண்டும். அத்தகைய சமு

தாயத்தில்தான் தனி மனிதன் தனக்குரிய கண்ணியத் துடனும் சுதந்திரத்துடனும் வாழமுடியும்.

இதிலிருந்து பிறப்பது, நாட்டின் தனி அங்கங்களாக விளங்கும் கிராமங்கள் முதலாக, நாட்டின் எல்லாப் பகுதி களும் சுய நிறைவுடன் வாழவேண்டுமென்பது. அந்தக் கிராமத்திலுள்ள மக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் ; தங்கள் நிர்வாகத்தைத் தாங்களே நடத்திக்கொள்ள வேண்டும் ; தங்களுக்குள்ள அதிகாரத்தைத் தங்கள் நன்மைக்காகவும், பிறர் நன்மைக் காகவும் தாங்களே பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மனித வாழ்க்கையின் பிரதான தேவைகளைப் பூர்த்தி செய் வதற்கு ஒருவன் மற்றொருவன் கையை எதிர்நோக்கியிருக் கின்ற வரையில் அவன் பூரண சுதந்திரத்தை அனுபவிப்ப வனாகமாட்டான். முக்கியமாக உணவுக்கும், உடைக்கும் ஒரு கிராமம் மற்றொரு கிராமத்தையோ, நாட்டையோ நம்பி இருக்கிற அளவுக்கு அந்தக் கிராமம் தன் சுதந் திரத்தை இழந்துவிடுகிறது. உணவும் உடையுமின்றி வாழ்க்கை நடத்த முடியாது. அப்பொருள்களுக்குடைய வன் அப்பொருள்களின் தேவையுள்ளவனைத் தன் கைப் பது மையாகத் தன்னிஷ்டப்படி ஆட்டிவைக்க முடியும். ஆகை யால்தான், நிலத்தை உழுபவன் அதற்குச் சொந்தக் காரனாக இருக்கவேண்டுமென்பதும், ஒவ்வொருவனும் தன் ஆடைக்கு வேண்டிய நூலை நூற்றுக்கொள்ள வேண்டு மென்பதும், ஒவ்வொருவனும் தனக்கு வேண்டிய உணவை யும், உடையையும் தானே உற்பத்தி செய்துகொள்ள முடியாவிட்டாலும், ஒரு குடும்பமோ, ஒரு கிராமமோ அதைச் செய்துகொள்ள வேண்டுமென்பதும் காந்தீயத் திட்டத்தின் அம்சங்களாக அமைந்துள்ளன. நெருங்கிய தொடர்பினாலும், உறவினாலும் ஒருவரோடொருவர் பிணைக் கப் பட்டிருக்கும் தனி மனிதன் தன் சுதந்திரத்தை இதனால்

இழந்து விடுவதில்லை. எனவே, கிராம சுயராஜ்யம் இந்த வழியின் இரண்டாவது பிரதான நியமம். கூடுமான வரையில் ஒவ்வொரு கிராமமும் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முயலவேண்டும். பூரண சுதந்திரத் துடன் விளங்கும் இத்தகைய கிராமங்கள் தங்களால் உற் பத்தி செய்ய முடியாத பொருள்களை அவற்றை அதிகமாக உற்பத்தி செய்ய முடிகிற மற்றொரு கிராமத்திலிருந்து, சம அந்தஸ்தில், பண்டமாற்று அடிப்படையில் பெற்றுக் கொள்ளலாம். இத்தகைய கிராம சுயராஜ்யம் தேசீய உணர்ச்சிக்கோ, சர்வதேச உறவுக்கோ முரண்பட்ட தாகாது.

அடுத்தபடியாக, இன்றைய உலகில் முக்கிய இடம் பெற்றிருப்பது எல்லாத் தொழில்களையும் இயந்திரமயமாக் குதல் என்பது. ஆனால் காந்தீய வழிப்படி, இது சாத்திய மில்லை என்பது முற்கூறப்பட்ட இரண்டு நியமங்களி லிருந்தே வெளிப்படும். ஏனெனில் கிராமத்துக்குக் கிராமம் பெரிய இயந்திரங்களை அமைக்க முடியாது; அதற்குத் தேவையுமில்லை; அதற்கு வேண்டிய மூல தனமும் நம் நாட்டில் இல்லை. சில இடங்களில் மாத்திரம் அமைத்தால், அந்த இடங்கள் பிற இடங்களைவிடச் செல் வாக்கிலும், அதிகாரத்திலும் உயர்ந்து ஆதிக்க ஆசை கொண்டுவிடக் கூடும். ஆகையால், காந்தீய வழியில் எல்லாத் தொழில்களையும் இயந்திரமயமாக்குதல் என்ற போக்குக்கு இடமில்லை. ஆனால் இதற்கு வேறு காரணம் உண்டு. தொழிலை இயந்திரமயமாக்குவதன் நோக்க மென்ன? உற்பத்தியைப் பெருக்குவது, உற்பத்தியைத் துரிதப்படுத்துவது, மனித உடல் உழைப்பைக் குறைப்பது. இம்மூன்று நோக்கங்களில் முதலிரண்டும் நிறைவேறுவது நம் நாட்டுக்கு அவசியமேயாயினும், இயந்திரங்களின் மூலமாக மாத்திரம்தான் அவற்றைப் பூர்த்தி செய்ய முடியும்

என்று சொல்வதற்கில்லை. இயந்திரங்களில்லாமல் பொருளுற்பத்தியைப் பெருக்குவதும் துரிதப்படுத்துவதும் சாத்தியமேயாகும். பொருள்களை இயந்திரங்களைக் கொண்டு பெருவாரியாக உற்பத்தி செய்வதற்குப் பதிலாகப் பெருவாரியான மக்கள் பொருள்களை உற்பத்தி செய்யலாம். இரண்டும் உற்பத்தி சம்பந்தப்பட்ட மட்டில் ஒரே பலனைத்தான் கொடுக்கின்றன. ஆனால், உடல் உழைப்பைக் குறைக்க வேண்டுமானால், இயந்திரங்களால்தான் முடியும். நம் நாட்டுக்கோ அந்தப் பிரச்னை இல்லை. நம் நாட்டு மக்களில் மிகப் பெரும்பான்மையோர் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கு உட்பட்டிருக்கிறார்கள்; அவர்களுடைய அபாரமான உழைக்கும் சக்திக்கு வேலை கொடுப்பதற்கு வழியில்லை. இந்த நிலையில், தொழிலை இயந்திரமயமாக்குவது இந்த மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகமாக்குமேயன்றிக் குறைக்காது. உழைப்பின் மூலம் தங்கள் ஜீவனத்தைத் தேடிக்கொள்வதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பமளிப்பது நம் நோக்கமேயன்றி அவர்களுடைய உடலுழைப்பைக் குறைப்பதென்பது நம்முடைய நோக்கமல்ல. நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களில் அநேகம் நம்முடைய நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றை உற்பத்தி செய்யும் இயந்திரத் தொழிற்சாலைகளில் இன்று வேலை செய்பவர்கள் 15 லக்ஷம் மக்கள்; நம்முடைய தேவை முழுவதையுமே நாம் நம் நாட்டில் உற்பத்தி செய்து கொள்வதாக இருந்தால், இன்னும் 5 லக்ஷ மக்களுக்கு வேலை கிடைக்கும்; எனவே, தொழில்களை இயந்திர மயமாக்குவதே இந்தியாவின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும், வாழ்க்கையின் தரத்தை உயர்த்தும் என்று நம்புவதற்கு காரணமில்லை என்று டாக்டர் பி. ஜே. தாமஸ் கூறுகிறார். ஆகையால் நம்முடைய சாதனங்களின் மூலம் நம் லக்ஷியங்களை அடைவதற்கு எல்லாத்

தொழில்களையும் இயந்திரமயமாக்குவதென்பது சரியான வழியன்றென்பது தெளிவாகிறது. வர்தாவிலிருந்து வெளியாகும் "கிராம உத்யோக பத்ரிகா"வின், 1939-ம் ஆண்டு ஜூலை மாத இதழில் வெளியான கட்டுரையொன்றின் கீழ்க் காணும் பகுதி இங்கு மிகப் பொருத்தமாக இருக்கும் :—

"இரண்டு முறைகளாலும் நடத்தக்கூடிய நெசவுத் தொழில் போன்றதொரு தொழிலின் புள்ளிவிவரங்களை நாம் திருப்திகரமாக ஒப்பிட்டுப் பார்க்க முடியும். ஒரு பருத்தி நெசவாலைக்கு நூற்பதற்கும் நெய்வதற்குமாக, சராசரி 13 லக்ஷரூபாய் மூலதனமும் 1400 வேலையாட்களும் தேவை. இதன்படி, வேலை பார்க்கும் ஒருவனுக்கு 900 ரூபாய் மூலதனமாகிறது. இப்படித் தொழிலில் போட்ட பணத்திற்கு, ரூபாய் 1-க்கு 2·5 பவுண்டு நூலும் 1·5 பவுண்டு துணியும் கிடைக்கிறது. (இந்தப் புள்ளி 1932-33 வருஷத்தைச் சேர்ந்தது.) 60 ரூபாய் மூலதனத் துடனும், 10 சர்க்காக்களுடனும், ஒரு தறியுடனும் கிராமத் தொழில்படி வேலை செய்யும் ஓர் ஆளுக்கு வேண்டிய மூலதனம் 9 ரூபாயாகிறது ; தொழிலில் போட்ட மூலதனத்துக்கு, ரூபாய் 1-க்கு ஆலையில் கிடைப்பதைப் போலப் பத்து மடங்காக உற்பத்திப் பொருள் கிடைக்கிறது. இதிலிருந்து கணக்கிடுமிடத்து, நம்முடைய தேவை முழுவதையும் ஆலைகளின் மூலமாகப் பூர்த்தி செய்வதற்கு 300 கோடி ரூபாய் மூலதனமும், 33 லக்ஷம் வேலையாட் களும் வேண்டும் ; கிராமத் தொழிலிலிருந்து நம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதாக இருந்தாலோ, நமக்கு வேண்டியது 72 கோடி ரூபாய் மூலதனமும், 800 லக்ஷம் வேலையாட்களுமாகும். இந்த இரண்டு முறை களிலும் நிச்சயமான சௌகரியங்க ளிருக்கின்றன வென்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். நம் நாட்டின் நிலைமைக்குப் பொருத்தமாக இருக்கும் முறையைப்

பொறுக்குவதென்பதுதான் நம் முன்னுள்ள பிரச்னை. நாம் ஏழைகள்; ஆனல் எல்லையற்ற உழைப்புச் செல்வம் நம்மிடம் இருக்கிறது. ஆகையால், கிராம முறையே நம் நாட்டு நிலைமைக்குப் பொருத்தமாக இருக்கிறதென் பதை எந்த அறிவுத் திறமையுள்ள திட்டமும் ஏற்றுக் கொள்ளும்.''

மேலும், இயந்திரத் தொழிலினல் வேறு பல தீங்குகளும் உண்டாகின்றன என்பதை ஆடம் ஸ்மித் (Adam Smith), டேவிட் ரிகார்டோ (David Ricardo), கார்ல் மார்க்ஸ் (Karl Marx), ஷா (G. B. Shaw), பேராசிரியர் ஷீல்ட்ஸ் (Prof. Shields) ஆகியவர்களும் ஏற்றுக்கொள்கிருர்கள். அதன் பலனுக மனிதனுடைய சிருஷ்டி சக்தி மழுங்கிப் போகிறது; ஆக்கத்தினல் பிறக்கும் ஆனந்தம் அழிந்து போகிறது; அவனும் ஓர் இயந்திரமாகிவிடுகிருன். அவனுக்கே விசேஷமாக உள்ள திறமையும், சக்தியும், துணிவும் வெளிப்படுவதற்கு வழியின்றி மங்கி மடிந்து போகின்றன. எனவே, இந்தப் புது வழிப்படி எல்லாத் தொழில்களையும் இயந்திர மயமாக்குதல் என்ற கோட்பாட்டுக்கு இடமில்லை.

இதிலிருந்து காந்திஜி இயந்திரங்களையே வெறுக்கிருர் என்ற முடிவுக்கு வருவது தவறு. இயந்திரத்துக்குரிய இடமுண்டு. அது வாழ்க்கையில் இடம் பெற்றுவிட்டது. ஆனல் மனித உழைப்புக்குப் பிரதியாகும்படி அது அநுமதிக்கப்படக்கூடாது. சீர்திருத்தப்பட்ட கலப்பை ஒரு நல்ல வஸ்துதான். ஆனல், ஏதாவதொரு மாறுதலினல், இந்தியாவின் நிலமுழுவதையும் ஒரு மனி தனே உழுது, விவசாய உற்பத்தி முழுவதையும் அவனே செய்து, லக்ஷக்கணக்கான மக்களுக்கு வேறெந்த வேலையு மில்லை என்று ஏற்படுமானல் அவ்வளவு பேர்களும் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதானே; அல்லாமலும் அவர்கள்

சோம்பேறிகளாகி மடையர்களாகவும் ஆகிவிடுவார்கள். இத்தகைய பரிதாபகரமான நிலைமைக்கு மக்கள் வந்து விடக்கூடும் என்ற அபாயம் எந்தநேரத்திலும் இருந்து கொண்டிருக்கிறது. "கிராம இயந்திரத்துக்கு செய்யப் படும் எந்த அபிவிருத்தியையும் நான் வரவேற்பேன். ஆனால், லக்ஷக்கணக்கான குடியானவர்களுக்கு அவர்க ளுடைய வீட்டிலேயே செய்யக்கூடிய வேறு வேலை கொடுத்தாலொழிய, கைவேலைக்குப் பதிலாக இயந்திரச் சாதனங்களைப் பெற்ற கதிர்களை நுழைப்பது பாதகமாகும் என்பதை நான் அறிவேன்" என்று அவர் கூறுகிறார். ஆகையால் எந்த விதமான இயந்திரத்துக்கும் இத்திட்டத் தில் இடமில்லை என்று சொல்வதற்கு இல்லை. நாட்டில் வாழும் ஒவ்வொரு மகனுக்கும் அவன் உழைப்பின் மூலம் தன் ஜீவனத்தைத் தேடிக் கொள்வதற்குச் சந்தர்ப்பமிருக்க வேண்டும்; வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவை களைப் பிறரிடமிருந்து எதிர்பார்ப்பதன் மூலம் எவனும் தன் சுதந்திரத்தையும் உரிமையையும் இழந்துவிடக் கூடாது என்ற அடிப்படையான நிபந்தனைகளுக்கு உட்பட்ட இயந்திரத்துக்கு இடமுண்டு. மேலும், இன்றைய வாழ்க்கையில் நமக்கு மிகத் தேவையானவை என்று நாம் கருதப் பழகிக்கொண்டிருக்கிற வஸ்துக்களில் சில இயந்திரங்களாகவும் இயந்திரங்களால் உற்பத்தி செய்யப் படுபவைகளாகவுமிருக்கின்றன. ஆகையால், இயந் திரத்தை அறவே நம்முடைய வாழ்க்கையமைப்பிலிருந்து வெளியேற்ற முடியாது. நம்முடைய லக்ஷியங்களுக்குப் பங்கமோ, பழுதோ ஏற்படாமல் எந்தெந்தத் தொழில்களை இயந்திரமயமாக்கலாம் என்று பொறுக்குவதில் அதிகக் கவனமும் தீர்க்க தரிசனமும் காட்டப்பட வேண்டும். எவற்றைக் குடிசைக் கைத்தொழிலாக வைத்துக் கொண் டிருக்கப் போகிறோம், எவற்றை இயந்திர மயமாக்கப்

போகிறோம், என்று நிதானிப்பதில்தான் நம் திட்டத்தின் வெற்றியும், நம் லக்ஷியங்களை நாம் அடைவதிலுள்ள வெற்றியும் அடங்கியிருக்கின்றன.

"மிகப்பிரமாண்டமான உபகரணங்களும், மத்திய ஐக்கிய தொழிற்சாலைகளில் மாத்திரமே உற்பத்தி செய்யப் பட முடியும் என்ற தேவையுமுள்ள தொழில்களை இந்தக் கிராமக்கைத்தொழில் திட்டம் சேர்த்துக் கொள்ளவில்லை என்பது உண்மையே. ஆனால், தினசரி வாழ்க்கைக்குத் தேவையான வஸ்துக்களில் மிகப்பெரும்பாலானவற்றை இத்திட்டம் கட்டுப்படுத்தும். என் அறிவுக்கெட்டிய வரையிலும், கிராமங்களிலும், நாட்டுப்புறங்களிலும், சாதாரண மக்களின் குடிசை வீடுகளிலும் எவற்றை உற்பத்தி செய்ய முடியும், எவற்றை உற்பத்தி செய்ய முடியாது என்ற விஷயம் இன்னும் பூரணமாக ஆராய்ச்சி செய்யப்படவில்லை" என்று ஸ்ரீ மனு சுபேதார் கூறி யிருக்கிறார். ஆகையால் இந்த ஆராய்ச்சி உடனே செய்யப்படவேண்டும். நம் வாழ்க்கைக்குத் தேவையான வற்றில் எதைக் குடிசைத் தொழிலின் மூலம் அடைய முடியாது என்று திட்டமாக ஆராய்ந்து முடிவு செய் கிறோமோ, அதை உற்பத்தி செய்யும் தொழிலை மாத்திரம் தான் இயந்திர மயமாக்க வேண்டும்.

"சீனு ஜனநாயகத்துக்காக நிர்மாணிக்கிறது" (China builds for Democracy) என்ற புத்தகத் துக்கு (எழுதியவர் Nym Wales) முன்னுரை எழுதிய பண்டித ஜவாஹர்லால் நேரு கீழ் வருமாறு கூறுகிறார்:—"பெரும் தொழிற்சாலைகளும் குடிசைத் தொழில்களும் இருக்க வேண்டும். அவற்றுக்கிடையே போட்டியுண்டாகாத முறையிலே திட்டம் இடவேண்டியது அவசியமென்று தோன்றுகிறது. பெருந்தொழில் எவ்வளவு துரிதமாக முடியுமோ, அந்த அளவில் அபிவிருத்தி

செய்யப்படவேண்டும் ; ஆதரிக்கப்பட வேண்டும். ஆனால், எந்தமாதிரியான தொழில் இப்படி ஆதரிக்கப்படவேண்டும் என்பது மிக்க ஜாக்கிரதையுடன் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். அது கனத்த அடிப்படைத் தொழிலாக இருக்க வேண்டும். தேசத்தின் பொருளாதார பலத்துக்கு அது அஸ்திவாரமாக இருக்கவேண்டும். அதன்மேல் இதர தொழில்களைப் படிப்படியே நிறுவக்கூடியதா யிருக்க வேண்டும். மின்சார சக்தியை விருத்தி செய்வ தென்பது தொழில் வளர்ச்சிக்கு ஆரம்ப அவசியமாகும். இயந்திரங்கள் செய்வது, கப்பல் கட்டுவது, ரசா யனப் பொருள்கள் உற்பத்தி செய்வது, ரயில் என்ஜின், மோட்டார் செய்வது முதலியவை பின்தொடர வேண்டும். இவையும், இவை மாதிரியுள்ளவையும் செல்வம் சிருஷ்டிப்பவை ; உழைப்பு அளிப்பவை ; வேறிடங் களில் வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டு பண்ணு தவை. இவற்றைவிட லேசான இயந்திரத்தொழிலை இப் போது நாம் ஆதரிக்கக் கூடாது. ஏனெனில், நம்மிட மிருக்கும் மூலதனம் அளவில் குறைந்தது. அது பெருந் தொழிலுக்குத் தேவையாகிறது. அவை குடிசைத் தொழில் களுக்குப் போட்டியாகி, வேலையில்லாத் திண்டாட்டத்தை யுண்டுபண்ணும்.'' அதே பண்டித நேரு, திரிபுரி காங்கிரஸ் கதர், கிராமக் கைத்தொழில் கண்காட்சியைத் திறந்து வைக்கும்போது, ''பெருந்தொழிற் சாலைகளைப் பெருக்கு வதன் மூலம் இந்தியாவின் கிராம மக்களை ஒரு பொழுதும் நம்மால் முன்னேறச் செய்ய முடியாது. கதர் மூலமும், கிராமக் கைத்தொழில் மூலமும் மாத்திரந்தான் இதை அடைய முடியும். கிராமங்களில் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பெருந் தொழிற் சாலைகளை நாம் வைத்துக் கொள்ளலாம். பெரும்படியாக உற்பத்தி செய்பவரும், கிராமத் தொழிலாளியும், அவரவர்க்

குரிய இடத்தில், நியாயமாக அவரவர்க்குரிய பிராந்தியத்தின் எல்லைக்குள் பணியாற்றட்டும். அவர்களுக்கிடையே இயற்கையான முரண்பாடு எதுவுமில்லை. இருக்கவேண்டிய அவசியமுமில்லை'' என்று கூறினர். ஆனால் பண்டித நேரு இங்குப் பிரதானமாகத் தம் மனத்தில் கொண்டிருந்தது மக்கள் வாழ்க்கையின் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதும், யாவர்க்கும் உழைப்புக்கு வழியிருக்க வேண்டுமென்பதுமே. இவற்றுடன் ஒவ்வொருவனும் தன்னுடைய பரிபூரண சுதந்திரத்துடன் வாழ வசதியிருக்க வேண்டுமென்ற லக்ஷியத்தையும் சேர்க்கும் போது இயந்திரமயமான பெருந்தொழில், திட்டமான கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருக்க வேண்டுமென்பது இன்னும் தெளிவாகும்.

போக்கு வரவு சாதனங்கள், மின்சார உற்பத்தி, சுரங்க வேலை முதலியவை கிராமத் தொழிலுக்குள் அடங்காதவை. ஆகையால் அவை அரசாங்கத்தின் அதிகாரத்தில் இருக்க வேண்டும். லக்ஷக்கணக்கான கிராமங்களில் நடக்கும் தொழில்களுக்கு உதவியாக அரசாங்கம் இவற்றை நடத்த வேண்டும். அவர்களுக்கு உதவி செய்வதற்குப் பதிலாக அக்கிராமங்களின் மீது ஆதிக்கம் செலுத்த முற்பட்டால் அவை தங்கள் சுதந்திரத்தை இழந்துவிடும். ஆகையால் தான், அவசியமேற்பட்டால், இந்த மத்தியத் தொழிலின் உதவியின்றியே தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்குச் சௌகரியமாக உணவு, உடை, கல்வி, வைத்திய வசதிகள் முதலியவற்றில் கிராமங்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளக் கூடியவைகளாக இருக்கவேண்டும் என்பதுவும். எனவே நவீனகால, விஞ்ஞான அறிவின் உதவிகொண்டு எவ்வளவு திறமையுடன் அமைக்க முடியுமோ, அவ்வளவு திறமையான, மலிவான, சிறிதான, கனமற்ற உற்பத்தி சாதனங்கள்

மக்களின் கைகளில் இடம்பெறவேண்டும். அத்தகைய சாதனங்களைத் தாங்களே உடையவர்களாகவும், தாங்களே உபயோகிப்பவர்களாகவும், அவர்கள் இருக்க வேண்டும். இதன்படி வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் யாவும் பெருவாரியான மக்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்பவர்களா கிருர்கள். தங்கள் வாழ்வுக்காக ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தையோ, அரசாங்கத்தையோ நம்பிச் சார்ந்து இருக்க வேண்டிய அவசியம் அற்றுப் போவதால் அந்த வர்க்கத்தினுடையதும், அரசாங்கத்தினுடையதுவுமான செல்வாக்கும், அதிகாரமும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. முடிவில் ஒரு வர்க்கமற்ற சமுதாயத்தில் அவசியமில்லாமல் அரசாங்கம் தானுகவே உதிர்ந்து போகிறது. மக்கள்மேல் ஆதிக்கம் செலுத்தாமல் அவர்களுடைய சேவகனுக அரசாங்கம் ஆவதே உதிர்ந்து போதல் என்பதின் பொருள்.

இத்தகைய திட்டத்தின் அடிப்படையின் மேல் அமைக்கப்பட்டிருக்கும் சமுதாயம் ஏகாதிபத்தியத்தையும், யுத்தத்தையும் தவிர்க்க பெரிதும் காரணமாகிறது. மக்கள் மீது அளவுகடந்த ஆதிக்கம் செலுத்துவது, இயந்திரங்களைக் கொண்டு பொருள்களைப் பெருவாரியாக உற்பத்தி செய்வது, அவற்றைப் பணமாக்குவதற்குப் பிற நாடுகளில் சந்தை (Market) தேடுவது, தங்கள் ஆலைகளுக்குத் தீனி போடுவதற்காகப் பிற நாடுகளில் மூலப் பொருள்களைத் தேடுவது, அந்த நாடுகளை அதற்காகத் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவது: ஆகியவை ஏகாதிபத்தியத்துக்கும் யுத்தத்துக்கும் அங்கங்களும் காரணங்களும் ஆகும். இந்தத் திட்டத்தில் அவைகளுக்கு இடமேயில்லை. மேலும், பிறரைச் சார்ந்திராமல் சுதந்திரர்களாக வாழும் இம்மக்கள் தங்கள் சுதந்திரத்தைச் சுலபமாகக் காப்பாற்றிக் கொள்ள

லாம். நாடு முழுவதிலும் பரந்து கிடக்கும் உற்பத்தி ஸ்தானங்களை எதிரிகளால் சுலபமாக அழித்துவிட முடியாது. இதற்குமாருக பெரிய இயந்திர வடிவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மாத்திரம் உற்பத்தி ஸ்தானமிருந்தால், ஒரே குண்டு அதை அழித்து விடும். கடந்த யுத்தத்தில் ஜப்பானுடன் சீனு சமாளித்ததே இதற்குச் சிறந்த அத்தாட்சியாகும்.

ஆகையால், நம் லக்ஷியங்களை அடைவதற்கு கிராம சுயராஜ்யத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் காந்திய திட்டம் ஒன்று தான் வழி காட்டுகிறது. மனிதனுடைய சகல அம்சங்களையும் அது போஷிக்க முயலுகிறது. மக்களுடைய கருத்தில் ஒரு பெரும்புரட்சி உண்டானுல் தான் இத்திட்டத்தின் பெருமையை உணர முடியும். ஏகாதிபத்தியத்தையே அடிப்படையாகக் கொண்ட மேல் நாட்டுப் பொருளாதாரத்தைப் பயின்று, அதன் பலாபலன் களைப்பற்றிச் சிறிதும் சிந்திக்காமல், அதை அப்படியே நம் நாட்டில் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிற நம் நாட்டு இளைஞர்களுக்கு இப்புதிய திட்டம் பிற்போக்கானதாகத் தோன்றலாம். சற்று ஆழ்ந்து சிந்தித்து, பெயரைக் கண்டு மயங்கி விடாமல், பொருளையும், பலனையும் கருத்திலிருத்தி, பொறுமையுடன் பார்ப்பவர்களுக்கு அடிக்கடி இன்று தோன்றும் யுத்தங்களும் பிற இன்னல்களும் மறைந்து நிரந்தரமான சமாதானத்துடன் அமைதியான வாழ்க்கை நடத்தும் மக்கள் நிறைந்த புதிய உலகத்தை இன்று இத்திட்டம் ஒன்றிஞல் தான் சிருஷ்டிக்க முடியும் என்பது தெளிவாகும். டாக்டர் ஜெ. ஸி. குமரப்பா அவர்கள் சொல்வதை இங்கு குறிப்பிடுவது அவசியம். "இத்திட்டம் தான் மனிதனுடைய உண்மைத் தன்மையை வளர்க்கும் சமமான விநியோகத்துக்கு வழி செய்யும்; உண்மையான அரசியல் ஜனநாய

கத்தில் முடியும். இதற்குமாருக, பொருளாதார நடவடிக்கைகள் குவிந்து கிடப்பது சர்வாதிகாரத்தையும் அரசியலில் கொடுங்கோன்மையையுமே உண்டு பண்ணும். தனி மனிதனுடைய உண்மையான சுதந்திரத்துக்காக இந்தியா பாடுபடுகிறது. இத்திட்டத்தின் மூலம் அதை அடைவதில் இந்தியா வெற்றி பெறுமாஞல், மனித வர்க்கத்துக்கே சமாதானத்தையும், சுபிட்சத்தையும், மிகுதியையும் நோக்கி முன்னேறுவதற்கு ஒரு விசையைக் கொடுத்த நாடாகும் அது.''

# 3. ஸ்திர சமூகம்

ஒருவன் தன் உடல் நலத்தை இரண்டு வழிகளில் நிலை நாட்டிக்கொள்ளலாம் என்று சொல்லமுடியும். முதல் வழிப்படி, அவன் தன் உணவைப்பற்றியோ, வசிக்கும் இடத்தைப்பற்றியோ, சூழ்நிலையைப் பற்றியோ சிறிதும் கவலைப் படவேண்டியதில்லை. ஆனால் எத்தகைய பயங்கர மான நோய் வந்தாலும் அதை உடனே கட்டுப்படுத்திவிடக் கூடிய திறமை வாய்ந்த மருத்துவரையும், அபூர்வமான மருந்துகளையும் எப்போதும் கையிருப்பில் வைத்துக்கொண் டிருந்தால் போதும். இரண்டாவது வழிப்படி அவன், தன் உணவின் தன்மை, அதனை உட்கொள்ளும் காலம், உடை, வசிக்கும் இடம், சூழ்நிலை, உடற்பயிற்சி, உடல் உழைப்பு, அதன்காலம், ஆகியவற்றில் கவனம் செலுத்தி அவற்றை முறைப்படுத்தி, மனித முயற்சியால் முடிந்தவரையில் நோய் எதுவும் வராமலேயே தடுக்கப் பார்ப்பது. அப்படி நோய் எதுவும் வந்தாலும் அதிகமான மருத்துவ உதவி யின்றி உடலின் பக்குவத்தினாலேயே அந்த நோய் உடனே நீங்கிப் போகக்கூடிய நிலையைத் தன் வாழ்க்கையைத் திட்டப்படுத்திக் கொள்வதன் மூலம் உண்டுபண்ணுவது. இவ்விரு வழிகளிலும் இரண்டாவது வழியே சிறந்தது, விவேகமானது, நீண்ட ஆயுளை அளிக்கக்கூடியது என்பது தெளிவு. இதேமாதிரிதான் ஒரு சமுதாய வாழ்வின் அமைப்பும். அமைதியுடனும், சுபிக்ஷத்துடனும், ஒற்றுமை யுடனும் ஒரு சமூகம் முன்னேறவேண்டுமானால், அதனுடைய வாழ்க்கைத்திட்டம் எப்படி அமைக்கப்பட

---

"ஜனநாயகத்தின் பிரச்னைகள்" என்ற தொடரில் "ஸ்திர சமூகம்" (Social Security) என்பதைப்பற்றி 8—6—1948-ல் இப்பிரசங்கம் அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்திலிருந்து ஒலிபரப்பப் பட்டது.

வேண்டும் என்பதைப் பற்றி திருப்திகரமான முடிவுக்கு வருவதுதான் ஜனநாயகம் விடுத்திருக்கும் பிரதான அறை கூவல்; ஜனநாயகக் கொள்கைக்கு முதற் பரீக்ஷை.

முன் காலத்தில் கிராமங்களே நாட்டில் பிரதான அங்கங்களாக இருந்தன. ஒரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் ஒரு குடும்பத்தினரைப்போல வாழ்ந்து வந்தனர். ஒரு குடும்பத்திலே புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் தேவையையும் முழுக்குடும்பமும் சேர்ந்து கவனித்துக் கொள்வதைப்போல, ஒவ்வொரு கிராமவாசியினுடைய தேவையையும் கிராமத்திலிருக்கும் இதரர் அனைவரும் சேர்ந்து பூர்த்தி செய்துவந்தனர். இதற்கேற்ப கிராம மக்கள் தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார்கள். கிராமத்தைச் சேர்ந்த எவனும் தன்னுடைய அன்றுடத் தேவைக்கு வெளியார் யாரையும் சார்ந்திருக்கவேண்டி நேர்ந்ததில்லை. இந்த நிலையில், நாட்டின் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு இரண்டே இரண்டுதான். ஒன்று, வெளிநாட்டார் படையெடுத்து வந்து நாட்டின் சுதந்திரத்தை அபகரிக்காமல் பாதுகாப்பது; இரண்டு, சமூக வாழ்க்கையில் கண்ணியத்துக்குப் புறம்பான ஒழுக்கங் கெட்டவர்கள் திருட்டு, கொலை, ஏமாற்றம் முதலிய குற்றங்களால் சமுதாய வாழ்க்கையைச் சீர் குலைக்காமல் பார்த்துக்கொள்வது. இதுதான் பண்டைய சமுதாய அமைப்பு முறையும், அதன் அரசாங்கத்தின் கடமையும் ஆகும். பல துறைகளிலும் அறிவு வளர்ந்து, வாழ்க்கையின் வசதிகள் அளவற்று விரியும்போது, கூட்டு வாழ்க்கையின் முக்கியத்துவம் குறைந்து போயிற்று; கிராம வாழ்க்கையின் அமைப்பும், அமைதியும், அழகும் அழிந்து போயின. தனி மனிதனின் வாழ்க்கை புதிய பிராதானியத்தைப் பெற்றது. தேவை மிகுந்த தனி மனிதனொருவனைத் திருப்தி செய்வதற்கு இப்போது கிராம சமுதாயமில்லை. இயந்திரத்

தொழில் வளர்ச்சியின் காரணமாக வேலேயும், ஊதியமு மற்ற மக்கள் எண்ணிக்கையில் பெருகலாயினர். தேசத் தின் செல்வம் ஒரு சிலரின் கையிலேயே குவிய ஆரம் பித்தது. இந்த நிலேயில், அரசாங்கம் முன்மாதிரியே, வெளிநாட்டுப் படையெடுப்பைத் தடுப்பது, உள்நாட்டுக் கலகத்தை அடக்குவது ஆகிய போலீஸ்காரன் வேலேயை மாத்திரம் செய்துகொண்டிருப்பது சமுதாய வாழ்வின் ஸ்திரத்துக்குப் போதாததாயிற்று. மக்களுடைய அன்ருட வாழ்க்கையில் கவனம் செலுத்தி, தன்னுடைய குற்றத்தினு லல்லாமல், எந்த மனிதனும் வாழ்க்கைக்கு அத்தியாவசிய மான எந்த வசதியும் அற்றவனுக இருக்கும் நிலே ஏற் படுவதைத் தடுக்கும் பொறுப்பும் கடமையும் அரசாங்கத் தைச் சேர்ந்தது என்ற கருத்து இப்பொழுது நிலே பெற்று விட்டது. ஆகையால்தான், அரசாங்கம் வெறும் போலீஸ் காரனுக இருந்த காலம் தாண்டிவிட்டது; இன்று அது சமூகத் தொண்டனுக இருக்கவேண்டும் என்ற வாக்குப் பிறந்திருக்கிறது. இந்த வாக்கு இன்றைய உலகில் எல்லா அரசாங்கங்களுக்கும் பொருந்துமாயினும், ஜனநாயக அர சாங்கத்துக்கு விசேஷமாகப் பொருந்தும். அப்படி யில்லே யெனில் ஜனநாயகம் என்ற பதமே பொருளிழந்து போகும். சர்க்கார் செலுத்தும் ஆட்சியிலே தனக்குப் பங்குண்டு, தன்னுடைய பிரதிபிம்பமும் பிரதிநிதியுமே தன்நாட்டின் சர்க்கார் என்று நாட்டு மகன் ஒவ்வொருவனும் உணர்வது தான் ஜனநாயக ஆட்சியின் உயிர் நாடி எனக்கொள்வோ மானுல், அவன் கௌரவமாகவும், மனித இயற்கையின் உயர்வுக்கு ஒத்தும் உயிர் வாழ்வதற்குவேண்டிய சகல வசதி களேயும் செய்துகொடுப்பது அந்த சர்க்காரின் தலேயாய கடன் என்பது தானே புலப்படும். எந்த அளவுக்கு ஒரு சர்க்கார் இந்தக் கடமையை நிறைவேற்றுவதில் வெற்றி பெறுகிறதோ, அந்த அளவைக்கொண்டுதான் அதனுடைய

ஜனநாயகத் தன்மை மதிப்பிடப்படும். ஒரு நாட்டில் தன்னுடைய குற்றத்தினுலல்லாமல், வேலையில்லாமலோ, வாழ்க்கையைப் பூரணமாகவும் பெருமையுடனும் வாழ்வதற்கு வசதியற்றோ, ஒரு தனி மனிதன் இருக்கின்றவரையில், அந்த நாட்டின் சர்க்கார் பூரண ஜனநாயக சர்க்கார் ஆகாது; அந்த சமூகம் ஜனநாயக சமூகமாகாது. தனி மனிதன்தான் சமூகமென்ற சுவரை எழுப்புவதற்கு உபயோகிக்கப்படும் செங்கல். ஒரு செங்கல் நன்ருக வேகாமல் இருக்கின்ற வரையில், அந்தச் சுவருக்குப் பலக் குறைவு தான். ஆகையால் தான், நாட்டில் வாழும் ஒவ்வொரு மகனும் ஒவ்வொரு மகளும் தத்தமக்குரிய கடமையைச் செய்து, பூரணமான வாழ்க்கையை நடத்துவதற்கான சூழ்நிலையையும், காரிய வசதியையும் செய்து கொடுப்பது எந்த ஜனநாயக சர்க்காருடையவும் முதற்கடமையாக்வும், தன் பெயரின் உண்மையை உறுதிப் படுத்துவதற்கான ஒரே வழியாகவும் இருக்கிறது. இந்த லக்ஷியத்தையடைவதற்கான முயற்சியில் எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளைத்தாம் சமுதாய வாழ்க்கையின் உத்தரவாதம், ஸ்திரத்துவம், பாதுகாப்பு என்று அழைக்கிருர்கள்.

தவிர்க்கமுடியாத இக்கடமையை உலகில் அரசாங்கங்கள் வெவ்வேறு வழிகளில் நிறைவேற்ற முயல்கின்றன. அவைகள் பின்பற்றும் முறை அந்தந்த நாட்டின் ஜனத்தொகை, அந்த ஜனங்கள் கிராமங்கள் நகரங்களில் எந்த விகிதத்தில் பிரிந்து வாழ்கிருர்கள் ; அவர்களில் உழைக்கும் வசதிபெற்றவர்கள் எத்தனேபேர், அப்படி உழைப்பவர்களிலும் இயந்திரத்தொழிற்சாலைகள், பயிர்த்தொழில் ஆகியவற்றில் எந்த விகிதத்தில் பிரிந்து உழைக்கிருர்கள் ; தேசத்தின் பொருளுற்பத்தி எந்த அளவிலிருக்கிறது ; தேசீயச் செல்வம் தேசமக்கள் அனேவரிடமும் பகிர்ந்து இருக்கிறதா, ஒரு சில இடங்களில் மாத்திரம்

குவிந்து கிடக்கிறதா ; பொதுவாக மக்கள் வாழ்க்கையின் தரம் எந்தப் படியிலிருக்கிறது என்பன போன்ற பல கேள்விகளுக்குக் கிடைக்கும் பதிலின் தன்மையைப் பொறுத்திருக்கிறது. எந்த முறையை அவர்கள் அனுஷ்டித்த போதிலும் சரி, அவர்கள் அடையமுயலுகிற லக்ஷியம் ஒன்றுதான். அதாவது, நாட்டிலே திறமையும் சக்தியுமுள்ள ஒவ்வொருவனுக்கும் கௌரவமானதோர் தொழிலைச் செய்து தன் வாழ்க்கையின் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்கான வசதி இருக்கவேண்டும் ; ஏதாவதொரு நியாயமான காரணத்தினால் அவன் வேலை செய்யாமலிருப்பானேயானால், அந்த வேலையில்லாத காலத்தில் அவன் வாழ்க்கையை நடத்துவதற்கு அவனுக்கு உதவியளிக்க வேண்டும் (அன்-எம்ப்ளாய்மென்ட் பெனிபிட் – Unemployment benefit): அங்கங்களுக்குப் பங்கமுண்டானதன் காரணமாக ஒருவன் வேலை செய்யும் சக்தியற்றுப் போவானேயானால் அவன் தன் வாழ்க்கையை நடத்துவதற்காக அவனுக்கு உதவியளிக்க வேண்டும் (டிஸ்எபிலிடி பெனிபிட் – Disability benefit): ஒருவன் நோய்வாய்ப் படுவானாயின், அவன் நோய்க்குப்பரிகாரம் செய்துகொள்வதற்காகவும், நோயுற்ற காலத்தில் அவன் ஜீவனத்தை நடத்திக்கொள்வதற்காகவும் அவனுக்கு உதவி வேண்டும் (ஸிக்னஸ் பெனிபிட்-Sickness benefit): பெண்களுக்குப் பிரசவகால உதவி (மெடர்னிடி பெனிபிட் – Maternity benefit): உழைத்துச் சம்பாதிக்கும் கணவனை இழந்ததனால் விதவையாகும் அவன் மனைவிக்கு உதவி (விடோஸ் பென்ஷன் – Widow's pension): பெற்றோரையிழந்த குழந்தைகளின் போஷணைக்காக உதவி (சில்ட்ரன்ஸ் கிரான்ட் – Children's grant): வயதானதின் காரணமாக வேலையிலிருந்து ஒய்வெடுத்துக் கொண்டவர்களின் ஜீவனத்துக்காக உதவி (ரிட்டயர்மென்ட் பெனிபிட் – Retire-

ment benefit), இறந்துபோன ஒருவனுடைய ஈமக்கடன்களை முடிப்பதற்கான உதவி (டெத் கிராண்ட் – Death grant) : ஆகிய பல்வேறு விதமான பொருளாதார உதவிகளும் நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் அவனவனுடைய அல்லது அவளவளுடைய தேவைக்குத் தக்கபடி கிடைக்கும் ஏற்பாட்டைச் செய்து வைப்பது சமூகத்தினுடைய லக்ஷியமாகிறது ; சமூகத்தின் கூட்டுப் பிரதிநிதியான சர்க்காருடைய கடமையாகிறது. இந்த ஏற்பாட்டின் மூலம், நாட்டுமக்கள் எதிர்காலத்தில் உண்டாகக்கூடிய எதிர்பாராத இடையூறுகளை எண்ணிக் கவலைப்படாமல், அந்த சந்தர்ப்பங்களில் தமக்கு நிச்சயமாக உதவி கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் அமைதியும் ஆனந்தமும் நிலவும் வாழ்க்கையை மன நிம்மதியுடன் இன்று நடத்த ஏதுவாகிறது.

பெரும்பாலான திட்டங்களில் இவ்வுதவிகளை அளிப்பதற்காக அரசாங்கம் கையாளுமுறை இதுதான் : தேசீய இன்ஷ்யூரன்ஸ் இலாகா என்ற புதிய இலாகா ஒன்று ஏற்படுத்தப்பட்டு ஒரு தனி மந்திரியின் பொறுப்பில் விடப்படுகிறது. தேசீய இன்ஷ்யூரன்ஸ் நிதி என்று ஒரு நிதி உண்டாக்கப்படுகிறது. நாட்டில் சம்பாதிக்கும் ஒவ்வொருவனும் தன் வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை அந்த நிதிக்குச் செலுத்தவேண்டும்; அப்படி சம்பாதிப்பவனைத் தன் கீழ் வேலையில் வைத்திருக்கும் ஒவ்வொரு முதலாளியும் தன்னிடம் வேலை செய்யும் தொழிலாளிக்காகவும் ஒரு குறிப்பிட்ட தொகையை அந்த நிதிக்குச் செலுத்தவேண்டும் ; சர்க்காரும் அந்த நிதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்துகிறார்கள். இப்படியாக, தொழிலாளி, முதலாளி, பொது ஜனங்கள் ஆகிய மூவரும் சேர்ந்து நிர்மாணிக்கும் பொது நிதியிலிருந்து தொழிலாளியின் தேவைகள் பூர்த்தி செய்யப்படு

கின்றன. இதற்குப் பொதுவாக தேசீய இன்ஷ்யூரன்ஸ் முறை என்று பெயர். எதிர்காலத்தில் தனக்கு நேரக்கூடிய நஷ்டத்துக்கு ஈடு பெறுவதற்காக முன் கூட்டியே ஒரு குறிப்பிட்ட தொகையைப் பல ஆண்டுகளுக்குச் செலுத்தி இன்ஷ்யூர் செய்துகொள்வதைப்போல, இந்த முறையில் வருங்காலத்தில் தனக்குத் தேவையிருக்கும்போது தன்னுடைய ஜீவன வசதியை முன் கூட்டியே விலைக்கு வாங்குகிறபடி தன் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியை உழைக்கும் தொழிலாளி விலையாகக் கொடுத்து விடுகிறான். ஆனால், இந்தத் தேசீய இன்ஷ்யூரன்ஸ் முறை, ஏற்கனவே வேலை செய்து சம்பாதித்துக் கொண்டிருக்கும் தொழிலாளிகளுக்கு மட்டிலுமே பொருந்தும். வேலையில்லாமலிருப்பவர்களுக்கு இம்முறையினால் எந்தவிதமான நன்மையும் விளையாது. அப்படி வேலையில்லாமலிருப்பவர்களுக்குப் பயன்படுவதற்காக, தேசீய உதவி முறை (நேஷனல் அஸிஸ்ட்டன்ஸ் – National Assistance) என்ற மற்றொரு முறை கையாளப்படுகிறது. பொதுவாக பெரிய தொழிற்சாலைகளில் வரையறுக்கப்பட்ட நேரத்துக்கு, ஒரு குறிப்பிட்ட தொகைக்குக் குறையாமலிருக்க வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்துக்காக, வேலைக்கால உத்தரவாதத்துடன், வேலைசெய்துகொண்டு கட்டுப்பாட்டுடன் சங்கங்கள் அமைத்துக்கொண்டு இயக்க பலத்துடன் வாழும் தொழிலாளிகளுக்கு தேசீய இன்ஷ்யூரன்ஸ் முறை அனுஷ்டிக்கப்படுகிறது ; அப்படி யில்லாமல் நிச்சயமற்ற காலத்துக்கு, ஏதோ கிடைக்கும் கூலிக்காக, வேலை அகப்படும்போது மாத்திரம் வேலை பார்க்கும் தொழிலாளிகளுக்காக தேசீய உதவி முறை அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்தச் சமுதாய வாழ்வின் உத்தரவாதம் என்ற லக்ஷியத்தை நிர்வாகத் துறையில் அடைவதற்காக, பல நாடுகளும் நீண்ட காலமாகவே, படிப்படியாக, பல சட்டங்

களை நிறைவேற்றி அவற்றை அமுல் நடத்திவருகின்றன. அவற்றில் பிரதானமானவை, பிரிட்டன் சம்பந்தப்பட்ட வரையில், பிரசித்திப்பெற்ற பெவரிட்ஜ் அறிக்கை (பெவரிட்ஜ் ரிபோர்ட்)யும், அதனைக் காரியத்தில் கொண்டு வருமுறையில், பிரிட்டிஷ் பார்லிமெண்ட் 1946-ல் நிறைவேற்றிய தேசீய இன்ஷ்யூரன்ஸ் ஆக்ட் (நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் ஆக்ட் – National Insurance Act), தேசீய சுகாதார சேவை ஆக்ட் (நேஷனல் ஹெல்த் சர்வீஸ் ஆக்ட் – National Health Service Act) ஆகிய இரண்டு சட்டங்களும் ஆகும். தேசீய இன்ஷ்யூரன்ஸ் ஆக்ட் ஒவ்வொரு ஆங்கிலேய பிரஜைக்கும் அவன் தொட்டிலி லிருந்து சுடுகாடு செல்லுமட்டும் உண்டாகும் தேவைகளுக் கேற்ப முன்னே குறிப்பிட்ட சகல உதவிகளையும் அளிக்கும் நோக்கத்துடன் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட தேசீய சுகாதார ஆக்ட்டின்படி, ஆங்கிலேய பிரஜை ஒவ்வொருவரும், தத்தமக்குண்டாகும் நோய் தீர்வதற்கான மிக உயர்ந்த வைத்திய உதவியையும் இலவசமாகப் பெறமுடியும். பணக்காரர்களால்தான் விலையுயர்ந்த வைத்திய வசதிகளைப் பெறமுடியும், ஏழைகளால் முடியாது என்ற நிலை மறைந்து, எந்தவிதமான வித்தியாசமுமின்றி, எத்தகைய வியாதிக்கும் மருத்துவக்கலை உதவியிருக்கும் மிக உயர்ந்த பரிகாரத்தை யும், இந்தச் சட்டத்தின்படி எந்த ஆங்கிலேய பிரஜையும் பெறமுடியும். நோய்க்கும், தேவைக்கும் தக்கபடியே, வைத்தியமும் உதவியுமேயன்றி, அந்தஸ்துக்கும் செல்வாக் குக்கும் தக்கபடியல்ல. பொருளாதாரத்துறையில் தேசீய இன்ஷ்யூரன்ஸ் ஆக்டும், சுகாதாரத்துறையில் தேசீய சுகாதார சேவை ஆக்டும் பிரிட்டிஷ் மக்களின் சமுதாய வாழ்க்கையில் புரட்சிகரமான மாறுதல்களை உண்டு பண்ணக்கூடியவை. இந்த இரண்டு சட்டங்களும்

பூரணமாக அமுலுக்கு வந்து, அவற்றின் பலனை அந் நாட்டுமக்கள் அநுபவிக்கும்போது, பிரிட்டிஷ் சமுதாய வாழ்க்கையே புதிய உருப்பெற்று விளங்கும்.

நம்முடைய நாட்டின் நிலைமையோ, உலகின் பல நாடு களின் நிலைமையை விட மிக மிகக் கேவலமானது. நீண்ட காலத்திய அந்நிய ஆட்சியின் கீழ் நம் நாட்டுமக்கள் வெள்ளையரால் சுரண்டப்பட்டதைத்தவிர, சமுதாய வாழ்வு என்பதையோ, அதன் நலன் என்பதையோ நன்கு உணர் வதற்குச் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. இப்போதுதான் சுதந் திரமடைந்திருக்கும் நாம் இனித் தான் நம்முடைய சமுதாய வாழ்க்கையைச் செப்பனிட்டுச் சீர்ப்படுத்த முற்படவேண் டும். இந்திய சமுதாய வாழ்வை ஸ்திரப்படுத்தும் நோக்கத் துடன் எடுத்துக்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும் இந்த நாட்டின் விசேஷ நிலைமைகளுக்குப் பொருத்தமான தாக இருக்கவேண்டும். யாரையும் திடுக்கிடச் செய்யக் கூடிய இந்த நிலைமைகளில் முதலிடம் பெறக்கூடியது இந்திய மக்களின் பயங்கரமான வேலையில்லாக் கொடுமை யும் அதனுடன் பிறந்து வாழும் சகிக்க முடியாத வறுமைப் பிணியும். ஆகையால், தேசீய இன்ஷ்யூரன்ஸ் முறையை விட தேசீய உதவி முறைதான் இந்தியாவுக்குப் பிரதான மாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம். இரண்டாவதாக, இந்நாட்டுமக்களில் மிகப் பெரும்பான்மையோர் கிராமங்களி லேயே வசிக்கிருர்கள். 1941-ம் வருஷத்திய ஜனசங்கியைக் கணக்குப்படி, இந்தியாவின் ஜனத்தொகையில் 97·2 சத விகிதம் கிராமவாசிகளே. ஆகையால், இந்திய சமுதாயத் துக்காக நிர்ணயிக்கப்படும் திட்டம் விவசாயிகளுக்குப் பூரணமாக உதவக்கூடியதாகவும், கிராமங்களில் வசிக்கும் மக்களை நகரங்களுக்கு இழுத்து ஏற்கனவே நெருக்கடியாக இருக்கும் உணவு நிலைமையை இன்னும் மோசமாக்காத தாகவும் இருக்கவேண்டும். மூன்ருவதாக, கிராமக்குடி

யரசின் அடிப்படையின் மேலேயே இந்தியாவின் எந்த திட்டமும் வரையறுக்கப்படவேண்டும். தங்களுடைய அன்றாடத் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளும்படியாக, மத்திய அரசாங்கத்தின் மேல் அதிகமாகச் சார்ந்திராமல், உண்மையான அதிகாரத்தைத் தங்கள் கையில் வைத்துக்கொண்டு பூரண சுயாட்சியுடன் வாழ்ந்து வந்த பண்டை கிராமங்களின் மரபு நம்முடைய நாட்டு மக்களின் மனத்திலிருந்து இன்னும் மறைந்துவிடவில்லை. உண்மையான ஜனநாயக ஆட்சியின் கீழ், நாட்டில் வாழும் ஒவ்வொரு மகனும், தான் சுதந்திர புருஷனாகவும், அதிகாரத்தில் பங்கு பெற்றவனாகவும் இருப்பதாக உணர வேண்டுமானால், அரசியல் அதிகாரமும், பொருளாதார அதிகாரமும் ஒரு மத்திய ஸ்தானத்தில் ஒதுங்கி, மண்டித்தேங்கிக் கிடக்காமல் மக்கள் அனைவரிடமும், நாடு முழுவதிலும் பரந்து, பிரிந்து, ஒருங்கே வசித்து வளரவேண்டும். கிராம சுயாட்சி முறைப்படிதான் இந்த லக்ஷியத்தை அடைய முடியும். ஆகையால், இக்கால விஞ்ஞான வளர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு, கிராமங்களை இந்தியாவின் பிரதான அங்கங்களாக்கி, அக்கிராம மக்கள் முடிந்தவரையில் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய நிலையை இந்த நாட்டுக்காக நிதானிக்கப்படும் எந்தத் திட்டமும் உண்டு பண்ணவேண்டும். சமுதாய வாழ்வுக்குப் பாதுகாப்பளிப்பது என்ற முயற்சியின் முதற்படியாக இந்திய பார்லிமெண்ட் தொழிலாளிகளின் தேசீய இன்ஷ்யூரன்ஸ் ஆக்ட், (எம்பிளாயீஸ் ஸ்டேட் இன்ஷுரன்ஸ் ஆக்ட்-Employees' State Insurance Act) என்ற சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. பெரும்பாலும் பிரிட்டிஷ் சட்டத்தையே இது பின்பற்றினாலும், இது நகரங்களில் இருக்கும் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்களுக்கே

உதவும். அப்படி வேலை செய்பவர்களில் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய்க்குக் குறைவாகச் சம்பாதிப்பவர்கள் தேசீய இன்ஷ்யூரன்ஸ் நிதிக்கு எதுவும் கொடுக்கவேண்டியதில்லை. முன்னே கூறப்பட்டபடி இந்திய மக்களில் 97·2 சதவிகிதம் கிராமங்களில் வசிக்கும்போது, அவர்களுக்கு உதவாத இந்தச் சட்டம் சமுத்திரத்தில் பெருங்காயத்தைக் கரைத்ததுபோலத்தான் என்றாலும், இந்தியாவின் வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவைப்பற்றிச் சிந்திக்கும்போது, வேலையில்லாத அனைவருக்கும் உதவியளிக்க இதுவரையிலும் நடைமுறையிலிருக்கும் தேசீயச் செல்வம் போதாது என்பது தெளிவு. ஆகவே, தேசீயச் செல்வத்தை அதிகப்படுத்துவதற்குரிய ஒரே வழியான பொருள் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியைப் பலப்படுத்தவேண்டும். அந்த முயற்சியின் காரணமாகவே, வேலையில்லாமையின் குறைவும் ஒருங்கே படிப்படியாக, தொடர்ந்து நிகழுமானால், இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் உதவியளிக்கக் கூடியதோர் விரிவான திட்டத்தை இந்திய சர்க்கார் அமுல் நடத்த முடியும். சுகாதாரம் சம்பந்தமான போர் (Bhore) கமிட்டியின் அறிக்கை இருக்கிறது. கல்வி சம்பந்தமாக சார்ஜண்ட் அறிக்கையும் நம் மாகாண சர்க்காரின் பல திட்டங்களுமிருக்கின்றன. இன்னும் பல துறைகளிலும் அபிவிருத்தி உண்டாக்கக்கூடிய பல திட்டங்கள் ஏட்டில் இருக்கின்றன. ஆனால், பொருளுற்பத்தியின் பெருக்கமும், மக்கள் மனத்தில் அவர்களுடைய சமுதாய வாழ்வைப் பற்றியதோர் புதிய உணர்ச்சியுமே அத்திட்டங்களுக்கு எல்லாம் உயிர் கொடுக்க முடியும்.

ஜனநாயக சர்க்கார், அது ஆளும் மக்களின் பிரதிநிதி என்பது ஜனநாயகக் கருத்தினுடைய அடிப்படை. ஆகையால், மக்கள் தங்கள் உணர்ச்சியால் உண்டாக்கும்

உயிருக்கு அரசாங்கம் தன் முயற்சியால் உருவமளிக்கலாமேயன்றி, மக்களின் ஒத்துழைப்பில்லாமல் அரசாங்கம் தானாகவே ஒன்றும் செய்ய முடியாது. என்வே, மக்களின் சமுதாய உணர்ச்சியே இத்திட்டங்கள் யாவற்றுக்கும் அடிப்படை, ஆதாரம், மூலம். ஒரு நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் தாங்கள் ஒரே குடும்பமென்பதை உணரவேண்டும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் யாரும் தேவையுண்டானபோது உதவியற்று இருக்கக்கூடாது. செங்கற்களை ஒன்றுக்குமேல் ஒன்று வரிசையாக அடுக்கிவிடுவதனால் மாத்திரம் ஸ்திரமான சுவரொன்றை எழுப்பிவிட முடியாது. ஒரு கல்லுக்கும் மற்றொரு கல்லுக்குமிடையே வைக்கப்படும் சுண்ணும்போ, களிமண்ணோதான் சுவருக்கு ஸ்திரத்தையும், உறுதியையும், நிலைப்பாட்டையும் கொடுக்கிறது. அதேபோலத்தான், ஒரு நாட்டு மக்களிடையே ஒருவருக்கொருவர் காட்டிக் கொள்ளும் பரஸ்பர அன்பு, இரக்கம், அநுதாபம் முதலிய பொற்குணங்கள் தாம் சமுதாயமென்ற உறுதிவாய்ந்த சுவரை யெழுப்புகின்றன. உயிரளிக்கும், வளர்ச்சியூட்டும் இவ்வுன்னதப் பண்புகளை மறந்துவிட்டு, தனி மனிதர்களும் சிறு வகுப்புகளும் சுயநலக்காரர்களாகவும், பேராசை கொண்டவர்களாவும் ஆனதே சமூகத்தின் எல்லா இன்னல்களுக்கும் காரணம். தங்களுடைய உண்மையான இயற்கையை யுணர்ந்து மக்கள் அன்பும் அமைதியும் தவழும் வாழ்க்கையை என்று நடத்தத் தொடங்குகிறார்களோ, அன்றுதான் உண்மையான சமுதாய உணர்ச்சி உண்டாகும். அந்த உணர்ச்சியிலிருந்து சமுதாய சுபிக்ஷம் தானே பிறக்கும். அப்போது ஜன நாயகம் தன்னுடைய பூரணப் பொலிவுடனும், ஒளியுடனும் திகழும்.

# 4. பசு

இந்திய நாட்டு மக்கள் பசுக்களுக்கு ஆதிகாலந் தொட்டே ஒரு விசேஷ அந்தஸ்து கொடுத்து வந்திருக்கிருர்கள். பசுக்களிடத்தில் அவர்கள் காட்டிவந்த வாஞ்சையும், கருணையும், விசுவாஸமும் ஆச்சரியப்படத் தக்கனவாக இருந்தன. இந்த அன்பு பரம்பரையாகத் தொடர்ந்து ஆழமாகப் பதிந்து வந்ததன் காரணமாக அது இந்திய மக்களின் வாழ்க்கைப் பண்பின் பிரிக்கப்பட முடியாத ஓர் அம்சமாகவே ஆகிவிட்டது. கதம்பத்தில் கலந்துள்ள வெவ்வேறு விதமான மலர்களையும் இணைத்துப் பிடித்துக் கொண்டிருக்கும் ஒரே நார்போல, வாழ்க்கையின் எல்லா அங்கங்களிலும் பரந்து பற்றிக்கொண்டிருந்த அவர்களுடைய மத உணர்ச்சி, பசுக்களிடத்தில் அவர்கள் காட்டிய அபிமானத்திலும் இடம் பெற்றது. கடவுளால் படைக்கப்பட்ட எல்லாப் படைப்புக்களும் கடவுளின் அம்சமே எனக் கொண்டிருந்த மக்கள், பசுக்களையும் தெய்வமாகப் பூஜித்திருந்தாலும் அதனுல் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. கடவுளை கருணை வடிவாகவும், அன்பு வடிவாகவும், அருள் வடிவாகவும் காண்பது தங்களுடைய செயலற்ற தன்மையை உணர்ந்த பக்தர்களின் ஞான முடிவாக இருந்தது. அந்தத் தெய்வப் பண்புகளைக் கொண்டனவற்றை யெல்லாம் தெய்வத்தின் அம்சமாகவே கொண்டாடுவது அந்த முடிவின் அடுத்தபடி.

பசுவோ சாந்தத்தின் வடிவமாக இருக்கிறது; பொறுமையின் பூஷணமாக இருக்கிறது; மனிதனின் உடல் வளர்ச்சிக்குப் பால் தந்து உதவுகிறது; ஆதி மனிதனின் முதற்ருெழிலான வேளாண்மைக்கு இன்றியமையாததாக

சென்னையிலிருந்து வெளியாகும் "பாரிஜாதம்" என்ற சஞ்சிகையின் 15—11—49 இதழில் இக்கட்டுரை பிரசுரமாயிற்று.

இருந்தது. பசுவின் இப்பண்புகளேயும் உதவிகளேயும் நன்கு உணர்ந்திருந்த நன்றி மறவாத மக்கள் அதற்கு விசேஷ அந்தஸ்தையும் விசேஷப் பெருமையையும் கொடுத்திருந்தார்கள்.

அக்கால மக்கள் பசுவுக்கு தெய்வத் தன்மை கற்பித்து அதனைப் பூஜித்து வந்தது வடிகட்டின மடத்தனம் என்று திட்டமாக அடித்துப் பேசும் இக்காலப் பகுத்தறிவுவாதிகளும், பசுவினுல் உண்டாகும் அளவு கடந்த நன்மைகளே ஒத்துக் கொள்கிருர்கள்; தேசத்தின் பொருளாதார அமைப்பில் அது பெற்றிருக்கும் இடத்தின் காரணமாக அது விசேஷப் பாதுகாப்புக்கு உரியது என்பதைப் புள்ளி விவரங்களுடன் ஆதாரங் காட்டி விவாதஞ் செய்து நிலே நிறுத்துகிருர்கள். ஆகையால் மனிதர்களின் விசேஷப் பாதுகாப்புக்கும், பெருமைக்கும் இன்று பசு உரியதாக இருக்குமாகுல், அதற்குக் காரணம் பசுவினுல் மனிதர்கள் அடையும் நன்மையும் பயனுமே.

பசு பால் கொடுத்துக்கொண்டிருக்கும் காலமட்டுமே, அதைக் கட்டிவைத்துப் பாதுகாத்து, மேயவிட்டு, ஆகாரம் கொடுத்து அதனைப் போஷிக்கிருேம். மரத்துப்போய் அது பால் கறப்பது நின்றவுடன் அதனே அடித்து விரட்டிவிடுகிருேம். அப்படிச் செய்யாமல் அதைக் கட்டி வைத்திருந்தாலும், முன்னே அதற்கிருந்த போஷணே இப்போது இல்லே. இந்த அரைகுறை போஷணேயும் மறுபடியும் அந்தப் பசு கன்றீன்று பால் கொடுக்கும் காலம் வரும் என்ற நம்பிக்கையைப் பெரும்பாலும் அடிப்படையாகக் கொண்டது. நமக்குப் பேருதவி புரியும் இனத்தைச் சேர்ந்த பசு பட்டினி கிடந்து சாகக்கூடாது என்ற ஜீவகாருண்ய உணர்ச்சியும் இந்தப் போஷணேக்குக் காரணமாக இருக்கலாம். ஆனுல் பசுவை மனிதர்கள் கட்டிக் காத்துப் போஷிப்பது ஜீவகாருண்ய உணர்ச்சியினுல் மாத்திரமல்ல;

இந்தப் போஷணையினால் அது வளர்ந்து நமக்கு உதவ வேண்டும் என்ற அவாவும் இன்றியமையாத காரண மாகிறது.

இத்தகைய பசுவின் நிலையை ஒத்த மனிதர்கள் பலர் ஒவ்வொரு சமூகத்திலும் இருக்கிறார்கள். சமூகத்துக்கு அவர்கள் திருப்பி உதவ வேண்டும் என்று எதிர்பார்த்து, சமூகம் அவர்களைப் போஷிக்கிறது. தன்னுடைய உழைப் பின் பலனாகிய செல்வத்தைச் சிலருடைய கையில் கொடுத்து அவர்களைச் சமூகம் செல்வந்தர்களாக்குகிறது; வேறு சிலருக்கு அறிவுப் பயிற்சி அளித்து கல்விமான் களாகவும், அறிஞர்களாகவும் ஆக்குகிறது; இன்னும் சிலரின் கையில் சமூகத்தின் ஆட்சிப் பொறுப்பின் அதி காரத்தைக் கொடுத்து அவர்களை மந்திரிகளாக ஆக்கு கிறது. இவர்களெல்லாம் சமூகப் பசுக்கள்; சமூகத்தால் பாதுகாத்துப் போஷிக்கப்படுபவர்கள்; ஆகையால் சமூகத் துக்குப் பாலென்ற போஷணையைக் கொடுத்து உதவக் கடமைப்பட்டவர்கள்.

பள்ளிக்கூடத்திலும் கலாசாலையிலும் படித்துப் பட்டம் பெற்று அறிஞனாகவும், பெரியோனாகவும் திகழும் ஒருவன் தன் தந்தையின் சொத்திலிருந்து தான் செலுத்தும் சம்ப ளத்தினால் மாத்திரம் அந்தக் கல்வியையும் பெருமையையும் பெற்று விடுவதில்லை. அவன் செலுத்திய சம்பளத்தைப் போல் பன்மடங்கு சமூகம் நேரடியாகவோ, அதனுடைய பிரதிநிதியாகிய சர்க்கார் மூலமாகவோ அவனுடைய கல் விக்காகச் செலவிடுகிறது.

லக்ஷாதிபதியாகும் ஒருவன் தன்னுடைய உழைப்பி னாலும் திறமையினாலும் மாத்திரம் அந்தத் தனத்தை அடைந்துவிடுவதில்லை. சமூகத்திலிருக்கும் ஆயிரக்கணக் கான பிறரின் உழைப்பும் திறமையும் இவனுடைய இந்தச் செல்வம் இவனை வந்து சேர்வதற்குக் காரணமாகின்றன.

ஆட்சியின் தலைமைப் பொறுப்பிலிருக்கும் ஒருவனுடைய அதிகாரம் அவன் உழைப்பினாலோ, திறமையினாலோ மாத்திரம் உருவானதல்ல. தன்னைத்தானே ஆண்டுகொள்ளும் தனக்குள்ள உரிமையைச் சமூகத்திலுள்ள ஒவ்வொருவனும் இவனுடைய கையில் ஒப்படைத்திருக்கிறான்.

இச்சமூகப் பசுக்கள் உயிர் வாழவேண்டும்; ஆனால் அவர்கள் உயிர் வாழ்வதற்காக மாத்திரம் அவர்கள் சமூகத்தால் போஷிக்கப்படவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

கலாசாலையில் இடம் பெற்றுப் புகுபவனின் பெயர் எதுவானாலென்ன? ஜாதி எதுவானாலென்ன? மதம் எதுவானாலென்ன? அவன் கல்வியின் பலனைச் சமூகம் முழுவதற்கும் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையின் மேல் சமூகம் அவனுடைய கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறது. அவன் தான் பெறும் கல்வியின் காரணமாக உளக்களிப்பெய்துகிறான்; அறிவுத் தெளிவு பெறுகிறான்; ஆத்மசாந்தியடைகிறான். ஆனால், அதோடு அவன் நின்றுவிட முடியாது; நின்றுவிடக் கூடாது. தான் பெற்ற இன்பத்தை தன் சமூகமும் பெறச்செய்ய வேண்டும்—இல்லை, இந்த வையம் பெறச்செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அவனை விரட்டி வெளியேற்றுவதற்குச் சமூகத்துக்கு உரிமையுண்டு.

உத்தியோகம் சமூகத்தின் மேல் ஆட்சிப் பொறுப்பைச் செலுத்துவதற்குச் சாத்தியமாக்கப்பட்டதொரு ஸ்தானம். அங்கு அனுப்பப்பட்ட எவனும் எந்த சமூகத்தின் பிரதிநிதியாக இருக்கும் சர்க்காரின் அங்கமாக அவன் இருக்கிறானோ அந்த சமூகத்தின் ஊழியன்; ஏவலாளன்; அந்த சமூகத்துக்குக் கடமைப்பட்டவன்.

தன் மடியில் சுரந்திருக்கும் பால் தன் கன்றுக்கு

என்று எண்ணி மயங்குகிறது பசு. ஆனால் கன்றைப் பிடித்துத் தூரக் கட்டிவிட்டுப் பாலைக் கறந்து கொள்கிறான் மாட்டுக்காரன். தினமும் இது நடக்கிறது; ஆனால் பசுவின் மயக்கமும் தெளிவதில்லை; மாட்டுக்காரன் தன் வேலையை நிறுத்துவதுமில்லை. தன் கன்றுக்கே பாலைக் கொடுக்கப் போகிறது என்று பசுவின் மேல் கோபித்துக் கொண்டு மாட்டுக்காரன் அதனை விரட்டி விடுவதில்லை; பசுவின் பாலைக் குடிக்கப் போகிறது என்று ஆத்திரங் கொண்டு கன்றை அவன் கொன்றுவிடுவதில்லை. கன்று உயிரோடு இருப்பது பசுவிலிருந்து பால் கறப்பதற்கு அவசியம். ஆனால் கன்றுக்கே எல்லாப் பாலையும் விட்டு விடாமல், தன் போஷணையின் பிரதிபலனாகப் பாலைத் தான் கறந்து கொள்வதற்கு அவனுக்கு வழி தெரியும்; அப்படியே செய்கிறான்; அதுதான் நியாயமென்றும் அவன் கருதுகிறான்.

சமூகப் பசுக்களும் அப்படியே. ஊரின் நடுவிலே இருக்கிறது நன்னீர்க் குளம். அதுதான் ஊருணி; ஊரார் அனைவருக்கும் குடிநீர் வார்க்கும் குளம். இன்று அதில் தண்ணீர் இல்லை, வறண்டுகிடக்கிறது. அதில் நீர் நிறைந்துவிட்டால் போய் அள்ளிப்பருக நான் யாரை யாவது அனுமதி கேட்கவேண்டுமா? அந்த நீரைத் தகாத முறையில் நான் வீணாக்க முற்பட்டால் அதைத் தடுக்க வேலியும் காவலும் உண்டு. அதை நியாயமான தேவைக்கு உபயோகிக்க யாருக்கும் உரிமையுண்டு; அதைத் தடுப்பதற்கு யாருமில்லை; இருக்கக்கூடாது. அப்படி நீர் நிறைந்த ஊருணிதான் உலக நடையை விரும்பும் செல்வந்தன். அவன் செல்வம் மக்களுடைய வேட்கையை நீக்குவதற்காக அவன் கையிலிருக்கிறது; மாட்டேன் என்பதற்கு அவனுக்கு உரிமையில்லை. அதைத்தான் வள்ளுவரும்,

ஊருணி நீர் நிறைந்தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.

என்று கூறினர்.

ஊரின் நடுவே உயர்ந்து படர்ந்து வளர்ந்திருக்கும் மாமரம் நிற்கிறது. நிழலுக்காக வழிப்போக்கர்கள் ஒதுங்குகிறார்கள். சிறுவர், சிறுமியர் ஆனந்தமாக அதன் கிளைகளில் ஏறி விளையாடுகிறார்கள். அது பூத்துக் காய்த்துக் குலுங்குகிறது. பசுமையும், செம்மையும், மஞ்சள் நிறமும், மணமும், கிளிகளையும் அணில்களையும் கூவியழைக்கின்றன. இன்னும் அதைக் குத்தகைக் கெடுத்து, வேலி போட்டு, காவலேற்படுத்தி, பணம் சம்பாதிக்க யாரும் முன்வரவில்லை. ஊரார் அனைவரும் அதன் பழத்தை உண்டு களிக்கிறார்கள். அப்படிச் செய்பவர்களை வெளியார் யாரும் தடுப்பதில்லை; அவர்களும் தங்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொள்வதில்லை. மரத்துக்குத் தீங்கு விளைக்காமல், அதன் பாதுகாப்பை ஊரார் அனைவரின் பொதுப் பொறுப்பாகவும் கொண்டு, அதனுடைய பலனை மாத்திரம் அவர்கள் உண்டு வாழ்கிறார்கள். அத்தகைய மரந்தான் உணர்ச்சியுள்ளம் படைத்த செல்வந்தன். அவனுடைய செல்வம் பிறருடைய பசியைத் தீர்ப்பதற்காகவே இருக்கிறது. அவன் தன் பசியையும் தீர்த்துக் கொள்ளவேண்டும். தன்னுடைய செல்வத்தை அவசியமானால் பிறருடைய பசியைத் தீர்ப்பதில் செலவழிப்பதற்கு அவன் முற்படும் வரையில் அவனுடைய பசியைத் தீர்ப்பது நன்றியுள்ளம் படைத்த அந்த சமூகத்தின் பொறுப்பு; பொறுப்பு மாத்திரமல்ல, புனிதமான கடமையும்கூட. மறுபடியும் வள்ளுவரையே கேளுங்கள் :

பயன் மரமுள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம்
நயனுடை யான்கட் படின்.

நோயற்ற வாழ்வையே குறைவற்ற செல்வமாக மனித வர்க்கம் என்றும் கருதி வந்திருக்கிறது. ஆனால், நோயற்ற வாழ்வு மனித வர்க்கத்துக்கு என்றும் அமைந்ததேயில்லை. முயற்சியில் குறையாத மனிதன், வந்த நோய்க்கு மருந்து தேடும் வேலையை அடுத்தபடியாக மேற்கொண்டான். அந்த மருந்தும் கிடைத்துவிட்டது. 'பணத்தைக் கீழே வைத்துவிட்டு என்னிடத்தில் பேசு' என்று கூறும் டாக்டர்கள் நிறைந்த நாகரிக காலம் அல்ல அது. ஆகையால், அவன் மருந்தைக் கண்டது ஊருக்குள்ளே நின்றதொரு மரத்திலேதான். என்ன ஆச்சரியம்! அந்த மரத்தின் எந்தப் பாகமும் நோய் போக்கும் ஆயாக இருக்கிறது. அது மாத்திரமல்ல, என்றுவது அது பிணியைத் தீர்க்கத் தவறியதுண்டா? அதுவுமில்லை. அத்தகைய மரம் இருக்கும்போது நோயைக் கண்டு மனிதன் ஏன் பயப்படவேண்டும்? பெரிய தகைமையை உடையவனிடம் செல்வம் வாய்த்திருக்கும்போது, பிறர் வறுமையைப்பற்றி ஏன் பயப்படவேண்டும்? மறுபடியும் வள்ளுவரே விதிவகுக்கிறார் :

மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

மாட்டுக்காரனுடைய தேவை பெருகிக்கொண்டே யிருக்கிறது. பசு உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக் கூடாது.

வயது வந்தோர்க்கு வாக்குரிமை அளிக்கப்பட்டு விட்டது. அறிஞர்களும், கல்விமான்களும், கலைவாணர் களும் தங்கள் செல்வத்தைச் சமூகத்துடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். இல்லாவிட்டால், அவர்கள் நாச மடைவதோடு, இந்நாட்டின் அரசியல் எதிர்காலத்தையும் அறியாமையினிடம் அடமானம் வைத்தவர்களாவார்கள்.

ஜனநாயகமே நம் அரசாங்கத்தின் அடிப்படை

யென்று அறுதியிட்டு முடிவுகட்டி இருக்கிறோம். ஆளப்படும் ஒவ்வொருவனும் நடக்கும் ஆட்சி தன்னுடைய நன்மைக்காக, தன்னுடைய சம்மதத்துடனேயே நடக்கிறது என்று உணரும் வரையில் உண்மையான ஜனநாயகம் தோன்ற முடியாது. ஆட்சி ஸ்தானத்தில் இருந்து நிர்வாகத்தை நடத்துவோரின் வெற்றியையும் தோல்வியையும், பெருமையையும் சிறுமையையும் ஆளப்படும் ஒவ்வொருவனும் தன்னுடையதாகக் கொள்ளும் சூழ்நிலை உண்டாகாத வரையில் ஜனநாயகம் பிறக்க முடியாது. மந்திரிகளும், சர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்களும், தங்களுடைய கையிலிருக்கும் அதிகாரம் மக்களுடைய நன்மைக்காக உபயோகிக்க அந்த மக்களாலேயே ஒப்படைக்கப்பட்ட தென்பதை யுணர்ந்து, அந்த உணர்ச்சியின்படி நடக்காவிட்டால், நேற்றுத் தோன்றிய சுதந்திரம் நாளை பறிபட்டுப் போகும். மரத்துப்போன பசுவை விரட்டிவிடுவதற்கு மாத்திரமல்ல, ஒழித்து விடுவதற்கே தனக்கு உரிமையிருக்கிறது என்று மாட்டுக்காரன் கோரும் காலம் வந்தாலும் வரக்கூடும்.

மூடி இருக்கும் கதவை வேகத்துடனும் ஆத்திரத்துடனும் தட்டிக்கொண்டிருக்கும் பொதுவுடைமையைக் கதவைத் திறந்து, சமாதானம் செய்யாவிட்டால், அது கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்து எல்லாவற்றையும் மண்ணோடு மண்ணாக்கிவிடக்கூடும். செல்வத்தைச் சேர்த்து வைத்திருப்பவர்கள் தாராளமாகவும், கண்ணியத்துடனும், இயற்கையாகவே பிறருடன் பகிர்ந்து கொள்ள முன் வராவிட்டால், இன்று அடிக்கும் புயல் சூறாவளியாக மாறி எல்லாவற்றையும் தரையோடு தரையாக ஆக்கிவிடும்.

அன்புத் தெய்வமானவர் காந்தி; ஆகையால்தான், செல்வந்தர்கள் இந்நாட்டின் கோடிக்கணக்கான ஏழை

மக்களின் தர்மகர்த்தாக்களாகத் தங்களை மதித்துச் செல்வத்தைச் செலவு செய்யவேண்டுமென்று எச்சரித்தார். பசுவின் பாலைப் பருகாத காந்தி, பசுவின் பாதுகாப்பை வற்புறுத்தியதோடு நின்றுவிடவில்லை. எல்லாவிதமான சமூகப் பசுக்களையும் அவர் நேசித்தார். அதனால்தான் அவர்கள் நன்மையை உத்தேசித்து அவர்களுடைய கடமையை அவர்களுக்கு எடுத்துக் காட்டி, அதை அவர்கள் மறப்பதனால் அனைவருக்குமே உண்டாகும் அபாயத்தைச் சுட்டிக்காட்டி எச்சரித்தார்.

TAMIL NADU ARCHIVES
108773

## 5. இந்தியரின் தாராள மனப்பான்மை

ஒரு விதையைப் பூமிக்குள் புதைக்கிறோம். அது முளைத்து, வளர்ந்து, மரமாகிப் பலனளிப்பதற்கு அது அந்த வித்துக்குள்ளிருக்கும் சத்துப்பொருளை மாத்திரம் சார்ந்திருப்பதில்லை. அப்படிச் சார்ந்திருக்குமானால், அது மடிந்து போகும். தன்னைச் சுற்றியிருக்கும் மண், நீர், காற்று ஆகியவற்றிலிருந்தும் தன் வளர்ச்சிக்கு வேண்டிய உணவுப் பொருளை எடுத்துக் கொள்கிறது. அப்படி எடுத்துக்கொண்டு வளர்ந்தாலும் அந்த விதை தன்னுடைய இயற்கையிலிருந்து மாறுபட்டுப் போவதில்லை. விரை யொன்று போட்டால் சுரையொன்று முளைப்பதில்லை. இப் படியாக, பூமிக்குள் புதைக்கப்படும் வித்தொன்று தன் னுடைய இயற்கையையும் விட்டுவிடாமல், வெளியிலிருந்து தனக்கு வேண்டிய உணவுப் பொருளை எடுத்துக்கொண்டும் வளர்கிறது. இப்படியேதான் ஒரு மனிதனும், ஒரு சமூக மும் வளர்வதற்கும் வாழ்வதற்கும் வெளியுறவு இன்றி யமையாதது. வாழ்வுக்கும் முன்னேற்றத்துக்கும் அத்தியா வசியமான யாவும் தன்னிடமே இருக்கின்றன, பிறவிடத் தில் தேடவேண்டியதில்லை என்று அகந்தையும், இறுமாப் பும் கொள்ளும் எந்த மனிதனோ, சமூகமோ, சமயமோ உண்மையான வளர்ச்சியடைய முடியாது. முடிவில் அது நலிந்து, நசித்து, மாண்டொழிந்து போகும். ஆகையால் உண்மையான நாகரிகம் நிலை பெறுவதற்கு

---

"உலக நாகரிகத்துக்கு இந்தியாவின் பணி" என்ற தொடரில் "இந்தியரின் தாராள மனப்பான்மை"யைப் பற்றிய இப்பிரசங்கம் 7—6—1947-ல் அகில இந்திய ரேடியோவின் டில்லி நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது. பின்னர், அகில இந்திய ரேடியோவின் அனுமதி யுடன் "குமரி மல"ரின் 1947-ம் ஆண்டு ஜூலை மாத இதழில் பிரசுர மாயிற்று.

VI

எங்கிருந்தும் கற்றுக்கொள்வதற்கும், எதிலிருந்தும் சத்தியத்தைத் தேடி அங்கீகரித்துக் கொள்வதற்கும் முற்படும் தாராள மனப்பான்மை இன்றியமையாததாகும்.

இத் துறையில்தான் உலக நாகரிகத்துக்கு இந்தியா மகத்தான சேவை செய்திருக்கிறது. புராதன இந்திய நாகரிகம் அழிந்து போகாமல் இன்றும் ஒப்பற்ற பெருமையுடனும் இணையற்ற செழுமையுடனும் சிறந்து விளங்குவதற்கு அதனுடைய தாராளப் போக்கே காரணம். இந்தியா எதையும் ஒதுக்கித் தள்ளியதில்லை. எதிலும் உண்மையைக் காண முயன்றது. அப்படிக் கண்ட உண்மையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டது. ஒவ்வொருவனுக்கும் ஒரு தர்மமுண்டு. ஒவ்வொருவனும் அவனவனுடைய தர்மத்தைச் செய்வது உலக நன்மைக்கு அவசியமாகும். ஆகையால் அவைகளுக்குள்ளே உயர்வு தாழ்வு என்பதில்லை. எனவே எல்லாத் தர்மங்களும் ஏற்றுக் கொள்ளப் படவேண்டும் என்பதுதான் இந்தியாவின் தத்துவம்; இந்தியாவின் தர்மம். இதுதான் இந்திய நாகரிகத்தின் அஸ்திவாரம்; அதன் பண்பாட்டின் ஆணிவேர்; அதன் வாழ்க்கையின் ஜீவ நாடி. அதனுலேதான், “ நன்கியற்றப் படும் பிறருடைய தருமத்தினும், குணமற்றதாயினும் தன்னுடைய தருமமே மேலானது; தன்னுடைய தருமத்திலே சாதலும் நன்று, பிறருடைய தருமம் அச்சமே தரும் ” என்று பகவத் கீதை கூறுகிறது. சமூகம் தாழ்வதற்கு ஒவ்வொருவரும் அவரவருடைய கடமையைச் செய்தாக வேண்டும். எல்லாக் கடமைகளும் ஒருங்கே நிறைவேற்றப் பட வேண்டுவது அவசியம். ஆகையால் ஒருவன் தன் கடமையை விட்டுப் பிறர் கடமையிற் புகுவதனுல் சமூகம் சிதைந்து போகக் கூடும். எனவே, எல்லாத் தர்மங்களின் அவசியத்தையும், சிறப்பையும் ஏற்றுக்கொண்டு ஒவ்வொருவரும் தத்தம் தர்மத்தை நிறைவேற்ற வேண்டும். இதுதான்

இந்தியா உலகுக்குக் கற்றுக் கொடுத்த ஒப்பற்ற பாடம்; உலக நாகரிகத்துக்களித்த இணையற்ற கொடை. இந் நாட்டிலே தோன்றிய சமயங்கள், பிறந்த பெரியார்கள், உதித்த இலக்கியங்கள் யாவும் இதே பாடத்தைத் தான் போதிக்கின்றன.

அழியாப் பொருளாக இருப்பவன் இறைவன் ஒருவனே; அவனுடைய சிருஷ்டிகள் அனைத்தும் ஒரே சகோதர தத்துவத்தைச் சேர்ந்தவையே; அந்த ஒரே பரம்பொருளைத் தான் மக்கள் பல பெயர் கொண்டு அழைக்கிறார்கள். இதுதான் இந்தியாவின் புராதனக் கொள்கை. ஆகையால், வெளியிலிருந்து வந்த சமயங்களையும், நாகரிகங்களையும் வெறுத்துப் போரிட்டுத் துரத்தாமல், அவற்றை வரவேற்று, ஆராய்ந்து, அவற்றிலுள்ள உண்மை களை ஏற்றுக்கொண்டு தன்னுடையதாகவே இந்தியா ஆக்கிக்கொண்டிருக்கிறது. பல சமயங்களும், நாகரிகங் களும் வேறு எந்த நாட்டிலும் இல்லாத அளவிலே, இந்தியாவிலே மோதிக்கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த மோதலின் காரணமாக இங்கே போர் உண்டாக வில்லை. புதியதோர் ஒற்றுமையே உண்டாயிற்று. இதற்கு வேண்டிய சான்றுகள் இந்தியாவின் சரித்திரத்திலே மலிந்து கிடக்கின்றன.

"சத்தியமாக இருப்பது ஒன்றே; அதைத்தான் முனிவர்கள் பல பெயர் கொண்டு அழைக்கிறார்கள்" என்று ஆதியிலேயே ரிக்வேதம் கூறுகிறது. அதை ஒட்டித் தொடர்ந்தாற்போல, "ஒன்றாக இருக்கும் அக்னி பல தோற்றங்களைப் பெறுவதுபோல, ஒன்றாகவும் உறுதியான தாகவும் இருக்கும் ஆத்மாவும் எல்லாவற்றிலும், எல்லா மாகவும் இருக்கிறது" என்று பின்னர் வந்த சங்கரர் கூறுகிறார். இதிலிருந்து சமயங்களுக்குள்ளேயோ, மக்க ளிடையேயோ உயர்வு தாழ்வு கற்பிப்பதற்கும், வேற்றுமை

களைக் காண்பதற்கும் இடமில்லாமல் போய்விடுகிறது. ஆகையால் ஒரு மதத்தைப் பின்பற்றும் ஒருவன் பிற மதங்களை மிக்க கண்ணியத்துடனும் மரியாதையுடனும் போற்றுகிறான். இந்தியாவில் தோன்றிய புத்தமதம் பிராமணர்களுடைய ஆதிக்கத்தின் கீழிருந்த ஹிந்து மதத்துக்குப் போட்டியாகத் தோன்றியது என்பார்கள். ஆனால் இரண்டும் ஒருங்கே இந்நாட்டில் வளர்ந்திருக்கின்றன. சிறந்த பௌத்த மன்னன், அசோகன், எந்த விதமான வேற்றுமையுமின்றி, தன் ஆட்சியின் கீழிருந்த எல்லா மக்களுக்கும், தன்னைத் தந்தையாகப் பாவித்து வந்தான். "மேன்மையும் புனிதமும் தங்கிய மன்னன், எல்லா மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும், (அவர்கள் துறவிகளோ அல்லது இல்லற வாசிகளோ) கொடைகளின் மூலமாகவும் இதர வழிகளிலும் வணக்கமும் மரியாதையும் செலுத்துகிறான். ஒற்றுமை உயர்ந்தது, இதரர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் வணக்க நெறிகளுக்கு விருப்பத்துடன் செவிசாய்ப்பது உயர்ந்தது" என்று அசோகனுடைய கல்வெட்டுகளில் ஒன்று கூறுகிறது. பிராமணர்கள் பௌத்தர்களை மனமுவந்து வரவேற்றார்கள். சிறந்த சைவனாகிய ஹர்ஷ மன்னன் பௌத்தர்களுடைய சமயக் கொண்டாட்டங்கள் யாவற்றிலும் மிக்க மகிழ்ச்சியுடன் பங்கெடுத்துக் கொண்டான் என்று யாத்திரிகர்களான பாஹியான் (Fa Hian), ஹியான் சாங் (Hiuen Chang) என்பவர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள். இதே தாராள மனப்பான்மை சமீப காலத்தில் இன்னும் விசேஷமான அளவிலே வெளிப்பட்டதை நாம் யாவரும் நன்கறிவோம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் ஆகியவர்களுடைய பக்தி முறைகளையும் தாமே அனுஷ்டித்து, அவற்றின் மூலம் தாம் ஒரே நிலையையே கண்டதாகக் கூறியிருக்கிறார். மேல் நாடுகளில் நடந்ததைப் போலச் சமயப் போர்கள் இந்த

நாட்டில் நடந்ததே இல்லை. பகுத்தறிவைப் போதித்த சாக்ரட்டிஸை விஷமிட்டுக் கொன்றதைப் போன்ற சம்பவம் இந்நாட்டில் நடந்ததில்லை. சமயத்தலைவர்கள் தீக்கிரை யாக்கப்பட்டதில்லை. ஒவ்வொருவரும் அவரவர்கள் கண்ட உண்மையைத் தாரளமாகப் போதித்து வந்தார்கள். புதியதோர் விஞ்ஞான உண்மையைக் கண்டுபிடித்ததற் காக, கலிலியோ சிறையிலடைக்கப்பட்டான். ஆனால், பல மதங்களும் ஒரே மதத்தின் பல பிரிவுகளும் இந் நாட்டில் துவேஷமின்றி ஒருங்கே அமைந்திருந்தன. இந்தியாவுக்கு வெளியிலிருந்து வந்த கிறிஸ்தவர்கள், பார்ஸிகள், முஸ்லிம்கள் ஆகியவர்களும் கூட மகிழ்ச்சி யுடன் இந்தியாவால் வரவேற்கப்பட்டார்கள்.

ஜனநாயகத்தையும், மனித சகோதரத்துவத்தையும் தன் ஆட்சியிலே நடத்திக் காட்டிய இஸ்லாம் இந்திய நாகரிகத்துக்கு ஒரு புதிய பலத்தையளித்தது. 'மத விஷயங்களில் பலாத்காரமே கூடாது' என்பதை ஒரு கட்டளையாகப் பிறப்பித்த இஸ்லாத்தின் வேதமாகிய திருக்குர்ஆனை உண்மையாகப் பின்பற்றிய முஸ்லிம்கள், இந்தியாவிலும், பிற நாடுகளிலும், இதர மதங்களையும், அவற்றைப் பின்பற்றுகிறவர்களையும் மிக்க மரியாதை யுடனும், விசுவாசத்துடனும் நடத்தினார்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றிய கபீர், ஹிந்து மதத்துக்கும் இஸ்லாத்துக்கும் இடையே, அடிப்படையான வேற்றுமை கள் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகின்ற முறையிலேயே தன்னுடைய வாழ்க்கையை நடத்திவந்தார்; தம் கவிதைகளைப் புனைந்தார். அடுத்த நூற்றாண்டில் தோன்றிய அக்பர் சக்கரவர்த்தியின் ஆட்சி இந்திய சரித்திரத்திலேயே அழியா இடம் பெற்றது. இராஜபுத்திரர் களையும், ஹிந்துக்களையும் அவர் நடத்திய முறையும், இந்நாட்டிலே நிலவிய எல்லா மதங்களுக்கும் பொதுவான

அடிப்படைகளைத் திரட்டி அவற்றின்பேரில் புதியதோர் மதத்தை உண்டுபண்ணுவதற்கு அவர் செய்த முயற்சியும், அம்மன்னனின் தாராளப் போக்குக்கும், பரந்த இதயத்துக்கும் சிறந்த சான்றுகளாக என்றும் திகழும். ஹிந்து யோகிகளுடன் அளவளாவி, அவர்களுடன் ஒன்றியிருந்த முஸ்லிம் சூபிகள் எண்ணிறந்தோர். ஷாஜஹான் சக்கரவர்த்தியினுடைய மூத்த குமாரனாகிய தாரா ஷிகோ ஹிந்து மதத்துக்கும் இஸ்லாத்துக்கும் செய்த தொண்டு ஒப்புயர்வற்றது. உண்மையான மதபக்தியும், ஆண்டவனை அறிந்து அடையவேண்டுமென்ற ஆர்வமும் கொண்டிருந்த இந்த முகலாய அரசகுமாரன், ஹிந்துமதம், இஸ்லாம் ஆகிய இரண்டையும் பற்றி மிகப் பெரிய அளவில் படித்து ஆராய்ந்திருக்கிறான். சிறந்த முஸ்லிம் சூபிகளுடனும், ஹிந்து சந்நியாசிகளுடனும் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டு, பாரசீக மொழியிலும், ஸம்ஸ்கிருதத்திலுமுள்ள பல நூல்களையும் வாசித்ததோடன்றி, தானும் மத சம்பந்தமான நூல்களை இயற்றியிருக்கிறான். பகவத் கீதையையும், 50 உபநிஷத்துக்களையும் இவன் பாரசீகத்தில் மொழி பெயர்த்திருக்கிறான். இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, ஹிந்து மதத்திலும், இஸ்லாத்திலும் தான் செய்த ஆராய்ச்சியின் முடிவுகளை "மஜமவுல் பஹ்ரைன்" என்ற பாரசீக நூலாக வெளியிட்டான். "இரண்டு சமுத்திரங்களின் சேர்க்கை" என்பது அதன் பொருள். ஹிந்து, இஸ்லாம் மதங்களாகிய இரண்டு சமுத்திரங்கள் அதில் ஒன்று சேர்கின்றன. பாரசீக மொழியிலே தான் எழுதிய இந்த நூலைத் தானே "சமுத்ர சங்கம கிரந்தம்" என்ற பெயருடன் இந்த ராஜகுமாரன் ஸம்ஸ்கிருதத்திலும் எழுதினான். ஹிந்து மதத்தினிடம் தான் கொண்ட அளவற்ற அபிமானத்துக்கிடையிலும், தாரா ஒரு உண்மையான முஸ்லிமாக

இருந்து இஸ்லாமிய நெறி தவருது நடந்து கொண்டது ஒரு பெரிய விசேஷமாகும். இத்தகைய சிறந்த ராஜ குமாரன் ஷாஜஹானுக்குப் பிறகு முகலாய சிம்மாசனம் ஏற முடியாமற் போனது இந்தியாவின் பெருத்த துர திர்ஷ்டமாகும். இவ்வாருக, முஸ்லிம் மன்னர்களின் தாராளப் போக்குக்கும், ஹிந்து ஆலயங்களுக்கு அவர்கள் மானியங்கள் வழங்கியிருக்கிருர்கள் என்பதற்கும் சரித் திரத்தில் நிறைய ஆதாரங்கள் இருக்கின்றன. தென்னிந் தியாவில் மைசூரை ஆண்டு வந்த திப்பு சுல்தானும், சிருங்கேரி மடத்தைச் சேர்ந்த சங்கராச்சாரிய சுவாமிகளை, பிரிட்டிஷாருடன் தான் செய்யப் போகும் போரில் தான் வெற்றியடைவதற்காகப் பிரார்த்தித்துப் பூஜை செய்யுமாறு வேண்டிக் கொண்டானென்றும், அதற்காக மானியங்கள் வழங்கினனென்றும் சரித்திர பூர்வமாகத் தெரிகிறது. இந்தத் தாராளப் போக்கு சரித்திரத்தோடு மாத்திரம் நின்று விடவில்லை. சென்ற நூற்ருண்டின் இறுதியில் சிகாகோ நகரத்தில் நடந்த சர்வமத சபையில் பேசிய சுவாமி விவேகானந்தரும், "கிறிஸ்தவன் இந்துவாகவோ, பௌத்தனுகவோ, வரவேண்டியதில்லை. இந்துவோ, பௌத்தனே, கிறிஸ்தவனுக வேண்டுவதுமில்லை. ஒவ்வொன்றும் மற்றதனுடைய நல்லபாகங்களை உட்கொண்டு தனக்குரிய வளர்ச்சி விதியின்படி, தனது தன்மையைப் பாதுகாத்து வளருதல் வேண்டும்," என்று கூறினர். இன்று* மகாத்மா காந்தியும் அதே தாராளக் கொள்கையைத் தான் தம் வாழ்க்கையில் அனுஷ்டித்து வருகிருர். அவர் நடத்தும் பிரார்த்தனைக் கூட்டங்களில் எல்லா மத வேதங் களிலிருந்தும் வாக்கியங்கள் படிக்கப்படுகின்றன.

சமயத்துறையில் வெளியான இந்தத் தாராளப்போக்கு

* காந்திஜி உயிருடனிருக்கும்போது இது எழுதப்பட்டது.

எல்லாத்துறைகளிலுமே இடம் பெற்றது. தமிழ் நாட்டு இலக்கியங்கள் இதற்கு மற்ெருரு உதாரணமாகும். தமிழ் மொழியின் ஐம்பெருங் காப்பியங்களில் சிந்தாமணி, சிலப் பதிகாரம், வளையாபதி ஆகிய மூன்றும் ஜைனரால் இயற்றப் பட்டவை. மணிமேகலை, குண்டலகேசி ஆகிய இரண்டும் பௌத்தர்களால் இயற்றப்பட்டன. தேம்பாவணி போன்ற நூல்களை ஐரோப்பியக் கிறிஸ்தவர்கள் இயற்றினார்கள். சீருப்புராணம், நாகூர்ப்புராணம் போன்ற நூல்கள் தமிழ் முஸ்லிம்களால் இயற்றப்பட்டன. வெவ்வேறு மதத் தவர்களால் தத்தம் மதாசாரங்களைப் பற்றி எழுதப் பட்ட இந்த நூல்களை, ஹிந்துக்களால் ஹிந்து ஐதிகங் களைப் பற்றி எழுதப்பட்ட கம்பராமாயணம் போன்றவை களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒன்றை மற்றொன்று எவ்வளவு தூரம் தழுவியிருக்கிறது என்பதும், இலக்கிய மரபு அவர்களிடையே அதிசயிக்கத் தக்க அளவிலே பொது வாக இருக்கிறது என்பதும் தெளிவாக விளங்கும். இவை களுக்கெல்லாம் முடி வைப்பது போல, இருபதாம் நூற் றாண்டிலே, கவிச்சக்கரவர்த்தி சுப்பிரமணிய பாரதியார்,

ஆத்தி சூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்
கருநிறம் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறை அருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்து உணராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே,

என்று பாடி முடித்துவிட்டார்.

இந்தியாவின் முதுகெலும்பாகிய சமயத் துறையிலே நிலவிய இந்தத் தாராளத்தன்மை இதர துறைகளிலும் தானாகவே விளங்கிற்று. உணவு, உடை, வழக்காறு இவை

களில் இந்தியாவின் பல பாகங்களும் பலமாக மாறுபட்டிருக்கின்றன. இந்திய மக்கள் பல மொழிகளைப் பேசுகின்றனர். என்றாலும் ஒவ்வொன்றும் அதனதனுக்கு உரிய இயற்கையோடு வளர்கிறது. ஒன்றால் மற்றது அழிந்தது என்பது இல்லை. நாகரிக மாறுபாடு, கருத்து வேற்றுமைகள் ஆகிய எல்லாவற்றிலுமே இந்தியா இந்தப் பெருந்தன்மையையும் தாராளப் போக்கையும் என்றும் காட்டி வந்திருக்கிறது. நவீன விஞ்ஞான ஆராய்ச்சியுடன் கூடிய இக்காலக் கல்வி முறைக்குப் பக்கத்தில், குருகுல ஆசார முறைப்படி பண்டைக்காலக் கல்வி முறையும் இங்கே அமுலிலிருக்கிறது. மிக்க நவீனமான அணுச்சக்தி ஆராய்ச்சிக்கருகிலே, பண்டைய சாஸ்திர முறைப்படி ஆத்ம விசாரணை நடந்து கொண்டிருப்பதையும் இங்கே காணலாம். மிக்க நாகரிகமாக மேல்நாட்டு உடையணிந்து கொண்டிருப்பவர்கள் பக்கத்தில், பஸ்ஸிலும், ட்ராமிலும் சரியான வைதிக முறைப்படி ஆடையணிந்து கொண்டிருப்பவர்கள் அமர்ந்திருப்பதைப் பார்க்கலாம். உலகையே ஒன்றாகக் காணும் இந்தியாவுக்கு, இச் சிறு மாறுபாடுகள் அடிப்படையான முரண்பாட்டைக் குறிப்பதில்லை. மனித வர்க்கத்தையே ஒரே குடும்பமாகக் கொள்ளும் பாரத நாட்டுக்கு நிறமும், வர்க்கமும், மதமும் அடிப்படையான வேறுபாடுகளை உணர்த்துவதில்லை. "கேவலமான புத்தியே ஒருவன் உறவினனா அல்லது அன்னியனா என்று பார்க்கிறது: உன்னத ஒழுக்கம் படைத்த மக்கள் முழு உலகையுமே தங்கள் இல்லமாகக் கொள்கிறார்கள்" என்று ஸம்ஸ்கிருதப் பெருமொழியொன்று கூறுகிறது. அதைப் போலவே கணியன் பூங்குன்றனார் என்ற தமிழ்ப் பெரும் புலவர் புறநானூற்றிலே, "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்று கூறி முடிக்கிறார்.

# 6. வகுப்பு ஒற்றுமை*

'வகுப்பு ஒற்றுமை' என்ற சொற்றெடரே நாகரிகம் நிறைந்த எந்த நாட்டிலும் அனுவசியமானதாக இருக்க வேண்டும். ஆனுல், இன்று நம்முடைய நாட்டிலே அது தான் தினசரி ஜபமந்திரமாக இருக்கவேண்டி யிருக்கிறது. அதில் அடங்கியிருக்கும் லக்ஷியத்தை அடைவதில்தான் இந்தப் பரத கண்டத்தின் சுதந்திர வாழ்வு பொருந்தியிருக் கிறது ; உலகின் நிரந்தர சமாதானத்தின் நிலேபாடு அமைந் திருக்கிறது. பிரிக்கப்பட்ட இந்தியா ஆங்கிலேய ஆட்சியி லிருந்து விடுதலே பெற்றுவிட்டதென்பது உண்மையே ; ஆனுல் இந்த சுதந்திரம் நிலேத்திருக்கவேண்டுமே யென்று உண்மையான தேசபக்தர்கள் கவலேகொள்ளக்கூடிய சம்பவங்கள் இந்தியாவிலும், பாக்கிஸ்தானிலும் சென்ற இரண்டு மாதங்களாக நடைபெற்றிருக்கின்றன ; இன்றும் நடந்துகொண்டே யிருக்கின்றன. †இப்பரத கண்டத்தின் ஒர்மையைத் தியாகம் செய்தாவது, நாட்டில் அமைதியை நிலேநாட்டுவோம் ; இந்தியா பிரிக்கப்பட்டாலும் சரி, இரத்தக்களரியைத் தவிர்ப்போம் என்று இந்தியப் பிரிவினேக்கு இணங்கிய தேசீயத் தலேவர்கள் திகைப்பிலே மூழ்கிப் போயிருக்கின்றனர். இந்தியா துண்டிக்கப்பட்ட

---

* ''வகுப்பு ஒற்றுமை''யைப் பற்றிய இப்பிரசங்கம் நடைமுதல் பேச்சாக 18—10—1947-ல் அகில இந்திய ரேடியோவின் சென்னே நிலே யத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது.

† [இந்தியா-பாகிஸ்தான் என்ற பிரிவினே 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஏற்பட்டவுடன் இரண்டு நாடுகளிலும் நிகழ்ந்த கோரமான வகுப்புக் கலவரங்கள்தான் இங்கே குறிப்பிடப்பட்டன.]

தோடு மாத்திரமில்லை; கனவிலும் கற்பனை செய்து பார்க்காத அளவிலே வகுப்புக்கலவரங்கள் இரண்டு டொமினியன்களிலும் பல இடங்களில் நடைபெற்றன. மனித உருவம் படைத்தவர்கள் அனைவரையும் மனிதர்களாகக் கருதுவது தவறு என்பதைப் பஞ்சாபிலும், டில்லியிலும் நம்முடைய ஹிந்து, முஸ்லிம், சீக்கிய சகோதரர்கள் நிரூபித்திருக்கிறார்கள். பதினாயிரக் கணக்கான உயிர்கள் பலியாயின; மாண்டவர்கள் ஆண் பெண், வயோதிகர் சிசு, என்ற பாரபக்ஷமின்றி; லக்ஷக்கணக்கான மக்கள் தாங்கள் பிறந்த ஊரையும், நடத்திய வாழ்வையும் விட்டு, உயிரைக் காப்பாற்றிக்கொள்ள, நூற்றுக்கணக்கான மைல்கள் வழியில் உண்ண உணவும், குடிக்க நீருமின்றி, இயற்கையின் கொடூரங்களுக்கும் ஆளாகி இரண்டு பக்கங்களிலும் அகதிகளாக நடந்து சென்றிருக்கின்றனர். இக்கொடுமைகளுக்குக் காரணமுண்டா? இவை அவசியமா? இதுதான் புதிதாக அடைந்த சுதந்திரத்தை இந்நாட்டு மக்கள் அனுபவிக்கின்ற வழியா? இத்துன்பத்துக்குள்ளான மக்கள் என்ன பாபம் செய்துவிட்டார்கள்? குறிப்பிட்ட வகுப்புக்களிலே பிறந்த பாபத்தைத்தவிர வேறெந்தப் பாதகத்தையும் அவர்கள் செய்துவிடவில்லை. முஸ்லிம்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு மனிதத்தன்மையை உதறித் தள்ளிய உன்மத்தர்கள் சிலர் கல்கத்தாவிலும் கிழக்கு வங்காளத்திலும் ஹிந்துக்களைக் கொன்றார்கள்; இதற்காக அதை வஞ்சம் தீர்த்துக்கொள்கிறோம் என்ற மூட எண்ணத்துடன் பீஹாரில் வாழ்ந்த ஹிந்துக்கள் நிரபராதியான அம்மாகாண முஸ்லிம்களைக் கொன்றனர். அதேமாதிரியே கிழக்கு, மேற்குப் பஞ்சாபிலும், டில்லியிலும். ஆத்திரங்கொண்ட சில ஹிந்துக்களும் சீக்கியர்களும், கிழக்கு பஞ்சாபில் சில முஸ்லிம்களைக் கொடுமைக்காளாக்கினார்கள்; இதற்காக, மேற்குப் பஞ்சாபிலுள்ள

லக்ஷக்கணக்கான ஹிந்துக்களும் சீக்கியர்களும் தங்கள் உயிரையும், வாழ்வையும் இழக்க வேண்டுமா? தந்தையின் செயலுக்குத் தனயனே பொறுப்பில்லை எனும்போது, ஒரே வகுப்பிலே பிறந்தவர்கள், ஒரே மதத்தைத் தழுவினவர்கள் என்றதனுல் மாத்திரம் ஒருவர் செய்யும் உன்மத்தச் செயலுக்கு மற்றவர்பொறுப்பேற்க முடியுமா? இவையாவும் வகுப்பு வாதத்தின் விளைவு; மதவெறியின் கோரலீலைகள். 'வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினையறுப்பான்' என்ற தர்ம வாசகத்தின் உண்மையை நம்மக்கள் ஆத்திரத்திலே மறந்து விட்டனர். தனி மனிதனின் தகுதி அவன் வகுப்பைச் சேர்ந்த மற்ருெருவனின் கொடுமையிலே மறைந்துபோய்விடுகிறது. இவையெல்லாம் நாகரிகத்துக்கும் நியாயத்துக்கும் நேர் மாருனவை. ஆனுல் துரதிர்ஷ்ட வசமாக நம்முடைய நாட்டிலே இன்று இந்த நிலைமைதான் நிலவி யிருக்கிறது.

இந்தியாவிலே ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே வேண்டுமென்றே பிரிட்டிஷார் பிளவை உண்டு பண்ணுகின்றனர்; தங்கள் ஆட்சி நிரந்தரமாக இந் நாட்டிலே நிலைபெற்றிருப்பதற்காக அவர்கள் இந்தப் பிரித்தாளும் சூழ்ச்சியைக் கைப்பற்றுகின்றனர்: இவ்வாருக நாம் சொல்லி வந்திருக்கிருேம். 1906-ல் முஸ்லிம்களுக்குத் தனித் தொகுதியளிக்க பிரிட்டிஷார் இணங்கியது இந்திய முஸ்லிம்களின் சுயகோரிக்கையின் மேலல்ல; தாங்களே தூண்டிவிட்ட திட்டப்படி செய்தது என்ற உண்மையும் இந்த எண்ணத்தைப் பலப்படுத்தியது. ஆகையால் பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறினுலொழிய இந்த நாட்டில் வகுப்பு ஒற்றுமை உண்டாகாது என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். ஆனுல், இடையிலே, தனித்தொகுதி தனக்குரிய வளர்ச்சியை அடைந்து கொண்டே போயிற்று. ஹிந்துக்களுடன் அரசியல் - அவசியம் காரணமாக ஒன்று சேரவேண்டிய

சந்தர்ப்பமே முஸ்லிம்களுக்கு இல்லாமற் போயிற்று. தனி உணர்ச்சியே மேலும் மேலும் வளர்ந்து கொண்டு போயிற்று. முடிவிலே ஜனுப் ஜின்னுவும், அவருடைய முஸ்லிம் லீகும், ஹிந்துக்களும் முஸ்லிம்களும் இரு தனி தேசீய இனங்கள் ; அவர்கள் ஒரேயாட்சியின்கீழ் வாழமுடியாது ; ஆகையால் முஸ்லிம்களுக்கென்று ஒரு தனி நாடும் அரசாங்கமும் வேண்டும் என்று கோர ஆரம்பித்தனர். பாக்கிஸ்தான் கோரிக்கையின் அடிப்படையே மதவேறுபாடாக இருந்தபடியால், முஸ்லிம் பாமர மக்களின் மத உணர்ச்சியை அதனுடைய பிரசாரத்துக்காகப் பயன் படுத்திக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. 1940-ல் ஆரம்பித்த இந்தப் பிரசாரம் இந்திய முஸ்லிம்கள் அனைவரிடையும் வெகு துரிதமாகப் பரவியது. இந்தப் பிரசாரத்தின் பயனுக, இந்திய முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையோர் பாக்கிஸ்தானை அடைவதுதான் தங்களுடைய மதத்துக்குத் தாங்கள் செய்யக்கூடிய மகத்தான சேவை என்று கருத ஆரம்பித்துவிட்டனர். அதன் காரணமாக, நிர்வாக அசௌகரியத்தைக் குறித்தோ, தேசீயப் பாதுகாப்பை உத்தேசித்தோ, சர்வதேச அரசியல் நிலைமையைக் கருதியோ, பாக்கிஸ்தான் விரும்பத்தகாதது என்று கூறிய ஒவ்வொருவரையும் இஸ்லாத்தின் பரம விரோதியாக இந்த முஸ்லிம்கள் கருத ஆரம்பித்தனர். இந்த மதவெறியிலே, நியாயம், அநியாயம் என்பது அவர்களுடைய அறிவிலிருந்தே மறைந்துவிட்டது ; முஸ்லிம் லீகருக்கு ஒரு நியதி, மற்றவருக்கு இன்னெரு நியதி என்ற எண்ணம் நிலைபெற்றுவிட்டது ; தங்களுடைய சக்தி - பலவீனத்தின் உணர்வே இல்லாமல் பலாத்காரத்தினுலே பாக்கிஸ்தானை அடைந்துவிட முடியும் என்று நம்பினர். மதவெறியும், அறியாமையும் ஒன்று சேரும்போது, ஆத்திரம் அனல் விட்டு எரியத் தொடங்கிவிட்டது. பதவியும், பட்டமும்

பெற்றிருந்த சிலர் பொதுவாழ்விலே தங்கள் இடத்தை ஸ்திரப்படுத்திக்கொள்வதற்காக அந்த வெறியை இன்னும் தூக்கிவிட்டனர். இந்த அபாயகரமான நிலைமையிலே ஜின்னு நேரடி நடவடிக்கை கோஷத்தைக் கிளப்பினுர். உடனே வங்காளமும், பீஹாரும் வகுப்புக் கலவரப் பேய்க்கு ஆளாயின. இந்தக் கலவரங்களையும், அவற்றின் விளைவாக நேர்ந்த உயிர்ச் சேதத்தையும் கண்டும், இடைக்கால சர்க்காரில், முஸ்லிம் லீக் அங்கத்தினர்களுக்கும் இதரருக்குமிடையே இருந்த முரண்பாட்டைக் கண்டும், இந்தியப் பிரிவினைத்திட்டத்துக்குத் தேசத்தலைவர்கள் சம்மதித்தனர். ஆனுல் அவர்கள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. மனித வர்க்கத்துக்கே என்றும் அழியாத களங்கம் என்று சொல்லக்கூடிய அளவிலே கலவரங்கள் நிகழ்ந்தன. ஒரு வகுப்பாரின் வெறிக்கு மருந்து மற்ருெரு வகுப்பாரும் வெறி கொள்வதே என்பதை உறுதிப்படுத்த முனைந்திருப்பவர்களைப் போல, இருவகுப்பாரும் கொலை, கொள்ளை, சோரம் ஆகியவற்றில் போட்டிபோட ஆரம்பித்தனர். இன்றைய இந்த நாட்டின் நிலை இதுதான். இந்திய டொமினியனின் பெரும்பாகம் இந்தக் கலவரங்களால் பாதிக்கப் படவில்லை என்பது காரிருளில் மின்னலைப்போலச் சற்று நம்பிக்கையூட்டுவதாக இருக்கிறது.

எவ்வளவோ சிக்கலானதாக இருந்தபோதிலும், விவேகமும், கற்பனையும், உறுதியும் இருந்தால் இந்தப் பிரச்னைக்கும் சுலபமாக வழி காணமுடியும். பல நிறத்தையும், மதத்தையும் சேர்ந்தவர்கள் ஒற்றுமையாக ஒரே நாட்டில் ஒரே ஆட்சியின்கீழ் வாழ்வதற்குப் பல உதாரணங்கள் இன்றும் உலகில் காணப்படுகின்றன. சீனு, ருஷ்யா ஆகிய நாடுகளில் பெரும்படியான அளவில் முஸ்லிம்கள் வாழ்கிருர்கள். கானடாவிலும், இதர அமெரிக்க நாடுகளிலும் வெவ்வேறு தேச உற்பத்தியைக் கொண்ட மக்கள்

வாழ்கின்றனர். அவர்கள் ஒரே அரசாங்கத்தின் கீழ், ராஜ விசுவாசத்துடன் ஒற்றுமையாக வாழ்கிறுர்கள். மதமோ, நிறமோ, அவர்களுடைய அரசியல் உரிமைகளையும், அந்தஸ்தையும் பாதிக்கவில்லை. நம்முடைய நாட்டிலும் சென்ற ஆயிரமாண்டுகளாக ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்திருக்கிறுர்கள். ஆளும் அரசன் ஹிந்துவாயினும் சரி, முஸ்லிமாயினும் சரி, பிரஜைகளுக்கிடையே மதம் காரணமாகப் பேதம் பாராட்டப்பட்டதில்லை. அன்றையக் குழப்பங்களுக்குக் காரணம் பல அரசர்களுக்கிடையே இருந்த பொருமையும், பகைமையும்தானேயன்றி மதமன்று. இன்றும் அந்த ஒற்றுமையை நிலைநாட்ட முடியும். பொருளாதாரப் பந்தங்கள், அரசியல் கடமைகள், சமூக அந்தஸ்து ஆகியவை ஓரிடத்திலோ, ஒரு நாட்டிலோ வாழும் மக்கள் அனைவரையுமே பீடிக்கின்றன. ஒரு முதலாளி தன் கீழ் வேலை செய்யும் அனைவரையும் ஒன்ருகத்தான் நடத்துகிருன். தன் மதத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக அவன் யாருக்கும் விசேஷ சலுகை காட்டுவதில்லை. வியாபாரியும் அப்படியே. மத வித்தியாசம் இங்கெல்லாம் இடம்பெற முடியாது; பெறவேண்டிய அவசியமுமில்லை. மதத்தினுடைய இடமே வேறு. தனி மனிதனின் முழு வாழ்க்கையையும் அது பாதிக்கிறது என்பது உண்மையே. ஆனல், அது அவனுடைய சொந்தத் துறை. அரசாங்கத்துக்கும் தனி மனிதனுடைய மதத்துக்கும் சம்பந்தமில்லை. சமூகத்துக்கு அவனுடைய மதத்தைப்பற்றி அக்கரையில்லை. ஒவ்வொருவனுடைய அமைப்பும், வளர்ச்சியும் அவன் உண்ணும் உணவைப் பொறுத்திருக்கிறது. அவனுடைய உணவுதான் அவனுக்கு உயிரையும் வலுவையும் கொடுக்கிறது. ஆனல், அவனவனுக்கு விருப்பமான உணவை ஒவ்வொருவனும் உண்பதற்கு உரிமையும், வசதியும்

இருக்க வேண்டுமென்பதைத் தவிர, சமூகத்துக்கோ, அரசாங்கத்துக்கோ அவனுடைய உணவைப்பற்றிக் கவலையில்லை. அதேமாதிரிதான் ஒவ்வொருவனுக்கும், அவனவனுடைய மதத்தைப் பின்பற்றுவதற்கு வேண்டிய உரிமையை வழங்குவதும், அந்த உரிமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு வேண்டிய வசதிகளையளிப்பதுமே சர்க்காரின் கடமை. மற்றப்படி அவனுடைய மதம் அவனுடைய சொந்தப் பிரச்னை. இந்த நிலைமையில்தான், ஜனுப் ஜின்னுவினுடைய மதத்தை அடிப்படையாகக் கொண்ட Two Nation Theory எனப்படும் ஈரினக்கொள்கை முற்போக்கான பொது வாழ்வுக்கே ஒரு மகத்தான தீங்கைச் செய்திருக்கிறது. இதன்படி, இன்று இந்திய டொமினியனில் வாழும் முஸ்லிம்கள் அனைவரும் தாங்கள் பிறந்த நாட்டிலேயே அந்நியர்களாக வாழ வேண்டியிருக்கும். ஆனல் இந்திய முஸ்லிம்கள் இப்பொழுதுதான் சிறிது சிறிதாக விழித்துக்கொள்ள ஆரம்பித்திருக்கிருர்கள். இந்த மாற்றம் மாத்திரம் உண்மையானதாகவும், இருதய பூர்வமானதாகவும் இருந்தால், வருங்காலத்தை நாம் நம்பிக்கையுடனேயே எதிர் நோக்கலாம்.

இன்று நாம் அடைந்திருக்கும் சுதந்திரத்தை இந்த அடிப்படையான பிரச்னையைத் தீர்ப்பதற்கு நாம் உபயோகப்படுத்த வேண்டும். இப்பெருங்காரியத்தின் முதற்படியாக இந்திய அரசியல் நிர்ணயசபை, வகுப்புத் தொகுதியை ஒழித்துவிடுவதென்று தீர்மானித்திருக்கிறது. புதிய இந்திய சமுதாயத்தைச் சிருஷ்டிப்பதற்கு இது அஸ்திவாரம் போட்ட மாதிரி. இதைத்தொடர்ந்து ஒரு லௌகிக சர்க்காரை இந்த நாட்டிலே நிலைநாட்ட முயல வேண்டும். ஒரு லௌகிக சர்க்காரைச் சிருஷ்டிக்க நாம் விரும்புகிருேம். அதில் குடிமைக்கும் மதத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இருக்காது. மதம் ஒவ்வொரு மனித

னுடையவும் தனிப்பொறுப்பாகும் என்று காங்கிரஸ் தலைவர் ஆச்சார்ய கிருபளானி அவர்கள், சமீபத்தில் எல்லாக் காங்கிரஸ் கமிட்டிகளுக்கும் அனுப்பிய சுற்றறிக்கையொன்றில் கூறுகிறார். ஆனால், வகுப்புவாதப் பேயையொழித்து வலிமை பொருந்திய தேசீய சமுதாயமொன்றைச் சிருஷ்டிப்பதற்குச் சிறந்த கருவியாக லௌகிக சர்க்கார் என்ற சொற்றொடரை எந்தக் கருத்திலே உபயோகிக்கிறோமென்பதைப்பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். மக்களிடமிருந்து வரி வசூலித்து, அதற்குப் பிரதியாக அவர்களுடைய உயிருக்கும், உடைமைக்கும் உள்நாட்டுக் கலவரங்களிலிருந்தும் வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும் அபாயம் வராமல் பாதுகாக்கும் பொறுப்பை மாத்திரம் தன்கடமையாகக் கொண்ட சர்க்கார் என்ற வாசகத்தை ஒரு சிலர் உபயோகிக்கின்றனர். இதன்படி போலீஸ்காரன் வேலை மாத்திரமே சர்க்காருடைய வேலை. மக்கள் வாழ்க்கையின் இதர அம்சங்களில் சர்க்காருக்கு எந்த விதமான பொறுப்புமில்லை. இதன்படி தான் மக்களின் மதங்களுக்கும் சர்க்காருக்கும் சம்பந்தமில்லாமல் செய்ய முடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள். ஆனால், இக்குறுகிய அளவிலே எந்த சர்க்காரும் வேலை செய்ய முடியாது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. மேலும், இன்றைய உலகின் தேசீய சர்க்கார்கள் பலவும் மக்கள் வாழ்க்கையிலே தங்களுக்கிருக்கும் பொறுப்பை விஸ்தரித்துக் கொண்டே போகின்றன. ஆகையால் லௌகிக சர்க்கார் என்பது மக்கள் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களுடனும் அன்யோன்யத் தொடர்பு அற்றது என்பதல்ல. எந்தக் குறிப்பிட்ட ஒரு மதத்தைமாத்திரம் தன்னுடைய விசேஷ சலுகைக்குப்பாத்திரமானதாகக் கருதாமல், எல்லா மதங்களுக்கும் பொதுவான, உண்மை, ஒழுங்கு, தர்மம், நியாயம், சமத்துவம் ஆகிய சிரஞ்சீவி

தத்துவங்களின் அடிப்படையின்மேல் ஆட்சிமுறையை வகுத்துக்கொள்ளும் சர்க்காரைத்தான் லௌகிக சர்க்கார் என்று சொல்லவேண்டும். மேதியு ஆர்னல்டு (Matthew Arnold) சொல்லியதைப் போல 'ஒரு நாட்டுச் சர்க்காருக்கு அந்த நாட்டு மக்கள் அனைவருடைய மதங்களும் இருக்கவேண்டும்; ஆனல், அவைகளில் எந்த மதத்தினுடைய வெறியும், அந்த சர்க்காருக்கு இருக்கக் கூடாது.'

அத்தகைய சர்க்காரொன்று, இந்நாட்டு மக்கள் அனைவருடைய வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்காகவும், தேசீயச் செல்வம் ஒரு சில எண்ணிக்கையுள்ளவர்களிடையே தேங்கி மண்டிக் கிடக்காமல் எல்லாரிடையேயும் சமமாகப் பகிர்ந்திருப்பதற்காகவும், பிறப்பின் காரணமாகத் தோன்றும் உயர்வு தாழ்வு மறைவதற்காகவும் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதன் மூலம், வகுப்பு வேறுபாடுகளை நாட்டின் பொது வாழ்க்கையிலிருந்து அறவேயொழித்துவிட முடியும்.

இந்த நாட்டின் வகுப்புப் பூசலுக்கு மதவெறியோடு, அதிகார ஆசையும், உத்தியோகப்பற்றும் காரணமென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆகையால், வருங் காலத்தில், ஒரு மனிதனுடைய மதமென்ன, வகுப்பென்ன, ஜாதியென்ன என்ற விவரங்களிலெல்லாம் அரசாங்கத்துக்கு அக்கரை யிருக்கக்கூடாது; அவன் இந்த நாட்டில் பிறந்தவனா, இந்த நாட்டு அரசாங்கத்தினிடம் விசுவாஸம் கொண்டவனா, குறிப்பிட்ட பொறுப்புக்கென்று முன்னதாகவே திட்டப்படுத்தப்பட்ட யோக்கியதாம்சங்கள் அவனுக்கு இருக்கின்றனவா என்பவைகளை மாத்திரமே சர்க்கார் தெரிந்துகொள்ளவேண்டும். இதன் மூலம் வகுப்புப் பொருமையையும் போரையும் ஒழிப்பதுடன், உண்மையான சிறப்புக்கும், தகுதிக்கும் நியாயமான

மதிப்புக் கொடுக்க முடிகிறது. இதற்கு ஒரு சிறு உதாரணத்தை நம்முடைய கல்வித்துறையிலே காணலாம். இதுவரையிலும், வெளிப்படையாகவாவது, யாரும் ஒரு பையன் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவனென்பதற்காக, பரீக்ஷையில் அவனுக்கு மார்க் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டதில்லை. ஏனென்றால், பரீக்ஷை விடைத்தாளில் அவனுடைய ஜாதியோ, வகுப்போ, மதமோ, எழுதப்பட்டிருப்பதில்லை. அவனுடைய பெயர்கூட எழுதப்படுவதில்லை. ஆயிரக்கணக்கான இதர மாணக்கர்களைப்போல, அவனுக்கும் ஒரு நம்பர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நம்பர்தான் அவனை உணர்த்துகிறது. அவனுடைய வகுப்பைப்பற்றியோ, அதற்குவேண்டுமென்று அவன் கருதுகிற சலுகைகளைப் பற்றியோ அவன் நினைப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. எனவே, பொது வாழ்வு சம்பந்தப்பட்டவரையில், ஒருவனுடைய வகுப்பையும், மதத்தையும் பற்றிச் சர்க்கார் தெரிந்துகொள்ளாமலிருப்பதற்கும் சர்க்கார் முயல வேண்டும். ஆகையால் உத்தியோக சம்பந்தமாகவோ, கல்வி சம்பந்தமாகவோ—பொது வாழ்வோடு சம்பந்தப்பட்ட எந்தக் காரணத்துக்காகவும்—ஒருவன் தன்னுடைய மதத்தையும் ஜாதியையும் வெளிப்படுத்தும்படி கேட்கப்படக்கூடாது.

இனி, ஒரு நாட்டிலே வாழும் பல வகுப்பினரில் சிலர் பல காரணங்களால் பிற்போக்கானவர்களாக இருக்கலாம். அவர்களுக்கு அரசாங்கம் விசேஷ சலுகைகள் காட்ட வேண்டாமா என்று சிலர் கேட்கலாம். அரசாங்கம் நேரடியாக இதைச் செய்யக்கூடாது. இந்தச் சலுகைகள் அவர்களிடையே பொறுப்பின்மையையும், சோம்பலையும் உண்டுபண்ணி அவர்களை நிரந்தரமாகப் பிற்போக்கிலேயே வைத்துவிடுகிறது. அவர்கள் சுயமதிப்பையும், சுய முயற்சியையும் இழந்து விடுகிறார்கள். ஆகையால்

சர்க்காரே நேரில் இப்பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் பொது மக்களிடையே இதைவிட்டு அவர்களுக்கு உதவியும் உற்சாகமும் அளிக்கவேண்டும். இதன் மூலம் சொற்ப காலத்திலேயே அந்த வகுப்பினர் முன்னேறிப் பிறரோடு சம அந்தஸ்தைப் பெறுவர்.

வகுப்புப்பிரிவை வளர்ப்பதற்குக் காரணமாக இருந்தவைகளில் முக்கியமானதொன்று வகுப்புவாத ஸ்தாபனங்கள். எந்த வகுப்பின் பெயராலும் அரசியல் கட்சிகளோ, பொது ஸ்தாபனங்களோ, கல்விக் கழகங்களோ தோன்றக் கூடாது. இவைகளால், அந்தக் குறிப்பிட்ட வகுப்புக்கும் நன்மை இல்லை; தேசத்துக்கும் தீங்கே விளைகிறது. சேர்ந்து வேலைசெய்து வாழ்வதற்குச் சந்தர்ப்பமற்றுப் போகிறபடியால், பிரிவினை யுணர்ச்சியே மேலோங்கி நிற்கிறது. ஆகையால் சட்டத்தின் மூலமாயினும் இந்த வகுப்புவாத இயக்கங்களைச் சர்க்கார் தடுத்தாகவேண்டும். பல வகுப்புகளும் ஒன்றுசேர்ந்து வாழ்வதற்கு வேண்டிய சந்தர்ப்பங்கள் எல்லையில்லாமல் அமைய வேண்டும். திடப்பொருள்களாகிய ஒரு தங்கக் கட்டியையும், ஒரு ஈயக்கட்டியையும் சேர்த்து இறுகக்கட்டிவைத்திருந்தால், தங்கத்தின் அணுக்கள் சில ஈயத்துடன் சேர்ந்துவிடுகின்றன என்பதும், ஈயத்தின் அணுக்கள் சில தங்கத்துடன் சேர்ந்துவிடுகின்றன என்பதும் விஞ்ஞான உண்மை. உயிரற்ற பொருள்களிடையிலேயே இது நடக்குமானால் உயிரும் உணர்ச்சியுமுள்ள மக்களிடையே இது நடப்பது கடினமா? ஆகையால் இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் அனைவரையும் பாக்கிஸ்தானுக்கு அனுப்பிவிட வேண்டுமென்பதும், பாக்கிஸ்தானிலுள்ள முஸ்லிமல்லாதார் அனைவரையும் இந்தியாவுக்கு வரவழைத்துக்கொள்ள வேண்டுமென்பதும், சிந்தனையற்ற யோசனையாகும். மனிதனின் அடிப்படை உணர்ச்சிக்கு மாறாக இருப்பதோடல்லாமல் வகுப்புப்

பிரச்னையைத் தீர்ப்பதற்குப்பதிலாக, இரண்டு வகுப்புகளை யும் திரட்டிப் போர்க்களத்தில் ஒன்றுக்கொன்று நேர் எதிராக நிறுத்துவதற்கே இந்த யோசனை உதவும். வகுப்பு ஒற்றுமையை ஸ்தாபிக்க முடியும். ஒவ்வொருவனும் உள்ளப் பரிசுத்தத்துடன் தன் மதத்தைத் தன் வாழ்க்கை யில் பின்பற்றினுனல் எல்லா மக்களையும் தன் உடன் பிறந்தோராகக் காண்பான். வகுப்புப் பிரச்னை தானே தீர்ந்து விடுகிறது. ஆனல் உண்மையும், நாணயமும், பொறுமையும், எளிமையும் வேண்டும்.

# 7. சிறுபான்மையோர் பிரச்னே

## உரிமைகளும் கடமைகளும்

சிறுபான்மையோர், பெரும்பான்மையோர் என்ற பிரிவு, மக்களின் கூட்டுவாழ்க்கைக்கு இயற்கையானது. முக்கியமாக அவர்களுடைய கருத்துக்கள், அவற்றை வெளியிட மக்கள் கையாளும் கருவிகள் ஆகிய இரண்டின் காரணமாகத்தான் இப்பாகுபாடு தோன்றுகிறது. மக்கள் மனத்தில் தோன்றும் கருத்துக்கள் ஒரே மாதிரியாக இருப்பவையல்ல. ஆகையால், பல்வேறுபட்ட கருத்துக்களைப் பலர் வெளியிடுகின்றனர். ஒரே மாதிரியான கருத்துக்களை ஏற்றுக்கொள்பவர்கள் மக்களின் பொதுத் தொகுதியிலிருந்து ஒரு பகுதியாகி விடுகின்றனர். இவ்வாறு கருத்து வேற்றுமையின் அடிப்படையில் ஏற்படும் மக்கள்-பகுதிகளினுல் சிறுபான்மையோர், பெருபான்மையோர் பிரிவு உண்டாகிறது. இம்முறையிலே உண்டான பிரிவுகளுக்கு விசேஷ லக்ஷணமாக இருப்பவை மதம், அரசியல் முதலியவை. இதேமாதிரியாக, ஆதியில் இக்கருத்துக்களை வெளியிட மக்கள் உபயோகித்த மொழிகளின் அடிப்படையின் மேல் மற்ருெரு பிரிவு எழுகிறது. இவையல்லாமல் நிறம், பால் ஆகியவற்றின் அடிப்படையின் மேலும் இப் பிரிவு உருக்கொள்கிறது.

நிறபேதத்தினுல் உண்டாகும் இத்தகைய பிரிவினுல் ஏற்படும் சிக்கல்களையும் கஷ்டங்களையும் இன்று நாம் உலகின் பல பாகங்களிலும் காண்கிருேம். எப்போதும் ஆண்களும் பெண்களும் சம எண்ணிக்கையில் உலகில் தோன்றுவதில்லே. குறிப்பாக யுத்தங்களுக்குப் பிறகு பல

---

'சிறுபான்மையோர் பிரச்னே' என்ற தொடரில் அவர்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் பற்றிய இப்பிரசங்கம் 10—2—1947-ல் அகில இந்திய ரேடியோவின் சென்னே நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது.

நாடுகளில் ஆண்களின் எண்ணிக்கையைவிடப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. அதனால் எழும் பிரச்னைகள் பல. ஆனால் பண்டைக்காலத்தில் இப்பிரச்னைகள் அதிகமான கஷ்டத்தையும் சிக்கலையும் உண்டுபண்ணவில்லை. வாழ்க்கையில் வயிற்றுப் பிழைப்புப் போட்டி அவ்வளவு உக்கிரமாக இல்லை. சிறுசிறு கிராமங்களில் மிகுந்த அன்புடனும் அன்னியோன்னியத்துடனும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். இயற்கைச் சூழ்நிலையிலேயே வாழ்க்கை நடத்திவந்த அவர்களுக்குப் பரஸ்பர அன்பும், விட்டுக்கொடுக்கும் சுபாவமுமே வாழ்க்கையின் வழிகளாக இருந்தன. கிராமத்தின் அமைதியையும் உடைமையையும் பாதுகாப்பதில் தங்களிடையேயுள்ள வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டிருந்தனர். சிறுகச்சிறுக அநுபவத்தின் மூலமே அவர்கள் இம்மாதிரிப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு வழி கண்டுபிடித்தார்கள். இன்று நாம் உணர்ந்துகொள்ளுகிற கருத்திலே, சிறுபான்மையோர் பிரச்னை அவர்களுக்கு இருந்ததில்லை என்றே சொல்லிவிடலாம்.

இன்று சிறுபான்மையோர் பிரச்னை என்பதை நாம் முற்றிலும் வேறான கருத்திலே உணர்ந்து கொள்கிறோம். இந்தக் கருத்தில் சிறுபான்மையோர் பிரச்னை எழுவதற்கு அடிப்படையாக இருக்கும் அங்கங்கள் இரண்டு: ஒன்று, நான்கு எல்லைகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட நாடு; இரண்டு, அந்த நாடு முழுவதுக்கும் ஒரே யாட்சி. இவற்றின் அஸ்திவாரத்தின் மேல்தான் சிறுபான்மையோர் பிரச்னை எழுகிறது. இப்படி எழும் பிரச்னை, பொதுவாக இரண்டு வகைப்படும். முதலாவது வகையில் சிறுபான்மையாக இருப்பவர்கள் அப்படியே நிரந்தரமாக இருந்துவிடுவதில்லை. தற்காலிகமாகத்தான் அவர்கள் சிறுபான்மையோராக இருக்கிறார்கள். அவர்கள் பெரும்பான்மையோருடன் சேர்ந்துவிடக்கூடும்; அல்லது பெரும்பான்மையோராக

மாறிவிடக்கூடும். இந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் அரசியல் கொள்கைகளையும், Nationality எனப்படும் தேசீய இனத்தையும் அடிப்படையாகக் கொண்ட சிறுபான்மையோர். 1945-ல் இங்கிலாந்தில் தொழிற் கட்சியார் சிறுபான்மையோராக இருந்தார்கள் ; இன்று பெரும்பான்மையோராக இருக்கிறார்கள். இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் நிரந்தரமாகச் சிறுபான்மையோராக இருக்கக்கூடியவர்கள். இவர்கள் மதம், மொழி, நிறம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவர்கள். இந்தியாவின் சிறுபான்மையோர் பிரச்னை பெரும்பாலும் மதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஸ்விட்சர்லாந்தின் சிறுபான்மையோர் பிரச்னை மொழியையும், மதத்தையும் அஸ்திவாரமாகக் கொண்டது. தென் ஆப்பிரிக்க யூனியனில் சிறுபான்மையோர் பிரச்னை நிறத்தின் காரணமாகப் பிறந்திருக்கிறது. இப்பிரச்னைகள் முக்கியத்துவம் பெற்றது சமீப காலத்தில் தான். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் உலகின்பல நாடுகளும் சிறுபான்மையோராலேயே ஆளப்பட்டுவந்தன. அந்த ஆட்சியில் பெரும்பான்மையோருக்குப் பங்கோ, பொறுப்போ, அதிகாரமோ இருந்ததில்லை. ஆகையால், சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு என்ற பிரச்னையே அப்போது எழுவதற்கு இடமில்லை. அதற்குமாறாக, ஆளப்படுவோராகிய பெரும்பான்மையோருக்கு ஆள்வோராகிய சிறுபான்மையோர் பாதுகாப்பும், உரிமைகளும் அளிக்க வேண்டியிருந்தது. அரசியல் வானில் ஜனநாயகம் தோன்றி மக்களில் பெரும்பான்மையோர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டபோது, சிறுபான்மையோர் தங்கள் தனி நலன்களுக்கு விசேஷப் பாதுகாப்புக் கோரலாயினர். எனவே, இன்றைய சிறுபான்மையோர் பிரச்னை பெரும்பாலும் அரசியல் அமைப்பையும், முறையையும் பற்றியதாகும்.

1914-ல் உண்டான யுத்தத்துக்குப் பிறகு இப்பிரச்னே ஒரு புதிய சர்வதேச அந்தஸ்தைப் பெற்றது. அந்த யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது, இருகட்சியாரும், எதிர்க்கட்சியாரைப் பலவீனப்படுத்துவதற்காக அந்த நாடுகளின் சிறுபான்மையோரை நாட்டின் அரசாங்கத்துக்கு விரோதமாகப் பிரசாரமூலம் தூண்டிவிட ஆரம்பித்தார்கள். இதனுல் அந்தச் சிறுபான்மையோருக்குத் தங்கள் தனி நலன்களைப் பற்றியதொரு புதியபற்றும், பிரேமையும் உண்டாயின. யுத்தத்துக்குப்பிறகு தோன்றிய சமாதான உடன்படிக்கையின் காரணமாக ஐரோப்பாவில் பழைய நாடுகளில் சில சுருங்கின ; பலபெருத்தன ; புதிய நாடுகள் சில தோன்றின. இத்தகைய எல்லே மாறுபாடுகளினுல் முன்னதாக ஒரு நாட்டிலிருந்த மக்கள் வேறுநாட்டுக்கு மாற்றப்பட்டனர். இதன் காரணமாகவும் அந்த நாடுகளின் சிறுபான்மையோர் பிரச்னே இன்னும் சிக்கலாயிற்று. ஆனுல் இந்த நாடுகளிலுள்ள சிறுபான்மையோர் நலன்களைப் பாதுகாப்பதற்காக, ஐரோப்பிய நாடுகள் பல League of Nations என்ற சர்வ தேச சங்கத்துடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்டன. இதன் பலனுக, அந்த நாடுகளிலுள்ள சிறுபான்மையோரின் உரிமைகள் அந்நாட்டு அரசாங்கத்தால் காப்பாற்றப்படுவதைக் கண்காணிக்கும் பொறுப்பு சர்வதேச சங்கத்தைச் சேர்ந்தது. அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு வேண்டிய முறையும் அதனுல் வகுக்கப்பட்டது. இத்தகைய ஒப்பந்தங்களில் ஐரோப்பிய நாடுகளிலுள்ள சிறுபான்மையோருடைய நலன்களைப் பாதுகாப்பதற்காக, இரண்டுவிதமான ஷரத்துகளைச் சேர்த்துக்கொண்டார்கள். முதல் ஷரத்தின்படி (Fundamental Rights of citizens) குடிகளின் அடிப்படையான உரிமைகள் என்ற தலைப்பின்கீழ் சில உரிமைகளைக் குறிப்பிட்டார்கள். இவை சிறுபான்மையோர், பெரும்பான்மை

யோர் என்ற வித்தியாசமின்றி ஒரு நாட்டைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உரியன. இரண்டாவது ஷரத்தின்படி, குறிப்பிட்ட சிறுபான்மையோருக்கு என்னென்ன விசேஷ உரிமைகள் இருக்கவேண்டுமென்று திட்டமாக வரையறுக் கப்பட்டது. இத்தகைய உரிமைகள் எல்லா நாடுகளையும் சேர்ந்த சிறுபான்மையோருக்கும் பொருந்துமாகலின், அவற்றை இப்போது பொதுவாகக் காணலாம்.

குடிகளுடைய அடிப்படையான உரிமைகள் என்ற தலைப்பில், கீழ்வருபவை பிரதான இடம் பெறுகின்றன :—

முதலாவது, குடிமை உரிமை (Citizenship right). ஆரம்பத்தில் வேருெரு நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தாங்கள் வசிக்கும் நாட்டின் குடிமை உரிமையைப் பெறுவதற்கு எந்தச் சிறுபான்மையோருக்கும் தடை இருக்கக்கூடாது. வழக்கமாக, இதற்குச் சில நிபந் தனைகள் விதிக்கப்படுகின்றன. அந்த நாட்டில் பிறந்திருக்க வேண்டும், அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வாசம் செய்திருக்கவேண்டும் என்பது சில நிபந்தனைகளாகும். இதில் முக்கியமானது என்னவென்ருல், இந்த உரிமையைப் பெறுவதற்குச் சிறுபான்மையோருக்கு எந்த விதமான நிரந்தரத் தடையும் இருக்கக்கூடாது என்பதுதான்.

இரண்டாவது, உயிருக்கும், உடைமைக்கும், தனிச் சுதந்திரத்துக்கும், மதசுதந்திரத்துக்கும் பூரணப் பாதுகாப்பு இருக்கவேண்டும். ஒவ்வொருவனும் அவனுக்குரிய மதத்தைப் பின்பற்றுவதற்கு முழு உரிமையும் பெற்றவனுக இருக்கவேண்டும். அந்த உரிமைக்கு மற்ருெருவனுல் பங்கம் நேரிடுமாயின் அரசாங்கம் குறுக்கிட்டு, அவனுடைய உரிமையை நிலை நாட்டும் ; அதைக் குலைக்க முயன்றவனைத் தண்டிக்கும். ஒருவன் எந்த மதத்தைப் பின்பற்றினுலும் சரி, எந்த மொழியைப் பேசினுலும் சரி, அவனுடைய உயிருக்கும் உடைமைக்கும் பூரணப்பாது

காப்பு இருக்கவேண்டும். முறையாக நிர்ணயிக்கப்பட்ட சட்டத்தின்படியல்லாமல், அவற்றை அவன் அநுபவிப்பதில் எந்தவித இடையூறும் இருக்கக் கூடாது.

மூன்ருவது, சமவாழ்வு. சட்டத்தின்படி எல்லோரும் சமம்: தேசாச்சார, அரசியல் உரிமைகள் எவ்வித வேற்றுமையுமின்றி எல்லோருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும்; சட்டத்தின்படி மாத்திரமல்லாமல், நடைமுறையிலும் சம அந்தஸ்தும் பாதுகாப்பும் இருக்க வேண்டும்; என்ற மூன்று பகுதிகளேக்கொண்டது இது. உரிமைகளே வழங்குவதிலோ, குற்றங்களே நிர்ணயிப்பதிலோ, தண்டனேகளே வகுப்பதிலோ, ஒரு மனிதனுக்கும் மற்றொருவனுக்குமிடையே எவ்விதமான தாரதம்மியத்தையும் சட்டம் உண்டுபண்ணக்கூடாது. கடவுளுக்கு முன் போல், சட்டத்துக்கு முன்னும் எல்லா மனிதர்களும் சமம். ஆனல், இந்தச் சமத்துவ உரிமை ஏட்டளவில் மாத்திரம் இருக்கக்கூடாது. அந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் அரசாங்கம், அந்தச் சமத்துவம் நடைமுறையிலும் நிலவ நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆகையால் தான், ஜெர்மனியில் பிறந்து போலந்தில் வசித்துவந்த சிறுபான்மையோர் சம்பந்தமாக அபிப்பிராயம் கூறிய சர்வதேசக்கோர்ட், சட்டத்தில் பாகுபாட்டைக் குறிக்கும் வார்த்தைகள் இருக்கக்கூடாது என்ற கருத்தைக்கொண்ட வெளிப்படையான சட்ட சமத்துவத்துடன், உண்மை நடைமுறைச் சமத்துவமும் இருக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. ஒருவனுடைய வோட்டுரிமை, பொது உத்தியோகங்களுக்கு அவனுடைய தகுதி ஆகியவை அவனுடைய மதத்தையோ, மொழியையோ, நிறத்தையோ, வர்க்கத்தையோ பொறுத்திருக்கக்கூடாது. இத்தகைய உரிமைகளுக்குரிய நிபந்தனேகள் எல்லோருக்கும் பொதுவாக இருக்கவேண்டும்.

நான்காவது, சிறுபான்மையோரின் மொழியைப் பற்றியது. இது சம்பந்தமாக அரசாங்கம் மூன்று பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளுகிறது. முதலாவது, பத்திரிகைகளிலோ, புத்தகங்களிலோ, பொதுக்கூட்டங் களிலோ, சிறுபான்மையோர் தங்களுடைய மொழியை ஆள்வதைச் சர்க்கார் எந்தவிதத்திலும் தடைசெய்யக் கூடாது. தனிச் சம்பாஷணைகளிலும், வாணிபத்திலும், மதசம்பந்தமாகவும் அவர்களுடைய பாஷையை உப யோகிப்பதற்கு அவர்களுக்குப் பூரண உரிமை இருக்க வேண்டும். இரண்டாவது பொறுப்பு, அரசாங்க பாஷையல் லாத மற்ெருரு பாஷையைப் பேசுபவர்களுக்கு, கோர்ட்டு களில் வாய்மூலமாகவோ, எழுத்துமூலமாகவோ அவர் களுடைய பாஷையையே உபயோகிப்பதற்கு வேண்டிய வசதியைச் சர்க்கார் செய்துதரவேண்டும். மூன்ருவது பொறுப்பு, அரசாங்க பாஷையல்லாத பிறிதொரு பாஷையைப்பேசும் மக்கள் ஏதாவதொரு ஜில்லாவிலோ, நகரத்திலோ குறிப்பிட்ட எண்ணிக்கையில் இருந்தால், அவர்களுடைய மொழியிலேயே ஆரம்பக்கல்வியை அவர் களுக்குப் போதிப்பதற்குவேண்டிய வசதிகளைச் சர்க்கார் செய்துகொடுக்க வேண்டும். ஆனல், சிறுபான்மை யோருக்கு இந்தப் பாஷா உரிமையை அரசாங்கம் வழங்கி ஞலும், இந்தப்பள்ளிக்கூடங்களில் அரசாங்க பாஷையைக் கட்டாயப் பாடமாக்குவதற்குச் சர்க்காருக்கு உரிமையுண் டென்பதை எல்லாரும் அங்கீகரித்திருக்கிருர்கள்.

ஐந்தாவது, தங்களுடைய சொந்தச் செலவில் தர்ம ஸ்தாபனங்களையும், மத ஆலயங்களையும், சமூகச் சங்கங் களையும் நிறுவி, நிர்வகிப்பதற்குச் சிறுபான்மையோருக்கு அதிகாரம் உண்டென்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. தங்கள் சொந்தச் செலவில் பள்ளிக்கூடங்களை நிறுவி, தங் கள் சொந்தப் பாஷையில் போதிப்பதற்கும் தங்கள் சொந்த

மதத்தைப்பற்றிச் சொல்லித் தருவதற்கும் சிறுபான்மை யோருக்கு உரிமை யுண்டென்று சில நாடுகளில் அங்கீகரிக் கப்பட்டிருக்கிறது.

ஆருவது, பொது நிதியில் சிறுபான்மையோரின் பங் கைப்பற்றியது. எந்த எந்த ஜில்லாக்களிலும், நகரங்களி லும், மதம், மொழி, வர்க்கம் ஆகியவற்றை அடிப்படை யாகக் கொண்ட சிறுபான்மையோர் குறிப்பிட்ட எண்ணிக் கையில் இருக்கிருர்களோ அங்கெல்லாம், கல்வி, மதம், பொதுத் தர்மம் ஆகியவைகளுக்காகப் பொது நிதியி லிருந்து அரசாங்கத்தாலோ, நகர சபையாலோ பணம் செலவழிக்கப்பட்டால், அதனுல் விளையும் நன்மையில் அந்தச் சிறுபான்மையோருக்கும் நியாயமான பங்கிருக்க வேண்டும். பிறரோடு சேர்ந்து அவர்களும் சர்க்காருக்கு வரி செலுத்துவதால், அந்த வரிப்பணத்தைச் செலவு செய்வதினுல் உண்டாகும் நன்மையில் அவர்களுக்கும் பங்கு கிடைக்கவேண்டும் என்ற பொது நியாயத்தின் ஒரு அம்சமே இதுவாகும்.

மேற் கூறப்பட்ட உரிமைகள் ஒரு நாட்டைச் சேர்ந்த மக்கள் அனைவரின் பொதுஉரிமையுமாகும். எனவே, சிறு பான்மை யோரின் நலன்களும் வெகுவாக இதிலே பாது காக்கப் படுகின்றன. உண்மையான நாகரிகமும், நியாய உணர்ச்சியுடன் கூடிய அரசாங்கமும் நிலவும் எல்லா நாடு களிலும், இந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுப் பூரண மாக அமுலிலிருக்கின்றன. 1931-ல் கராச்சியில் கூடிய இந்திய தேசீய காங்கிரஸும் இத்தகைய மனிதர்களின் அடிப்படையான உரிமைகள் சாஸனத்தை வெளியிட்டது. அதில் இந்த உரிமைகள் யாவும் தெளிவாகவும், திட்டமாக வும், ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சென்றமாதம் 22-ந் தேதி* நம் நாட்டின் அரசியல் நிர்ணய சபை நிறை

* 1947-ம் ஆண்டு ஜனவரி மாதம் 22-ம் தேதி.

வேற்றிய லக்ஷியங்கள் பற்றிய தீர்மானமும் இவற்றைப் பொதுப்படையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. "இந்தியாவிலுள்ள எல்லாமக்களுக்கும் சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் நீதி; சம அந்தஸ்து, சம சந்தர்ப்பம், சட்டத்தின்முன் சமத்துவம்; சட்டத்துக்கும் பொது ஒழுங்குக்கும் உட்பட்டுச் சிந்தனை, பேச்சு, எழுத்து, நம்பிக்கை, மதம், பிரார்த்தனை, தொழில், சங்கம், செயல் ஆகியவற்றில் சுதந்திரம்: இவை யாவும் உத்தரவாதம் செய்யப்படும்; கிடைக்கும்படி செய்யப்படும்" என்று அந்தத் தீர்மானத்தின் நான்காவது பாரா கூறுகிறது.†

இந்தப் பொது உரிமைகள் அல்லாமல், ஒவ்வொரு நாட்டிலும், அந்த நாட்டின் சிறுபான்மையோரின் விசேஷ நிலைமைக்கேற்பச் சில விசேஷ உரிமைகளும் வழங்கப்பட்டன. அத்தகைய உரிமைகள் கிரீஸ், லிதுவேனியா, ருமேனியா, போலந்து ஆகிய நாடுகளிலுள்ள யூதர்கள் சம்பந்தமாகவும், அல்பேனியா, கிரீஸ் முதலிய நாடுகளிலுள்ள முஸ்லிம்கள் சம்பந்தமாகவும் சர்வதேச சங்க ஒப்பந்தங்களில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் பெரும்பாலும் மத சம்பிரதாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. வேறு சில நாடுகளில் சிறுபான்மையோர், கல்வி முதலிய துறைகளில் பெரும்பான்மையோரைவிடப் பிற்போக்காக இருந்தால், அவர்களுக்குச் சில விசேஷ சலுகைகள் காட்டப்படுகின்றன. ஆனால், அந்தச் சிறுபான்மையோருடைய நன்மைக்காகவே இந்த விசேஷ

---

† 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அமுலுக்கு வந்த புதிய இந்திய அரசியலமைப்பின் மூன்றுவது பகுதி, இத்தகைய அடிப்படையான ஜீவாதார உரிமைகளையும், சிறுபான்மையோரின் விசேஷ உரிமைகளையும் உத்தரவாதம் செய்கிறது. அதன் நாலாவது பகுதி, ராஜாங்க நிர்வாகத்தின் பொது லக்ஷியங்களாக இருக்கவேண்டியவற்றைக் குறிப்பிடுகிறது.

சலுகைகள் சம்பந்தமாக மிக்க ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். பெரும்பான்மையோருடன் சம அந்தஸ்துக்கு வருகிற அளவுவரையில்தான் இந்தச் சலுகைகள் இருக்க வேண்டும். பிறகு அவை மறைந்து விடவேண்டும். குழந்தைகள் நடக்க ஆரம்பிப்பதற்குமுன், அவைகளுக்கு நடக்கக் கற்றுக் கொடுப்பதற்காக நடைவண்டி வாங்கிக் கொடுக்கிரேம். குழந்தை நடக்கப் பழகிக்கொண்டவுடன் வண்டியை அப்புறப்படுத்தி விடுகிரேம். இல்லாவிட்டால், குழந்தை என்றுமே தானுக நடக்கமுடியாமல் வண்டியின் உதவியை நாடும். அதுபோல்தான், இந்தச் சலுகைகளும். அவை காலத்தில் மறையாவிட்டால், அந்தச் சிறுபான்மையோர் என்றுமே பிற்போக்காக இருந்துவிடுவார்கள். அது அவர்களுடைய தன்மதிப்புக்குக் களங்கமாகும் ; நாட்டின் ஏகோபித்த முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையுமாகும். இவ்வாருன விசேஷ உரிமைகளே, முற்கூறிய அரசியல் நிர்ணய சபைத் தீர்மானமும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. "சிறுபான்மையோருக்கும், பிற்போக்கான பிரதேசங்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களும் பிற்போக்காயுள்ளவர்களுமான வகுப்புக்களுக்கும் போதிய பாதுகாப்புகள் அளிக்கப்படும்" என்று தீர்மானத்தின் ஐந்தாவது பாரா கூறுகிறது.

சிறுபான்மையோரின் உரிமைகளேப்பற்றி இவ்வளவு வற்புறுத்திக்கூறிய சர்வதேச சங்க ஒப்பந்தங்கள், அவர்களுடைய கடமைகளேப்பற்றி ஒன்றுமே குறிப்பிடவில்லே. ஆனுல், 1922-ல் நடந்த சங்கத்தின் மூன்ருவது சாதாரணக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலொன்று பின்வருமாறு கூறிற்று ; தீர்மானமாவது :—"எந்தவிதமான அடக்கு முறையிலிருந்தும் சிறுபான்மையோர் சர்வதேச சங்கத்தால் காப்பாற்றப்பட வேண்டுமென்ற பிரதான உரிமையை ஏற்றுக்கொள்ளும் இந்தச்சபை வர்க்கம், மதம்,

மொழி ஆகியவற்றின் அடிப்படையின் மேல் உண்டான சிறுபான்மையோரைச் சேர்ந்தவர்கள் தங்கள் தேசத்தைச் சேர்ந்த பிறகுடிகளுடன் சேர்ந்து விசுவாசமுள்ளவர்களாக ஒத்துழைக்க வேண்டுமென்ற அவர்களுடைய கடமையை வற்புறுத்துகிறது.'' உரிமையைக் கடமையினின்றும் வேறு படுத்த முடியாது. உரிமையும் கடமையும் ஒரே நாணயத் தின் இரண்டு பக்கங்கள் மாதிரி. உண்மையில் கடமையி லிருந்துதான் உரிமை பிறக்கிறது. ஒருவன் தன் கடமையை நிறைவேற்றுவதால்தான் உரிமைக்கு உரியவனாகின்றான். ஒரு நாட்டைச் சேர்ந்த குடிகள் அந்த நாட்டினிடம் விசு வாசத்துடன் இருக்கவேண்டுமென்ற கடமையிலிருந்து தான், அவர்களை உள்நாட்டுக் கலகத்தினின்றும், வெளி நாட்டுப் படையெடுப்பிலிருந்தும் காப்பாற்றுவது அரசாங் கத்தின் பொறுப்பு என்ற கடமை பிறக்கிறது. ஒரு நாட் டிலே வாழும் சிறுபான்மையோரின் பிரதான கடமை, அந்த நாட்டின் இதர குடிகளுடன் வேற்றுமை யுணர்ச்சி யின்றி நாட்டின் முன்னேற்றத்துக்கான எல்லா வேலை களிலும் பூரண பங்கெடுத்துக்கொள்வது. தங்களுடைய தனி மதத்தையோ மொழியையோ பாதிக்கிறது என்ற காரணத்தைக்காட்டி, நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடாமல் இருப்பது அவர்களுடைய புனிதமான கடமை. பிறமக்களுடன் சமத்துவத்துடன் நடத்தப்பட வேண்டுமென்ற உரிமையைக் கோரும் சிறு பான்மையோர், அவர்களுடைய கடமைகளைத் தாங்களும் சேர்ந்து நிறைவேற்ற முன்வரவேண்டும். அவர்கள் சிறு பான்மையோராக இருப்பது அந்தக் கடமைகளை நிறை வேற்றுவதில் குறுக்கே நிற்கக்கூடாது. தேசத்தின் தற்காப்பு, ராணுவ சேவை ஆகியவற்றில் பிறகுடிகளுடன் சரிநிகர் நின்று பணியாற்றுவது சிறுபான்மையோரின் கடமை என்பது உலகமெங்கும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

பொறுப்புணர்ச்சியும், நியாய மனப்பான்மையும் மக்களிடையே இல்லாவிட்டால் இந்த உரிமைகள், கடமைகள் யாவும் வெறும் ஏட்டுச்சுரைக்காய் ஆகிவிடும். தாராளத்துடனும், பெருந்தன்மையுடனும் நடந்துகொள்வது பெரும்பான்மையோரின் கடமை. ஆனால் அவர்களுடன் பூரண நல்லெண்ணத்துடன் ஒத்துழைப்பது சிறுபான்மையோரின் கடமை. பரஸ்பர நம்பிக்கையும், மரியாதையும், அன்பும்தான் எல்லோருடைய நன்மைக்கும் பாதுகாப்பு; உறுதிப்பாடு. 1914-ம் வருஷ யுத்தத்துக்குப்பின் மஸாரிக் (Masaryk) ஐத் தலைவராகக் கொண்ட செகோஸ்லொவேகியா (Czechoslovakia) சர்க்கார் சிறுபான்மையோரை மிகப் பெருந்தன்மையுடன் நடத்தினார்கள். முன்னே கூறப்பட்ட சிறுபான்மையோரின் உரிமைகளில், குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் அவர்களுடைய சொந்தப் பாஷையின் மூலமாகவே ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் போதனை நடைபெறவேண்டும் என்பதில் "ஆரம்பப் பள்ளிக்கூடம்" என்ற கட்டுப்பாடு Czechoslovakia ஒப்பந்தத்தில் இல்லை. பொதுவாகக் 'கல்வி' என்றுதான் இருக்கிறது. இன்று நம்நாடு சுதந்திரக் கோயிலின் வாயிலில் நிற்கிறது. இந்த நாட்டின் வருங்கால அரசியல் திட்டத்தை நிர்மாணிக்கும் வேலையில் அரசியல் நிர்ணயசபை ஈடுபட்டிருக்கிறது. அந்த சபை உருப்படுத்தும் அரசியல் சட்டத்தில் சிறுபான்மையோரின் உரிமைகளும் கடமைகளும் இடம் பெறுவது அவசியம் தான். ஆனால் இந்தியன் ஒவ்வொருவனும் தன்னுடைய இதயத்திலே பரஸ்பர அன்பு என்ற மையைக் கொண்டு உண்மையென்ற எழுதுகோலால் தன்னுடைய கடமையை ஆணித்தரமாக வரைந்து கொள்வதே, எல்லோருடைய நலன்களையும் உரிமைகளையும் பாதுகாக்கும் ஒரே உத்தரவாதமாகும்.

# 8. ஜனநாயகம் ஓங்க!—இடித்துக் காட்டும் எதிர்க்கட்சி

பதினேழு, பதினெட்டாம் நூற்றுண்டுகளில் இங்கிலாந்தில் வாழ்ந்திருந்த டேனியல் டிபோ (Defoe) என்ற சிறந்த ஆங்கில ஆசிரியர், ராபின்ஸன் க்ரூஸோ என்ற உயர்ந்த கற்பனைச் சுயசரிதமொன்று எழுதியிருக்கிருர். அதன் கதாநாயகனுகிய ராபின்ஸன் க்ரூஸோ கப்பல் விபத்துக்காளாகி அவனுடைய சகாக்கள் அனைவரும் கடலில் மூழ்கி மாண்டுபோக, தான் மாத்திரம் நீந்திச் சென்று ஒரு தீவையடைகிருன். மனித சஞ்சாரமேயற்ற அந்தத் தீவிலே தன்னந்தனியாக, பிறர்யாருடைய உதவியோ, கட்டுப்பாடோ இன்றி, தன்னிஷ்டப்படி தனக்கு இருப்பதற்கு வேண்டிய இடத்தையும், உண்பதற்கு வேண்டிய உணவையும் தேடிக்கொண்டு சிலநாட்கள் அவன் வாழ்க்கை நடத்துகிருன். அப்படிப்பட்டவனுக்குச் சட்டமோ, கடமையோ, உரிமையோ இருக்க முடியாது. சர் ஜான் சால்மண்ட் என்ற சிறந்த சட்ட ஆராய்ச்சியாளர் சொல்லுகிறபடி, 'மனித வர்க்கத்திலிருந்து ஒதுங்கித் தன்னுடைய தீவில் வாழ்ந்து வந்த ராபின்ஸன்க்ரூஸோவுக்கு, அவனுடைய செயல்கள் சரியானவையோ அல்லது நியாயமற்றவையோ, என்பதே இல்லை. அவனுடைய நன்மைக்கு உகந்தவைகளாக இருந்தால் அவை விவேகமான செயல்கள்; இல்லாவிட்டால் அவை மடத்தனமானவை'. ஆனல், மனிதன் ஒவ்வொருவனும் ராபின்ஸன்

"ஜனநாயகம் ஓங்க" என்ற தொடரில் "இடித்துக்காட்டும் எதிர்க்கட்சி" என்ற தலைப்பைக் கொண்ட இப்பிரசங்கம் 16—2—1949-ல் அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்திலிருந்து ஒலிபரப்பப் பட்டது.

க்ரூஸோவல்ல. மனிதன் ஒரு சமூகப் பிராணி; அவன் கூட்டம் கூட்டமாகச் சேர்ந்தே வாழ்கிறுன், வாழ விரும்பு கிறுன் என்பதை ஒருவர் பாக்கியில்லாமல் சொல்லியிருக் கிறுர்கள். அப்படிச் சேர்ந்து வாழும் மக்களிடையே நிலவும் பரஸ்பர உறவு எப்படியிருக்கவேண்டும்; அதை எப்படி உண்டுபண்ண முடியும், எப்படி வளர்க்கவேண்டும்; என்ற அடிப்படையான பிரச்னே மனித சமூகம் தோன்றிய நாள் முதல் இருந்து கொண்டேயிருக்கிறது. அதற்கு முடிவு காணச் செய்யப்பட்ட முயற்சியின் சின்னங்கள் தாம் பல்வேறுபட்ட அரசியல் அமைப்பு முறைகளின் தோற்றங்கள்.

மனிதன் பகுத்தறிவு அமையப் பெற்றவன்; சிந்தனு சக்தி உடையவன்; தனக்கு உகந்தது எது என்பதைத் தானே நிதானித்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றவன். தன்னுடைய இந்த உயரிய வாய்ப்பைப் பூரணமாக அநுப விக்கும் உரிமை வேண்டுமென்று ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறுன். அந்த உரிமை மனித வர்க்கத்தின் பிறப் புரிமை; மனித இயற்கையினின்றும் பிரிக்க முடியாதது என்று உறுதியாக நம்புகிறுன். ஆனல், ஒருவனுடைய சிந்தனுத் துறையைப்போல் மற்ருெருவனுடையது இருப்ப தில்லே; துறை ஒன்ருக இருப்பினும் மார்க்கம் ஒன்ருக இருப்பதில்லே. ஒருவனுடைய நிதானம் மற்ருெருவ னுடைய நிதானத்துக்கு மாற்றமாக இருக்கிறது. இதன் காரணமாக, மக்கள் வாழ்க்கையிலே முரண்பாடு, வெறுப்பு, பரஸ்பரப் போராட்டம் முதலியவை தோன்று கின்றன. இவைகளுக்கு முடிவுகாண்பது எப்படி?

ஆதியில் கூட்டமாக வாழ்ந்திருந்த மக்களிடையே, பிறரைவிட அதிக பலத்தையும், சாமர்த்தியத்தையும் இயற் கையிலேயே பெற்றிருந்த ஒருவன் மற்றவர்கள் மீது அதி காரம் செலுத்த ஆரம்பித்தான். எல்லோரும் ஒருவனுடைய

அதிகாரத்துக்கு விதி விலக்கின்றிக் கீழ்ப்படிவதன் மூலம் தங்களில் ஒருவனுக்கும் மற்றொருவனுக்குமிடையே நிகழும் பூசல்களையும், இன்னல்களையும் தவிர்க்க முடிகிறது என் பதை அநுபவத்தில் கண்ட மக்கள் அவனுடைய தலை மையை மனமுவந்து ஏற்றுக்கொண்டார்கள். மேலும் அவனுடைய உயர்ந்த திறமையைத் தெய்வத் தன்மை யாகக் கருதி அவனைத் தெய்வத்தின் பிரதிநிதியாகக் கொண்டாடினார்கள். இந்தத் தலைவன்தான் பின்னால் அரசனாகிறான்; அரசுரிமை பரம்பரையாகி விடுகிறது. இந்த அரசியல் முறையைத்தான் "முடியரசு" என் றார்கள். ஆனால், ஒரு வகுப்பிலே பிறரைவிட உயர்ந்த திறமை வாய்ந்தவன் ஒருவனிருப்பதற்குப் பதிலாகப் பலர் இருந்துவிட்டால், ஒருவனுடைய ஏக உரிமைக்கு இடம் இல்லாமல் போய்விடுகிறது. இந்தப் பலரில் ஒவ்வொரு வரும், பிறர் எல்லோர் மீதும் ஆதிக்கம் செலுத்த விரும்பு கிறார்கள். இதன் பலனாக, இந்தப் பலர் ஒரே குழுவாகச் சேர்ந்து மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதைத்தான் 'சிலர் ஆட்சி முறை' என்றார்கள். ஆனால், மனிதனின் தன் மதிப்பும், சமத்துவ உணர்ச்சியும் ஓர் அரசனின் ஆட்சியையோ, சிலர் ஆட்சியையோ ஏற்க அவனை அனுமதிக்கவில்லை. அமைப்பிலும், பிறப்பிலும், ஆற்றலிலும் அடிப்படையான வேறுபாடுகளில்லாமலிருக் கும்போது, ஒருவன் மீது மற்றொருவன் ஆட்சி செலுத்து வது இயற்கைக்கு ஒவ்வாதது; ஆகையால், ஒவ்வொரு வனும் தன்னைத்தானே ஆண்டுகொள்ள வேண்டும்; எல் லோர் நன்மையையும் கருதிச் சமூகத்தின்மேல் செலுத்தப் படும் ஆட்சியிலும், அதனுடைய முறைமை அமைப்பிலும் ஒவ்வொருவருக்கும் பங்கு வேண்டும் என்ற கோட்பாடும் கோரிக்கையும் எழுந்தன. இதை நிறைவேற்றுவதற்காகத் தோன்றிய அரசியல் முறைமைதான் மக்களாட்சி அல்லது

குடியரசு அல்லது ஜனநாயகம் என்று சொல்லப் படுவது.

ஆதிகாலத்தில் ஜனநாயக ஆட்சிமுறை உலகில் நிலவி வந்ததற்கு ஆதாரமாக எல்லோரும் கிரேக்க நாட்டையே சுட்டிக் காட்டுவார்கள். அந்நாடு பல நகரங் களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நகரத்திலும் தனித் தன்னரசு நடந்துவந்தது. நகரமக்கள் ஒன்றுகூடி தங்கள் நகரத்தின் நிர்வாகத்தைத் தங்களால் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலரிடம் ஒப்புவித்தார்கள். அவர்கள் அடிக் கடி கூடித் தங்களுடைய பிரதிநிதிகள் எப்படி நிர்வாகத்தை நடத்தவேண்டு மென்பதற்கு ஆலோசனை கூறினர்கள்; கட்டளையிட்டார்கள்; தங்கள் விருப்பத்தைத் தங்கள் பிரதி நிதிகள் நிறைவேற்றுவிட்டால், அவர்களை வெளியேற்றி விட்டு, அவர்களுக்குப் பதிலாகப் பிறரை நியமித்தார்கள். இதைத்தான் நகரக்குடியரசு என்றும் நேரடி ஜனநாயக மென்றும் அரசியல் அறிஞர்களும் ஆசிரியர்களும் கூறு கிருர்கள். இன்றைய மக்களின் வளர்ச்சிக் கட்டத்தில் ஜனநாயகம்தான் சிறந்த அரசியல் முறை என்று எல் லோரும் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். ஆனல், அதை எப்படி அமுல் செய்வது என்பதுதான் பிரச்னை. இங்கும், அரசியல் கட்சி அடிப்படையின் மேல்தான் ஜனநாயகம் நடை முறையில் வாழ முடியும் என்று பெரும்பாலோர் முடிவு கட்டியிருக்கிருர்கள். இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னல் கிரேக்கநாடு சிறு சிறு நகரங் களாகப் பிரிந்திருந்தது. ஆகையால், ஒவ்வொரு நகர மக்களும் அவசியமானபோது ஒன்றுகூடி முடிவு காண்பது சுலபமாக இருந்தது. மேலும் அந்த நகரங்களின் நிர் வாகஸ்தர்களின் பொறுப்பும் குறைவாகவே யிருந்தது. ஆனல், விஞ்ஞான அபிவிருத்தியின் காரணமாகக் கால மும், இடமும், தூரமும் குறுகிப் போயிருக்கும் இன்றைய

உலகுக்கு, கிரேக்க நேரடி ஜனநாயகம் பொருந்தாது. இக் காலத்தில் அரசாங்கத்தின் அதிகாரத்துக்கும் பொறுப்புக் கும் வரம்பென்பதே இல்லாமல் போய்விட்டது. வாழ்க்கை யின் எந்த அம்சத்திலும் கட்டத்திலும் அரசாங்கம் தலை யிடக்கூடும். ஆகையால், இந்த நிலைமைக்குப் பொருத்த மாகவும், மக்களுடைய ஆட்சி உரிமைக்குப் பங்கம் வரா மலும் இருக்கக் கூடிய அமுல் முறையொன்றை நிதானிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதுதான் இன்று நடை முறையில் இருந்துவரும் மறைமுகமான ஜனநாயகம்.

இந்த முறைப்படி, தேசமக்கள் பல தொகுதிகளாகப் பிரிந்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துப் பார்லி மெண்ட் என்னும் சட்டசபைக்கு அனுப்புகிறார்கள். சட்ட சபை அங்கத்தினர்கள் தங்கள் நம்பிக்கைக்குப் பாத்திர மான ஒருவரைப் பொறுக்கி அவரிடம் தேசத்தின் நிர்வாகப் பொறுப்பை ஒப்புவிக்கிறார்கள். இப்படிப் பொறுக்கியெடுக் கப்பட்ட நிர்வாகத் தலைவர் தம்முடைய கடமைகளை நிறை வேற்றுவதில் தமக்கு உதவுவதற்காகச் சில சகாக்களைச் சேர்த்துக் கொள்கிறார். இந்த நிர்வாகக் குழுவின் செயல் களை, சட்டசபை கண்காணித்து வருகிறது. சட்டசபை அங்கத்தினர்கள் தேச மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரடியான பிரதிநிதிகள். நிர்வாகத் தலைவர் சட்டசபை யால் பொறுக்கி யெடுக்கப்பட்டவர்; அதன் கண் காணிப்புக்கு உட்பட்டவர். ஆகையால், மறைமுகமாக, நிர்வாகத் தலைவர் தேசமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; அவர்களுடைய பிரதிநிதி; அவர்களுடைய கண்காணிப் புக்கு உட்பட்டவர். இதுதான் இன்று பல நாடுகளிலும் அமுலில் இருந்துவரும் ஜனநாயக ஆட்சி முறையின் பொதுவான அடிப்படை அம்சம். ஆனால், இந்தத் தேர்தல்களில் பங்கெடுத்துக் கொள்ளும் மக்கள் எல் லோரும் அரசியல் நிர்வாகத்தின் முக்கியத்துவத்தை

உணர்ந்து கொள்வதிலும், நுணுக்கங்களை அறிந்து கொள் வதிலும் ஒரே தரமாக இருப்பார்கள் என்று சொல்ல முடி யாது. அப்படி அவர்கள் இருப்பதாக வைத்துக் கொண் டாலும், அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் சட்டசபை அங் கத்தினர்கள் ஒரே விஷயத்தில் ஆளுக்கொரு அபிப்பிராயம் கொண்டிருந்தால் நாட்டின் நிர்வாகம் என்னவாகும்? ஸ்தம்பித்துவிடும். ஆகையால், இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்காக, எல்லோரும் ஏகோபித்து முடிவு செய்ய முடியாமலிருக்கும்போது, முடிவு செய்யும் உரிமை பெற்ற வர்களில் பெரும்பான்மையோரின் அபிப்பிராயம் எதுவோ, அதுவே எல்லோருடைய முடிவாகவும் கருதப்படவேண்டு மென்பது இன்று ஜனநாயகத்தின் இன்றியமையாத அம் சமாகிவிட்டது. இதைத்தான் மெஜாரிட்டி ஆட்சி என்று சொல்வது. சட்ட சபையில் மெஜாரிட்டி பெற்றுத் தேச நிர்வாகத்தைத் தங்கள் கையில் வைத்துக் கொள்ளவேண்டு மென்று விரும்புகிறவர்கள், கட்சிகளாகச் சேர்ந்து கொண்டு வாக்காளர்களை யணுகித் தனி அங்கத்தினர் களுக்கு ஆதரவு தேடாமல், தங்கள் கட்சிக்காகவும், தங்கள் கட்சிக் கொள்கைக்காகவும், தங்கள் கட்சி மெஜாரிட்டியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால், தேச மக்களுக்காக இன்னதின்னது செய்வோம் என்று உறுதி கூறி மக்களின் ஆதரவைத் தேடுகிறார்கள். ஆகையால், தேசத்தின் பல கட்சிகளுள்ளும், எந்தக் கட்சி பெருவாரியான மக்களின் அநுதாபத்தையும் ஆதரவையும் பெற்றிருக்கிறதோ, அந்தக் கட்சியின் அங்கத்தினர்களே பெருவாரியாகச் சட்ட சபைக்கு வந்து தேசத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்கள். இதன் காரணமாக, ஜனநாயகம் மெஜாரிட்டி ஆட்சியாக இருந்தது போய் மெஜாரிட்டிக் கட்சியின் ஆட்சியாக ஆகிவிடுகிறது.

தேர்தலில் மெஜாரிட்டி பெற்ற கட்சியார், மறுபடியும் தேர்தல் வரும்போது மக்களிடம் செல்லவேண்டியிருக்குமே என்பதற்காக, தேர்தல் காலத்தில் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முயல்கிருர்கள். ஆனால் தேர்தல் காலத்தில், அதிகாரப் பொறுப்பில் இல்லாமலிருக்கும்போது கொடுத்த வாக்குறுதிக்கும், நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டபிறகு அதைச் செயலில் கொண்டு வருவதற்குமிடையே ஓரளவு வித்தியாசம் எப்போதும் இருக்கத்தான் செய்யும். இதை எதிர்க்கட்சியார் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். இதுவல்லாமல் அதிகாரமுழுவதும் தங்கள் கையில் வந்ததனுல் உண்டான வெறி, தேர்தலில் தங்களுக்கு உதவி செய்தவர்களுக்குப் பிரதியுபகாரம் செய்ய வேண்டுமென்ற ஆசை, வாக்காளர்களுக்குத் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்ற ஆத்திரம், கட்சியின் பலத்தைக் குறைந்து போகாமல் வைத்திருக்க வேண்டிய அவசியம், தேர்தல் பிரசாரத்தினுல் எதிர்த்தவர்களிடமும் எதிர்த்தவர்களை ஆதரித்தவர்களிடமும் உண்டான கோபமும் வெறுப்பும் ஆகியவை மெஜாரிட்டி கட்சியாரை நிதானந்தவறிப்போகச் செய்யும். இதன் காரணமாக மக்கள் ஆட்சி நடப்பதற்குப் பதிலாக, அரசாங்கப் பொறுப்பிலிருக்கும் கட்சியை ஆட்டி வைக்கும் ஒருசில தலைவர்களின் எதேச்சாதிகார ஆட்சி தான் நடக்கும். இந்தப் பேரபாயத்தைத் தடுப்பதற்குத்தான் எதிர்க்கட்சி பெரிதும் உதவுகிறது. இவ்வுதவியை வெற்றிகரமாகச் செய்யவேண்டுமானுல் எதிர்க்கட்சியும் மக்களிடையே கிட்டத்தட்டச் சமமான செல்வாக்கு பெற்றதாகவோ பெறக்கூடியதாகவோ இருக்கவேண்டும். எதிர்க் கட்சி, மெஜாரிட்டிக் கட்சியாரின் ஆட்சியைக் குறை கூறுவதற்காக மாத்திரமல்ல ; எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

ஆகையால்தான் ஆங்கில தேசத்துப் பார்லிமெண்டின் எதிர்க்கட்சியை, மாட்சிமை தங்கிய மன்னரின் எதிர்க் கட்சி மாத்திரமல்ல ; மாற்று சர்க்காருங்கூட என்று சொல்வார்கள். இதற்கு நேர்மாருக, எதிர்க்கட்சி செல்வாக் கற்ற கட்சியாக இருக்குமாளுல், அதைப்பற்றி மெஜா ரிட்டிக் கட்சியார் சிறிதும் கவலைப்படமாட்டார்கள். இது மாத்திரமல்லாமல், எப்போதுமே எதிர்க்கட்சியாகவே இருக்கும் ஒரு கட்சியிலிருப்பதைவிட அதைவிட்டு விலகி விடுவதே மேலென்று அதனுடைய அங்கத்தினர்களே அதைக் கைவிட்டு, மெஜாரிட்டிக் கட்சியிலேயே சேர்ந்து விடுவார்கள். ஆகையால்தான் லார்ட் ப்ரைஸ் (Lord Bryce), "தோற்கடிக்கவே முடியாத பலத்தைப் பெற்றிராத வர்களாகவும், தோற்கடிப்பதைத் தகுதியானதாக்கும் அளவுக்குப் பலம் வாய்ந்தவர்களாகவும் இருக்கும் எதிர்க் கட்சியாரைப்போல வேறெதுவும் மனிதர்களை ஒன்ருகச் சேர்த்துப் பிணைப்பதில்லை" (Nothing holds men so close together as the presence of antagonists strong enough to be worth defeating, and not so strong as to be invincible.) என்று கூறுகிருர். தங்களுடைய குறைகளைக் கூர்ந்து கவனித்துப் பார்த் துக்கொண்டேயிருந்து, மக்களிடையே பறைசாற்றி, அவர்கள் தங்களிடம் கொண்டிருக்கும் அநுதாபத்தைக் குறைக்க எதிர்க்கட்சியொன்று காத்துக்கொண்டிருக் கிறது என்பதே, மெஜாரிட்டிக் கட்சியாரை நிதானத்துட னும் மக்களுடைய விருப்பத்துக்கிணங்கவும் ஆட்சியை நடத்தச்செய்யும். மிக்க வேகத்துடன் இழுத்துச் செல்லப்படும் தேர் சேதம் விளைவிக்காமலிருக்கும் பொருட்டு, அதனுடைய சக்கரத்துக்கு முட்டுக்கட்டை கொடுக்கப்படுவதுபோல, வெற்றி வெறியும், அதிகார வெறியும் கொண்ட மெஜாரிட்டிக் கட்சியை நிதானப்

பாதையிலே நடத்திச் செல்வதற்கு எதிர்க்கட்சி உதவுகிறது. நிர்வாகத்துறையில் நடக்கும் ஒவ்வொன்றைப் பற்றியும் கேள்வி கேட்கும் எதிர்க்கட்சியாருக்குச் சர்க்கார் பதிலளித்தாக வேண்டும். கேள்வி கேட்கும் இவ்வுரிமையை, நிர்வாக ஊழல்களை வெளிப்படுத்துவதற்கும் மக்களிடையே ஆட்சி நடத்தும் கட்சிக்கு அபகீர்த்தியை வாங்கிவைப்பதற்கும் எதிர்க்கட்சியார் உபயோகப்படுத்துகிறார்கள். ஆகையால், ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கும் மெஜாரிட்டிக் கட்சியார், பொது மக்களின் விருப்பத்துக்கிணங்க ஆட்சியை நடத்துவதற்கும், குற்றங்குறைகளில்லாமல் நிர்வாகத்தை நடத்துவதற்கும் எதிர்க்கட்சியார் ஒரு தூண்டுகோலாக இருக்கிறார்கள். இத்தகைய கண்காணிப்பு, அரிய திறமையும் சாமர்த்தியமும் வாய்ந்த மெஜாரிட்டிக் கட்சியாரின் ஓரிரு தலைவர்கள், ஜனநாயகத்துக்குப் பதிலாக, எதேச்சாதிகார ஆட்சியை நிலை நாட்டி விடுவதைத் தடுக்கிறது. ஜனநாயக வளர்ச்சிக்கு இத்தகைய எதிர்க்கட்சியின் அவசியத்தை உத்தேசித்துத்தான் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் எதிர்க்கட்சித் தலைவரை மாட்சிமை தங்கிய மன்னரின் எதிர்ப்புத் தலைவர் என்று கூப்பிடுவதோடல்லாமல், சர்க்காரை நடத்தும் மந்திரிகளுக்குச் சம்பளங் கொடுப்பதைப்போல எதிர்க்கட்சித் தலைவருக்கும் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். இத்தகைய பழக்கம் கானடாவின் பார்லிமெண்டிலும் இருந்து வருகிறது.

சட்டசபைக்குள் செய்யும் இந்தச் சேவையைவிடப் பெரிய சேவையை எதிர்க்கட்சி சட்டசபைக்கு வெளியிலே செய்கிறது. வாக்கு என்பது தேசமக்கள் ஒவ்வொருவரிடமும் வாய்த்துள்ள ஒப்பற்ற அரசியல் ஆயுதம். அதனைப்பயனுறக் கையாள்வதற்கு ஓரளவு அரசியலறிவு இன்றியமையாதது. இந்த அரசியலறிவை மக்களிடையே பரப்புவதில் தான், கட்சி அடிப்படையின்மேல் நடக்கும்

தேர்தல்களில் எதிர்க்கட்சி பெரிய சேவை செய்கிறது. தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சியும் வாக்காளர் களை அணுகி, அந்தந்தக் கட்சிக்குச் சாதமாக வாக்களிக்க வேண்டியதின் அவசியத்தை வற்புறுத்தும்போது, வாக் காளர் ஒவ்வொருவரும் தமக்குமுன் சமர்ப்பிக்கப்பட்ட பல வாதங்களையும் சீர்தூக்கிச் சிந்தித்துப் பார்த்துத் தம் நலனைப்பற்றியும், தம் தேசத்தின் நலனைப்பற்றியும் தாமே ஒரு முடிவுக்கு வரும் வசதியைப் பெறுகிருர். முடிவாக, ஜனநாயகத்தின் வெற்றி பொது மக்களின் அரசியல் அறிவையும் விவேகத்தையுமே பொறுத்திருப்பதால், எதிர்க் கட்சியின் இத்தொண்டு ஒப்புயர்வற்றது. ஆகையால், கட்சி அடிப்படையின் மேல் நடக்கும் ஜனநாயக ஆட்சிக்கு, இடித்துக்காட்டும் எதிர்க்கட்சியே கட்டிக் காக்கும் காவலனுகவும், ஊட்டி வளர்க்கும் ஆயா வாகவும், தட்டிப்பேசி எச்சரிக்கும் நண்பனுகவும் அமைந்து விடுகிறது.

ஆனால், ஜனநாயக அமைப்புக்குக் கட்சி யடிப்படை அவசியமா என்பது இன்னும் முக்கியமான கேள்வி. கடமையுணர்ச்சியும், நியாயவேட்கையும், உண்மை யார்வமும் வாய்ந்த தனி மனிதனே ஜனநாயகத்தின் குறிக்கோளாகும். உண்மையில் பார்க்கப் போனல், ஒரு ஆட்சிமுறை எதற்காக இருக்கவேண்டும் ? ஒரு அரசாங்கம் எதைச் சாதிக்கப் போகிறது ? "அரசாங்கங்களின் வேலை யெல்லாம் குடிகளின் ஒழுக்கத்தைப் பாதுகாக்க வேண்டிய துதான். அரசாங்கம் என்பது சம அந்தஸ்துள்ள தனித்தனி மனிதர்கள் சேர்ந்த ஒரு கூட்டுறவுச் சங்கம் தான். எல்லோருமாகச் சேர்ந்து, கூடிய மட்டும் நல்வாழ்வு வாழ முயல்வதே அரசாங்கம்" என்று அரிஸ்டாட்டல் கருதினர். "தனித்தனி மனிதருடைய சுதந்திரத்தைக் காக்க வேண்டியதுதான் அரசாங்கத்தின் கடமை" என்று

ஜான் ஸ்டுவர்ட் மில் எழுதினர். ஆகையால்தான் "மிக எளிமையானதிலிருந்து மிக்க உன்னதமானது வரையிலு முள்ள எல்லாக் கருத்துக்களிலும், நல்லாட்சி எந்தக் காரணங்களையும் நிலைமைகளையும் பொறுத்திருக்கிறது என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோமானல், அவைகளில் பிரதானமானது--பிற எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டது— எந்தச் சமூகத்தின்மீது ஆட்சி செலுத்தப்படுகிறதோ அந்தச் சமூகத்தின் உறுப்பினர்களான மனிதர்களின் பண்புகள் என்பதை நாம் காண்கிறோம்" என்று ஆவேசத்துடன் அவர் எழுதினர். ஆனல், கட்சி அடிப்படையின்மேல் நடக்கும் ஜனநாயக ஆட்சியில் தனி மனிதனுக்கு இடமே இல்லாமல் போகிறது. கட்சி என்னும் ரோட்—ரோலரின் கீழ் அகப்பட்ட கூழாங்கல்லாக தனி மனிதன் ஆகிருன். கட்சிக் கட்டுப்பாடு என்ற ராக்ஷதனுக்குக் தனி மனிதனின் மனச்சாட்சி பலியிடப்படுகிறது. அரசியலறிவும், ஒழுக்க நெறியும் விருத்தியடையாத நாடுகள் ஒவ்வொன்றிலும் நாம் இதைக் காண்கிறோம். பொது மக்களிடையே அரசியலறிவும், சிந்தனை சக்தியும் வளர உதவும் அரசியல் கட்சிகள், தத்தம் அங்கத்தினர்களிடையே சிந்தனை சக்தியைக் குறைக்கவே உதவுகிறது. ஆகையால்தான் "சமத்துவம் என்ற கோட்பாட்டில் நான் இரண்டு போக்குகளைக் காண்கிறேன். ஒன்று, ஒவ்வொரு மனிதனுடைய மனத்தையும் முன்னல் சிந்திக்கப்படாத கருத்துக்களிடையே இழுத்துச் செல்வது; மற்றொன்று, அவனைச் சிந்திப்பதிலிருந்தே தடுப்பது. ஜனநாயக சமூக நிலைமை சாத்தியமாக்குகிற மனச்சுதந்திரத்தை, சில சட்டங்களின் கீழ், ஜனநாயகம் எப்படி அழிக்குமென்பதை நான் காண்கிறேன்; ஆகவே, ஒரு காலத்தில் வகுப்புகளோ, மனிதர்களோ தன்மீது சுமத்திய எல்லாத் தளைகளையும் களைந்தெறிந்துவிட்ட மனிதமனம், பெருவாரியான எண்ணிக்

கையின் பொது உள்ளம் என்பதனுல் இறுகப்பிணிக்கப் பட்டுப்போகும்'' என்று வருத்தத்துடனும், தீர்க்க தரிசனத்துடனும் டி டாக்கெவில்லி (De Tocqueville) எழுதினுர்.

ஆகையால், தனி மனிதனுடைய பூரண வளர்ச்சியையும், பூரண சுதந்திரத்தையும் நோக்கமாகக் கொண்ட ஜனநாயகம், கட்சி அடிப்படையின்மேல் அமைய முடியாது. காந்தீயத் திட்டப்படி, கிராமக் குடியரசுகளின் அடிப்படையின்மேல்தான் உண்மையான ஜனநாயகத்தை அமுல் நடத்தமுடியும். இன்று கட்சி அடிப்படையின்மேல் ஜனநாயகம் நடைபெறுகிறது என்று நாம் நினைக்கிருேம் என்பதற்காக, கட்சி அடிப்படை ஜனநாயக அரசியல் முறைக்கு இன்றியமையாதது என்று ஆகிவிடாது. ''உலகத்தில் அரசாங்கங்கள் எதற்காக ஏற்படுத்தப் படுகின்றனவோ அந்தக் காரியத்தை எந்த நாட்டில், எந்தக் காலத்தில், எந்த அரசாங்கம் மிகவும் வெற்றிகரமாகச் செய்து முடிக்கிறதோ, அந்த அரசாங்கம்தான், அந்தக் காலத்துக்கு, அந்த நாட்டிற்கு மிகவும் சிறந்த அரசாங்கம்'' என்று அரிஸ்டாட்டல் எழுதினுர். ஆகையால் நாட்டில் வாழும் ஒவ்வொருவனும் சமத்துவ அறிவு பெறவேண்டுமானுல், நாட்டின் நிர்வாகத்துக்குத் தானும் பொறுப்பாளி என்பதைத் திட்டமாக உணரவேண்டுமானுல், அதிகார அமைப்பு அடியிலிருந்து கட்டப்பட்டதும், கிராமக் குடியரசின் அடிப்படையின்மேல் நிறுவப்பட்டதுமான ஜனநாயக சர்க்கார் வேண்டும். அதுதான் தனிமனிதனின் மகிமையை மதிப்பது; கௌரவத்தைக் காப்பது; ஆத்மாவை வளர்ப்பது.

# 9. ஆசியப்பிரச்னைகள்—தற்காப்பு

உலகின் நிலப்பரப்பில், மூன்றிலொரு பாகத்துக்கு மேல் ஆசியாக் கண்டத்தில் அடங்கியிருக்கிறது. உலகின் மொத்த ஜனத்தொகை 221 கோடியே 97 லக்ஷம் என்று சமீபத்தில் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதில் 122 கோடியே 41 லக்ஷம்பேர் ஆசியாக் கண்டத்தில் வாழ்கிறார்கள். அதாவது உலக மக்களில் சுமார் ஐந்தில் மூன்று பங்கானவர்கள் இந்தக் கண்டத்திலேயே வசிக்கிறார்கள். பல தேசங்கள் இக்கண்டத்தில் அடங்கியிருக்கின்றன. அந்த நாடுகளில் நடைபெறும் அரசாங்கமுறைகள் பல்வேறு பட்டவை. அம்மக்களின் மதம், மொழி, நடைமுறை பலமாக வேறுபட்டிருக்கின்றன. இந்த நாடுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று சுலபமாகக் கடக்கமுடியாதபடி உயர்ந்த மலைத்தொடர்களாலும், இயற்கை யெல்லைகளாலும் பிரிக்கப் பட்டிருக்கின்றன. இதன் காரணமாக, சமீபகாலம்வரையில் இவைகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு இல்லை. ஆனால், இதற்குமாறாக, ஐரோப்பிய நாடுகள் இந்த ஆசிய நாடுகளுடன் தனித்தனியே தொடர்புகொள்ளத் தொடங்கின. ஆசிய நாடுகளில் பல கடற்கரை நாடுகளாக இருந்ததும், மேற்கூறிய ஐரோப்பிய நாடுகள் கப்பல் தொழிலை வெகுவாக விருத்தி செய்து பிறநாடுகளுடன் வாணிபத்தை வளர்க்க உறுதிகொண்டிருந்ததும், இத்தொடர்புக்கு முக்கியமான காரணங்களாக இருந்தன. அந்நாடுகளின் விஞ்ஞான அறிவும், பெருத்த செல்வமும் ஆசியாவை அவைகளுக்கு ஒரு சிறந்த மார்க்கெட்டாக ஆக்குவதற்குப் பெரிதும் உதவின. வாணிப வளர்ச்சி படிப்படியாக அரசியல்

---

" ஆசியப்பிரச்னைகள் " என்ற தொடரிலே " தற்காப் "பைப் பற்றிய இப்பிரசங்கம் 3-9-47-ல் அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்தி லிருந்து ஒலிபரப்பப்பட்டது.

ஆட்சியில் முடிந்தது. இதன் காரணமாக, அநேகமாக எல்லா ஆசியநாடுகளுமே அந்நிய ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தன. எனவே, நேற்றுவரையில் மேற்கத்திய வல்லரசுகளின் ஏகாதிபத்திய லீலைகளுக்கு ஒரு சிறந்த அரங்கமாகத்தான் ஆசியாக்கண்டம் இருந்தது. ருஷ்யா, ஜப்பான், துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் தான் இதற்கு ஒருவாறு விலக்காக இருந்தன. இன்றுதான் ஆசியாக் கண்டம் தன் சுய உயிரையும் வாழ்வையும் எதிர்நோக்கி விழித்தெழுகிறது; ஆசிய நாடுகள் அந்நிய ஆட்சிப் பிடிப்பிலிருந்து விடுதலை பெறுகின்றன; ஆசிய மக்கள் தங்களைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலியை அறுத் தெறிந்துவிட்டுத் தங்கள் பிறப்புரிமையைப் பெற முனைந்து நிற்கின்றனர். ஆசிய மக்கள் அனைவருக்கும் சில பொது வானலக்ஷியங்கள், அபிலாஷைகள், நோக்கங்கள் இருக் கின்றன என்ற எண்ணம் அவர்களிடையே தோன்ற ஆரம்பித்திருக்கிறது. ஆசிய மனப்பான்மை என்ற புதியதோர் உணர்ச்சியும் உதயமாகியிருக்கிறது. இவை யாவற்றின் சின்னம்தான் சமீபத்தில் புது டில்லியில் நடந்த சர்வ ஆசிய உறவு மகாநாடு. பல தேசங்களி லிருந்தும் மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகள் தங்களை முன்னோக்கியிருக்கும் பொதுப் பிரச்னைகள் பலவற்றைப் பற்றி ஆலோசனை நடத்தினார்கள். ஆனால், மற்றொரு நாட்டின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டுச் சுதந்திரம் அடையும் நாடுகளை எதிர்நோக்கியிருக்கும் பிரச்னைகள் மகத்தானவை; பலதரப்பட்டவை; மிகச் சிக்கலானவை. அந்நாடுகளின் அரசியல் அமைப்பு மாறவேண்டும்; சமூக வாழ்வின் அடிப்படை மாற்றியமைக்கப்பட வேண்டும்; பொருளாதார வாழ்வு புதுப்பிக்கப்படவேண்டும். இப்பெருங் காரியங்களைச் சாதிப்பதற்குக் கல்வி, கைத்தொழில், ஆட்சி முறை ஆகிய பல துறைகளிலும் அடிப்படையான சீர்

திருத்தங்கள் நடைபெற வேண்டும். இவ்வேலைகள் யாவும் செவ்வனே நிறைவேறவேண்டுமானால் நாட்டில் அமைதி நிலவவேண்டும்; நாடுபெற்ற சுதந்திரம் நிலைத்து நிற்க வேண்டும். ஆகவே, ஆசியாவின் புது வாழ்வுக்கு அஸ்திவாரமாக இருப்பது அதன் தற்காப்பு; இதன் காரணமாக, இன்று ஆசியாவை அணுகியிருக்கும் பிரச்னைகள் யாவற்றிலும் பிரதானமாக இருப்பது தற்காப்பேயாகும்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி நிலையிலும், அரசியல் அமைப்பு முறையிலும், ஒரு நாட்டின் தற்காப்பு என்பது புரட்சிகரமான மாறுதல்களை அடைந்திருக்கிறது. கடந்த இரு உலக யுத்தங்களும் இதை வலியுறுத்துகின்றன. குறிப்பாக, சமீபத்தில் முடிவுபெற்ற இரண்டாவது உலக யுத்தத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்கள் பல. அவைகளில் முக்கியமானவை, உலகில் ஏதாவதொரு மூலையில் அமைதியின்மை ஏற்படுமானால், உலகின் வேறெந்தப் பாகமும் நீண்ட நாள் அமைதியுடன் இருக்க முடியாதென்பதும், தற்காப்பு என்பதிலிருந்து நாட்டின் வேறெந்த நடவடிக்கையும் தப்ப முடியாதென்பதும் தான். தூரம் என்பதைத் தொலைத்துவிட்டது விஞ்ஞானம். வி-1, வி-2 என்ற ஆயுதங்கள் இதை நன்றாக நிரூபித்துவிட்டன. இறுதியாகத் தோன்றிய அணுக்குண்டும் உலகின் பரப்பைக் குறுகியதாகவும், உலகின் வாழ்வை அற்பாயுளாகவும் செய்துவிட்டிருக்கிறது. ஒருநாட்டின் அரசியல் எல்லைக்கும், அதன் ராணுவ எல்லைக்கும் சம்பந்தமில்லாமல் போய்விட்டது. ஒரு நாடு எவ்வளவு சிறிதாக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், அது சுதந்திரமாகவும் சுபிக்ஷமாகவும் வாழவேண்டுமானால் உலக முழுவதிலும் அமைதி நிலவவேண்டும். அதாவது, உலகின் எல்லைகள் தாம் அச் சிறுநாட்டின் ராணுவ எல்லைகள். இதன் காரணமாகவே, 'ஒரு உலகம்' என்ற உணர்ச்சி உலகின் பல நாடு

களிலும் வாழும் அறிஞர்களிடையே தோன்றியிருக்கிறது. ஒரு நாட்டின் உண்மையான தற்காப்பு உலகின் அமைதியே. ஒரு தேசத்தில் ஒழுங்கும் அமைதியும் நிறைந்த வாழ்வு நடைபெறுவதற்காக, சில சட்டங்களை இயற்றி அவற்றை அந்த நாட்டின் சர்க்கார் அமுல் நடத்துவதைப்போல, உலகிலும் சமாதானமும் சுபிக்ஷமும் நிலவவேண்டுமானால் உலகின் பல நாடுகளும் ஒரே அடிப்படையைக்கொண்ட சட்டத்துக்குட்பட்டுச் சர்வ தேசீய உறவை நடத்த முன்வரவேண்டும்; அந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு ஒரு உலக ஸ்தாபனமும் இருக்க வேண்டும். இதுதான் உலகில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்குரிய ஒரே வழி. இந்த அடிப்படையில்தான் ஒவ்வொரு நாட்டின் தற்காப்பும் அமையவேண்டும்.

இன்று உலகிலிருக்கும் இம்மாதிரி ஸ்தாபனம் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம். சர்வதேசப் பிரச்னையில் தலையிட்டு, எந்த அளவில் தன்னுடைய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று தனி நாடுகளை இந்த ஸ்தாபனத்தால் கட்டாயப்படுத்த முடிகிறது என்பதைப் பொறுத்திருக்கின்றன தனிநாடுகளின் தற்காப்பு ஏற்பாடுகள். ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் இரண்டு நாடுகளுக்கிடையே தகராறு ஏற்படுமானால், அதில் இந்த உலக ஸ்தாபனம் தலையிட்டுச் சமாதான முறையில் அந்தத் தகராறைக் கட்டாயமாகத் தீர்த்து வைக்குமா? ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்காத நாடொன்று வேறொரு நாட்டின் மீது ஆக்கிரமிக்குமானால், ஆக்ரமிக்கப்பட்ட நாட்டுக்கு உதவியாக இந்த ஸ்தாபனம் போகுமா? என்ற இரண்டு கேள்விகளுக்கும் கிடைக்கும் பதிலைப் பொறுத்திருக்கிறது, ஒவ்வொரு நாடும் தன்னுடைய தற்காப்பு முயற்சியில் எவ்வளவு தூரம் ஈடுபட வேண்டுமென்ற பிரச்னை. ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் இன்றைய அமைப்பிலிருந்தும், போக்கி

லிருந்தும் மேற்கண்ட கேள்விகளுக்குத் திருப்திகரமான பதில் கிடைக்குமென்று தோன்றவில்லை. அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் தாம் இன்று இந்த ஸ்தாபனத்தில் முடிவான அதிகாரம் பெற்றவைகளாக இருக்கின்றன. அவர்களுக்கிடையே இருக்கும் போட்டியிலும், பொருமையிலும் உலக நன்மை என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதே இல்லை. அப்படி நினைத்துப் பார்த்தாலும், தத்தம் செல்வாக்கின் கீழ் வருவதன் மூலம் தான் உலகம் நன்மையடைய முடியுமென்று அம்மூன்று பேரரசுகளில் ஒவ்வொன்றும் தீர்மானித்துக் கொண்டிருக்கிறது. இதற்கும் மேலாக, இந்த ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் பிரதான அங்கமாகிய பாதுகாப்புக் கௌன்சிலில் அமெரிக்கா, ருஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனு ஆகிய ஐந்து நாடுகளுக்கும் ரத்து உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இந்த ஐந்து நாடுகளில் ஏதாவதொன்று விரும்பினுல், கௌன்சிலின் எந்த மெஜாரிட்டி முடிவையும் பலனற்றதாகச் செய்து விடலாம். இந்த முறைப்படி, இவ்வைந்து நாடுகளிலொன்றே பிற நாடுகளின் மீது ஆக்கிரமிக்குமானுல், அவ்விஷயத்தில் இந்த உலக ஸ்தாபனம் செயலற்றுப்போகும். முக்கியமாக, இன்று உலகில் மிகப் பயங்கரமான ஆயுதம் என்று கருதப்படும் அணுக்குண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஆதிக்கத்திலேயே இருக்கிறது.* அது ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தினுடைய அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்படவேண்டு மென்ற கோரிக்கை இன்னும் நிறைவேறவில்லை. இந்நிலையில், எந்தத் தனி நாடும் தன்னுடைய

* ருஷ்யாவும் அணுக்குண்டு செய்யும் முறையைத் தெரிந்துகொண்டு அத்தகைய குண்டுகளைச் செய்து வைத்திருக்கிறது என்பதை இப்போது எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிறுர்கள்.

பாதுகாப்புப் பொறுப்பை நம்பிக்கையுடன் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்திடம் ஒப்புவிக்க முடியாத தன்மையிலிருக்கிறது. எனவே, ஒவ்வொரு நாடும், தன் சூழ்நிலைக்கும், அயலாருக்கும் பொருத்தமாகத் தனது தற்காப்பை அமைத்துக்கொள்ள வேண்டும். இப்பொறுப்பு ஆசிய நாடுகளுக்கு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தது. ஆசியாவை விட்டு மேலை நாட்டு வல்லரசுகள் இன்னும் பூரணமாக வெளியேறி விடவில்லை. வியட்நாமின் இன்றைய நிலைமையும், இந்தோனேஷியாவில் டச்சுக்காரரின் நடத்தையும், இதை நன்ருக நிரூபிக்கின்றன. இந்தோனேஷியாவில் பிளவை உண்டுபண்ணி, குடியரசு ஆட்சியையும், அதன் சுதந்திரத்தையும் ஒழித்துவிட டச்சுக்காரர்கள் முயலுகிருர்கள். தங்களின் இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் போரில் இறங்கவும் தயங்கவில்லை.† இருதரப்பாரும் போரை நிறுத்தவேண்டுமென்று ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் பாதுகாப்புக் கௌன்சில் முடிவு செய்த போதிலும், தன்னுடைய முடிவை ஏற்று அதன்படி நடக்குமாறு இருதரப்பாரையும் செய்வதற்குப் போதிய அதிகாரம் இன்னும் அந்த ஸ்தாபனத்துக்கு உண்டாகவில்லை. இத்தகராறில் தலையிடவே உரிமையில்லை என்று டச்சு அரசாங்கம் கூறுகிறது. அமெரிக்க ஐக்கியநாடுகளும் பிரிட்டனும், இந்தப் பிரச்னையிலிருந்து இந்த உலக ஸ்தாபனத்தை ஒதுக்கித் தள்ளிவிட முயலுகின்றன. போர் நிறுத்தத்தை மேற்பார்வை யிடுவதற்காகப் பாதுகாப்புக் கௌன்சிலின் சார்பாக ஒரு கமிஷனை அனுப்பவேண்டுமென்ற தீர்மானத்தைப் பிரான்ஸ் தனது ரத்து உரிமையால் தோற்கடித்தது. இந்த நிலைமையில்,

† இப்போது இந்தோனேஷியக் குடியரசு பூரண சுதந்திரத்துடன் விளங்கி, ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் அறுபதாவது அங்கத்தினராக இடம் பெற்றிருக்கிறது.

எந்த நாடாவது தன்னுடைய தற்காப்புக்காக ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தையே நம்பியிருக்க விரும்புமா?

ஆசிய நாடுகள் சம்பந்தப்பட்டவரையில், தற்காப்பு என்பது இக்காலத்தில் இரண்டு காரியங்களேயே குறிக்கும். ஒன்று, அந்நிய ஆட்சியை ஆசியாவைவிட்டு வெளியேறச் செய்வது; இரண்டு, ஏற்கனவே அப்படி வெளியேறின நாடுகளில் மறுபடியும் அந்நிய ஆட்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்வது. முன்னதாகவே கூறியதைப்போல ஆசியாவில் மனிதச் செல்வத்துக்குக் குறைவில்லை; அதேமாதிரி இயற்கை வளத்துக்கும் குறைவில்லை. ஆனால் நவீன யுத்த நிலையில், வெற்றிகரமான தற்காப்புக்கு வெறும் மக்கள் மாத்திரம் போதாது. இக்கால யுத்தம் குறிப்பாக இயந்திரங்களை யடிப்படையாகக்கொண்டது. விஞ்ஞான வளர்ச்சியே அதன் உயிர்நாடி; உலோகப் பொருள்களே அதன் உணவு. ஆனால், அந்நிய ஆதிக்கத்திலிருந்த ஆசியாவில் விஞ்ஞானமும் வளரவில்லை; உலோகப் பொருளும் பெருக்கப்படவில்லை; அரசாங்கத்துக்கும் அதன் நாட்டு மக்களுக்கும் தேவையான அளவில் மட்டிலுமே ஆசியாவின் இயற்கைச் செல்வங்கள் பயன் படுத்திக் கொள்ளப்பட்டன. ஆசியாவின் தொழிற்சாலைகள் ஆசிய மக்களின் நன்மையைக் கருதி ஒரு திட்டமான அடிப்படையின்மேல் அமைக்கப்படவில்லை; சுரங்கங்கள் சரியாக வேலை செய்யப்படவில்லை; கைத்தொழில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. ருஷ்யா, துருக்கி, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகள் தான் தொழில்வளம் பெற்றவையாயிருந்தன. இதர நாடுகள் யாவும் வெறும் விவசாயத்தையே நம்பி வாழும் நிலையிலிருந்தன. அந்த விவசாயமும் விஞ்ஞான வசதிகளை உபயோகித்துச் சரியாக விருத்தி செய்யப்படவில்லை. இந்த நிலைமை இன்றையத் தேவைக்கேற்ப அடியோடு மாற்றியமைக்கப்படவேண்டும். வருங்காலத்

தற்காப்புத் தேவையோ புதிய அம்சங்களுடன் தோன்று கிறது. அணுக்குண்டு நவீனகால யுத்தத்தின் போக்கையே மாற்றி விட்டது. ஸ்ரீ எச். என். பிரெய்ல்ஸ்போர்டு சொல்வதைப் போல, பத்து அல்லது பன்னிரண்டு அணுக்குண்டுகள் பிரிட்டிஷ் தீவுகளையே அழித்துவிடும். விமானங்களில் இந்தக் குண்டுகளைத் தூக்கிச் சென்று இக் காரியத்தைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய மனிதர் களின் எண்ணிக்கை நூற்றுக்குமேல் ஆகப்போவதில்லை. ஆகையால், வெறும் மனித எண்ணிக்கை மாத்திரம் எதிர் காலப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் அதிக முக்கியத்துவம் பெறப்போவதில்லை. இயந்திரங்களும், தொழில் உற்பத்தி யும் தான் பிரதானமானவை. இவற்றைப் பெருக்கும் திட்டம் ஆசிய நாடுகளின் அமைப்புக்குப் பொருத்த மானதாக இருக்கவேண்டும். ஆசியாக் கண்டம் மிக்க விஸ்தாரமானது என்பதை முன்னதாகவே கண்டோம். ஆகையால் தேசத்தில் தொழில் நிலையங்களும், கேந்திர ஸ்தானங்களும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் குவிந்து அமையாமல், தேசமுழுவதிலும் பரந்து அமைக்கப்பட வேண்டும். இத்தகைய அமைப்பினால் விளையும் நன்மைகள் அநேகம். அரசியல் கருத்தில் இப்பெருக்கத்தால் விளையும் தேசீய சக்தி ஒரே இடத்தில் செறிந்து கிடக்காமல், பரந்து கிடப்பதன் மூலம் பரிபூரண ஜனநாயகத்துக்கு அடிகோலு கிறது என்பதோடல்லாமல், யுத்தகாலத்தில் போக்குவரவு சாதனங்கள் பாதிக்கப்படுமானால் தேசமுழுவதுமே திண் டாடாமல் தடுக்க முடியும். மேலும், ஒரு குறிப்பிட்ட இடத்தின் மேல் குண்டு வீசுவதன் மூலம் எதிரியால் நாட்டின் எதிர்ப்புச் சக்தி முழுவதையுமே குலைத்து விட முடியாது. இதன் உண்மையை நிலைநாட்டு வதற்குச் சீன-ஜப்பான் யுத்தத்தில் மிக்க பலம் வாய்ந்த ஜப்பானை எட்டு ஆண்டுகளுக்கு மேலாகச் சீனா சமா

ளித்ததைத் தவிர வேறு உதாரணமே வேண்டியதில்லை. சீனுவின் நிலப்பரப்பும், அதனுடைய தொழில் நிலையங்கள் நாடு முழுவதிலும் சிதறிக் கிடந்ததுமே சீனுவின் இறுதி வெற்றிக்குக் காரணம். மேலும் வயது வந்த மக்கள் அனைவரும் ராணுவப்பயிற்சி பெறவேண்டும். ஆனால், அணுக்குண்டு இங்கும் மாறுதலுக்கு அவசியத்தை உண்டாக்கி யிருக்கிறது. அதன் பலனுக, நேரடியான யுத்தத்தின் முக்கியத்துவம் குறைந்துவிட்டது. கொரில்லா யுத்தம் பிரதான ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. எங்கெல்லாம் மக்கள் உறுதியுடனும் வீரத்துடனுமிருக்கிறுர்களோ, அங்கெல்லாம் இப் போர்முறையைக் கையாளமுடியும். அணுக்குண்டினுல் இதைப் பாதிக்க முடியாது. ஆசிய நாடுகள் ஒவ்வொன்றும் தத்தம் தற்காப்புக்காகச் செய்யவேண்டிய காரியங்களில் சில இவை.

ஆசியாவுக்குத் தென்கிழக்கிலே பசிபிக் சமுத்திரத்தில் சிறிதும் பெரிதுமாகச் சங்கிலித் தொடர்போலப் பலதீவுகள் இருக்கின்றன. இந்தத் தீவுகள் ஆசியாவின் தற்காப்புக்கு ஜீவாதாரமான கேந்திரஸ்தலங்களாகும். மேலும், இவைகள் ஆசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே ஒரு ஏணிப் பாலம் ஏற்பட்டிருப்பதைப்போல அமைந்திருக்கின்றன. ஆனால், இப்பிரதேசத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், டச்சு ஆகிய அந்நிய நாடுகளின் ஆதிக்கமும், செல்வாக்கும் பலமாக இருக்கின்றன. குறிப்பாக, தன்னுடைய தற்காப்புக்காக இந்தப் பசிபிக் தீவுகளில் தன் செல்வாக்கு நிலைபெற வேண்டுமென்று அமெரிக்க ஐக்கிய நாடுகள் விரும்புகின்றன. ஆனுல், உண்மையில் ஆசியாவின் தற்காப்புக்குத்தான் இத்தீவுகள் முக்கியமானவை. ஏனெனில், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இத்தீவுகளுக்கு அருகிலிருக்கும் ஆசிய நாடுகளினுல் தங்களின் பாதுகாப்புக்கு அபாயமுண்டாகுமோ என்று பயப்படவேண்டிய

தில்லை. ஆனால், ஆசிய நாடுகளோ அந்நிய நாடுகளின் அபாயத்திலிருந்து பூரணமாகத் தப்பிவிட்டன என்று சொல்லக்கூடிய நிலைமையிலில்லை. ஆகையால், அமெரிக்க ஐக்கிய நாடுகள், ஐரோப்பிய வல்லரசுகளின் ஆட்சியிலிருந்து அப்போதுதான் விடுதலை பெற்ற தென்னமெரிக்க தேசங்களில் எந்த ஐரோப்பிய அரசாங்கமும் புதிதாகத் தலையிடக் கூடாது என்ற **மன்ரோக் கொள்கையை** 1823-ல் பிறப்பித்துக் கொண்டதைப் போல, நாமும் ஆசியாவுக்கு இன்று ஒரு மன்ரோக் கொள்கையை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். சமீபத்தில் இந்தோனேஷியப் பிரச்னை சம்பந்தமாகப் பண்டித நேரு கூறியதைப்போல, எந்த ஆசிய நாட்டின் மண்ணின் மேலும் அந்நிய ராணுவத்துக்கு வேலையில்லை. ஜனாதிபதி மன்ரோவினால் வெளியிடப்பட்ட கொள்கை சுமார் நூறாண்டுகளாக அமெரிக்காவை அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றியிருக்கிறது. இப்போது ஆசிய தேசங்கள் சம்பந்தமாக அத்தகைய கொள்கையொன்றை வெளிப்படுத்தும் காலம் வந்துவிட்டது. இதன்படி ஆசியாக் கண்டத்தைச் சுற்றியிருக்கும் தீவுகளிலிருந்து மேல் நாட்டாரின் ராணுவத்தை வெளியேற்றுவது ஆசியாவின் தற்காப்பு ஏற்பாடுகளின் முதற்படியாகும். சீனாவைப் போன்ற தேசங்களின் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் தலையிடுவது ருஷ்யா, அமெரிக்கா ஆகிய பிற நாடுகளின் வேலையல்லவென்பதையும் ஆசியமக்கள் அனைவரும் உலகுக்கு அறிவித்துவிடவேண்டும். மேலை நாடுகளின் மேலுள்ள துவேஷமோ, விரோதமோ இதற்குக் காரணமல்ல. ஆசியநாடுகள் தங்கள் சுய வாழ்வைக் காத்துக் கொள்ளும் முயற்சியே இது. ராணுவ வெறியில் மதியை இழந்து தோல்விக்குப்பின் புதிய படிப்பினையைப் பெற்றிருக்கும் ஜப்பானும் இதற்கு விலக்கல்ல. ஆசிய நாடு

கள் செய்துகொள்ளவேண்டிய இந்தத் தற்காப்பு ஏற்பாடு கள் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்தின் அதிகாரத்தையோ, அந்தஸ்தையோ குறைக்கக்கூடியவையல்ல. அந்த ஸ்தாப னத்தின் சாஸனமே இத்தகைய பிரதேசப் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு இடமளிக்கிறது. வட அமெரிக்காவும் தென்னமெரிக்க நாடுகளும் உலகின் குடகோளார்த்தத் தற்காப்புக்காக சில ஏற்பாடுகள் செய்துகொண்டிருக் கின்றன. இத்தகைய பிரதேசப் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒன்றுக்கொன்று போட்டியாக இல்லாமல் பொது வேலை யைப் பகிர்ந்து கொள்ளும் முறையில் அமையவேண்டும். அப்படி அமையுமானால், அவை அந்த உலகஸ்தாபனத் தைப் பலப்படுத்துவதற்கு ஓரளவு உதவி செய்தவையாகும். மேலும், பூரணமான உலகப்பாதுகாப்புக்கு அவை முதற் படியாக நிற்கும்.

ஆஸ்திரேலியாவும், நியூஜிலாந்தும் ஆசியாக்கண்டத் துக்கு மிக அருகிலுள்ள பிரதேசங்கள். ஆசியாவின் எந் தத் தற்காப்பு ஏற்பாடும் இவ்விருபெரும் தீவுகளுடன் ஓரள வாயினும் சம்பந்தப்பட்டுத்தானிருக்கவேண்டும். "தென் கிழக்கு ஆசியாவின் பாதுகாப்பும், இந்தியா, பர்மா ஆகிய நாடுகளின் பாதுகாப்பும் எப்படி ஒன்றையொன்று சார்ந் திருக்கிறதென்பதைச் சமீபத்திய ஜப்பானியப் போர் வெளிப் படுத்திற்று. பசிபிக்கின் வருங்காலத்திய எந்தப் பிரதேசப் பாதுகாப்புத் திட்டத்திலும் இந்த யுத்தகால அநுபவம் இடம் பெற்றிருக்கவேண்டும்" என ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டுமந்திரி ஹெர்பர்ட் ஈவாட் கூறுகிறார்*. இந்தியா, பர்மாவைப்பற்றி ஈவாட் கூறுவது இதர ஆசிய நாடுகளுக் கும் பொருந்தும். ஆஸ்திரேலியாவும், நியூஜிலாந்தும்

* இன்று ஆஸ்திரேலியாவின் வெளிநாட்டு மந்திரியாக இருப்பவர் ஸ்ரீ ஸ்பெண்டர்.

1944-ல் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கின்றன. அதன்படி அவை இரண்டும் தங்களுடைய பொதுப் பாது காப்புக்காகச் சில ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கின் றன. ஆசியாவும், இவ்விரண்டு நாடுகளுடனும் இம்மாதிரி யான ஏற்பாடுகளைச் செய்துகொள்வது அதன் தற்காப்புக்கு அத்தியாவசியமாகும். இத்தகைய ஏற்பாடுகள் யாவும் தனித்து நிற்கவேண்டுமென்ற எந்தக் குறுகிய நோக்கத்தி லிருந்தும் பிறப்பவையல்ல. நடக்க ஆரம்பிப்பதற்குமுன் கால்களை நன்ருகத் தரையில் ஊன்றி நிற்கவேண்டும் என்ற மிகச் சாதாரண அநுபவத்திலிருந்து பிறப்பவைதாம். அந்நியப் பிடிப்பிலிருந்து இப்பொழுதுதான் விடுபடும் ஆசியா, காலை நன்ருக ஊன்றித் தரையில் நிற்பதற்கு உதவி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டவையே இவை. உலக சமாதானத்துக்கு இவை தவிர்க்க முடியாத பூர்வாங்க மாகும்.

மேலே கூறப்பட்டவை புத்துயிர் பெற்ற ஆசியாவின் முன்னிற்கும் பிரச்னைகளுக்கு முடிவுகாணும் முயற்சியில் சிந்திக்கப்படவேண்டிய சில யோசனைகள். ஆனால், இந்தத் தற்காப்புப் பிரச்னையிலும் உலகுக்கு ஒரு புதிய வழியைக் காட்டுவதற்கு இன்று ஆசியாவுக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. உலகத்தில் சமாதானம் நிலவுவதற்கும், உலகின் எந்த நாட்டிலும் தற்காப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டிய அவசியமே இல்லாமல் போவதற்கும் ஒரு சிறந்த வழி, பலாத்காரம் என்ற பாதையையே ஒவ்வொரு நாடும் விட்டொழிப்பதுதான். இந்த வழியை ஆசியாக் கண்டம் பின் பற்றினல் அதுவே சிறந்த தற்காப்பு ஏற்பாடாகும். நம் காலச் சரித்திரத்தின் பாடத்தை யுணர்ந்தவர்களும், நீண்ட நாளைய நோக்குடன் உலகைக் காண்பவர்களும் இதன் சக்தியை வெகு சுலபமாக அறிந்துகொள்வார்கள். மக்களின் மனேதிடமும், ஆத்மீக பலமுமே ஒரு நாட்டின்

தலை சிறந்த ஆயுதம்; ஒப்பற்ற தற்காப்பு; மனித இயற்கைக்கு ஒத்த முறை என்பதை மகாத்மா காந்தி நிரூபித்துவிட்டார்; இந்தியா சுதந்திரம் பெற்ற விதமே இதற்கு அத்தாட்சி. மனிதர்கள் பூரணமாகத் தங்கள் மனிதத் தன்மையை இன்னும் இழந்துவிடவில்லை. அன்பின் சக்தியையும், ஆத்மீக பலத்தையும் இன்னும் உணரக்கூடிய நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள். போருக்குப் போகமாட்டோம் என்ற மக்களின் உறுதியைத் தவிர வேறு சிறந்த பாதுகாப்பு உலகின் அமைதிக்கு இல்லை; அந்த உறுதியே நாட்டின் தலைசிறந்த தற்காப்பாகும். உலகின் எல்லா மதத்தலைவர்களும் தோன்றிய ஆசியாவில் இப்புதுப் பலம் பிறக்கவில்லையானால், வேறெங்கும் பிறக்கும் என்று சொல்வதற்கில்லை.

# 10. ஒரு உலகம்—சர்வதேச சங்கம்

உலகத்தை ஒன்ருகக் காணும் உயர் நோக்கும், பெரும் போக்கும் இன்று நேற்றுத் தோன்றியவையல்ல. அவைகள் நீண்ட காலமாக மக்களின் கருத்துலகில் இடம் பெற்றிருக் கின்றன. ஆனுல், அவைகளின் அடிப்படையும், அவற் றைச் செயலிலே ஆண்டுவந்த துறையும் காலத்துக்கேற்ப மாறுபட்டுக்கொண்டே வந்திருக்கின்றன. இன்று, உலகம் என்றவுடன் நாம் உணர்ந்துகொள்ளுகிற தேசங்கள் பல வற்றை அக்கால மக்கள் அறியவே மாட்டார்கள். ஆகையால் அவர்களுடைய உலகம் அவர்கள் அறிந்து கொண்டிருந்த நாடுகளை மாத்திரம் உள்ளடக்கிக் கொண்ட சிறிய உலகமாகவே இருந்தது. மேலும் தாங்கள் அறிவிஞல் உணர்ந்து கொண்டிருந்த எல்லா நாடுகளையும் நேரிலே சென்று கண்ணுலே காண்பதற்கு வேண்டிய வசதிகளற்றவர்களாகவும் அவர்கள் இருந்தார் கள். எனவே அவர்களது உலகம் அவர்களுடைய கருத்தளவிலே மாத்திரம்தான் இருந்தது. இன்று நாம் உணர்ந்து கொள்கிற அரசியல் அம்சத்திலோ, பொருளா தாரத் துறையிலோ அவர்கள் உலகத்தை நோக்கியதில்லை. கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்கள் மனிதவர்க்கம் முழுவதுக்கும் பொருத்தமானது என்ற கருத்திலே உலக மதங்களாக எண்ணப்பட்டன. அவற்றைப் பரப்புவதற்காக மததூதர்கள் பல நாடுகளுக்கும் புறப்பட்டுச் சென்ருர் கள். அதுபோலவே, ஒரு நாட்டு மக்கள் வாணிபம் குறித்துப் பிற நாடுகளுக்குச் சென்று வந்தார்கள். ஆனுல், இவைகளிஞலெல்லாம் உலகத்தின் ஒவ்வொரு பாகமும் பிற

---

9-6-1947-ல் அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்திலிருந்து இப்பிரசங்கம் ஒலிபரப்பப்பட்டது.

பகுதிகளுடன் மிக்க நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கிறது, மனித உடலின் ஒவ்வொரு அங்கமும் பிற அவயவங்களுடன் பிணைக்கப்பட்டிருப்பதைப் போல, என்ற உணர்ச்சி உண்டாகவில்லை. கடந்த நூற்றுண்டுகளிலும் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன. பல நாடுகள் ஒன்று சேர்ந்து ராணுவ ஒப்பந்தங்கள் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் இவையெல்லாம் உலக அளவில் அல்ல. இருபதாம் நூற்றுண்டில்தான் உலக உணர்ச்சி ஒருவாறு திட்டமான அடிப்படையின்மேல் உருப்பெற்றது. குறிப்பாக 1914-18-ம் ஆண்டின் உலக யுத்தம் அத்தகைய உணர்ச்சியைப் பலமாகத் தூண்டிற்று. அன்று அமெரிக்காவின் ஜனுதிபதியாக இருந்த—உன்னத நோக்கங்களும் உயர்ந்த லக்ஷியங்களும் கொண்ட—உட்ரோ வில்ஸன் உலக மக்களின் உள்ளத்திலே இந்த உணர்ச்சியை ஸ்திரப்படுத்த முயன்றுர். சமீபத்தில் காலஞ்சென்ற வெண்டல் வில்கி, இந்த இரண்டாவது யுத்த காலத்தில் அதே உணர்ச்சியை மறுபடியும் உலக மக்களிடையே பரப்பினுர். எப்படியாயினும் அரசியல் கருத்திலே ஒரு உலகம் உருப்பெற்றது இருபதாம் நூற்றுண்டிலேதான்.

அரசியலை அடிப்படையாகக் கொண்ட ஒரு உலக உணர்ச்சியின் வெளி உருவாகத் தோன்றியதுதான் சர்வ தேச சங்கம். உட்ரோ வில்ஸனைச் சர்வதேச சங்கத்தின் பிதாவென்றே சொல்லிவிடலாம். அந்தச் சங்கத்தைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன், அது தோன்றுவதற்கு முன்னும்—தோன்றும் பொழுதும்—பரவியிருந்த சூழ்நிலையைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். முதலாவது உலக யுத்தத்தின் முடிவிலே பிறந்தது அந்தச் சங்கம். அந்த யுத்தத்திலே ஈடுபட்டிருந்த எந்த நாட்டுக்கும் உயர்ந்த லக்ஷியங்களோ உலக சமாதானமோ யுத்த நோக்கமாக இல்லை. ஒவ்வொரு நாடும் அதனதனுடைய

முதலாளித்துவ ஆட்சி முறையைக் காப்பாற்றிக் கொள்வதற் காகவே தான் யுத்தத்தில் ஈடுபட்டது. பாமர மக்களைப் போருக்கு இழுக்கும் ஒரே நோக்கத்துடன்தான், பிரசார முறையில் இதர லக்ஷியங்கள் பறையடிக்கப்பட்டன. ஆகையால், 1917-ல் ருஷியாவில் புரட்சியுண்டானவுடன், ஜெர்மனியைத் தோற்கடிப்பதைவிட ருஷ்யப் புரட்சியை முளையிலே கிள்ளி விடுவதுதான் மிகவும் அவசரமான தும் முக்கியமானதுமாகும் என்று நேசநாடுகள் கருதின. ஆனால் ருஷியாவில் தொழிலாளர் ஆட்சி உண்டாகி யிருக்கிறது என்ற எண்ணம், நேச நாடுகளின் தொழிலாளர்களிடையே ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கிற்று. ஆகையால், தங்கள் அரசாங்கம் ருஷ்யப் புரட்சியில் குறுக்கிடுவதை அவர்கள் விரும்பவில்லை. யுத்தத்தில் ஈடுபடும் ஒவ்வொரு நாடும் போரை நடத்து வதற்குத் தத்தம் நாட்டின் தொழிலாளிகளையே சார்ந்திருக்க வேண்டியிருப்பதால், தங்கள் தொழிலாளிகளின் விருப்பத் துக்கு மாறாக நேச நாட்டு அரசாங்கங்கள் போகமுடிய வில்லை. அதனால், ருஷியப் புரட்சி வெற்றியடைந்து புதிய அரசாங்கம் ஸ்தாபிதமாயிற்று. இதனால் நம்பிக்கையும், உற்சாகமும் பெற்ற நேச நாட்டுத் தொழிலாளிகள் தங்கள் அரசாங்கங்களை அவர்களுடைய யுத்த லக்ஷியங்களைத் தெளிவு படுத்துமாறு கேட்டார்கள். ஆகையால் அவர் களைத் திருப்தி செய்வதற்காக, உலகில் இனிப் போர் உண்டாகாமல் செய்வதும், உலகில் நிரந்தரமான சமா தானத்தை நிலைநாட்டுவதும், இன்னும் பல சீர்திருத்தங் களும் தங்களின் யுத்த லக்ஷியங்கள் என்று அவைகள் அறிவித்தன. இந்தச் சமயத்தில், மிகச் சிறந்த லக்ஷியங் களைக் கொண்டிருந்த வில்ஸன் உலக மக்களையும், அவர் களின் நன்மையையும் பற்றிப் பேசிக்கொண்டிருந்ததை நேச நாடுகள் தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக்

கொண்டன. வில்ஸனின் லக்ஷியமே தங்களுக்கும் என்ற வெளிக்கூற்றுடன், யுத்தம் முடிந்த பிறகு வில்ஸனின் யோசனைப்படி சர்வதேச சங்கத்தை ஸ்தாபித்தார்கள். ஆனால் எந்த நோக்கத்துடன் சர்வதேச சங்கத்தை வில்ஸன் ஸ்தாபிக்க விரும்பினாரோ, அதே நோக்கத்துடன் நேச நாடுகள் சேரவேயில்லை. சர்வதேச சங்கத்தின் படு தோல்விக்கு இது பிரதான காரணம்.

சர்வதேச சங்கத்தில் சேர்ந்த நாடுகள் தங்களிடையே தோன்றும் பிரச்னைகளைச் சமாதானமாகவே தீர்த்துக் கொள்வதென்று வாக்களித்தார்கள். சர்வதேச ஒத்துழைப்பும், கூட்டுறவும் நிலவுவதற்காகவும், நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருந்த ஒப்பந்தங்கள் முறைப்படி நிறைவேற்றப் படுவதற்காகவும், பிற்போக்கான மக்கள் அவர்களுடைய நன்மைக்காகவே மற்றவர்களின் ஆட்சியின் கீழ் இருப்பதற்காகவும் விதிகள் வகுக்கப்பட்டன. சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்காக எல்லா அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு பொது அசெம்ப்ளி, ஒரு கௌன்ஸில், ஒரு சர்வதேசக் கோர்ட், ஒரு செக்ரடேரியட் ஆகியவைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. சர்வ தேச சங்கத்தின் தன்மையைப் பற்றி வில்ஸன் கொண்டிருந்த கருத்து உன்னதமானது. சங்கத்தில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் உலக மக்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டுமேயன்றி, உலகின் பல நாட்டு அரசாங்கங்களின் பிரதிநிதிகளாக அவர்கள் இருக்கக் கூடாது என்று அவர் விரும்பினார். அந்தச் சங்கம் மனித வர்க்கத்தின் அபிப்பிராயத்தைத் திருப்தி செய்ய வேண்டுமேயன்றி உலகின் பல அரசாங்கங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கக்கூடாது. இன்று மனிதவர்க்கத்தை ஆள்பவர்கள் அவர்களில் ஒரு குறிப்பிட்ட வகுப்பாரல்ல; மனிதவர்க்கத்தின் தலைவிதி முழு உலகிலுமுள்ள

சாதாரண மக்களின் கைகளில் இருக்கிறது என்று அவர் கூறினர். ஐரோப்பிய அரசியலில் தலையிடுவது என்பதற்காகத் தாம் இவ்வாறு பேசவில்லையென்றும், எல்லாவிடங்களிலும் எல்லா நிலைமைகளிலும் வாழும் மனிதர்களின் சுதந்திரமும், உரிமையும் ஒரே லக்ஷியமே யாகும் என்பதை முழு உலகமும் உணர்ந்துவிட்டது என்று அமெரிக்கா கருதுவதால்தான் தாம் இதில் ஈடுபட்டதாகவும் அவர் வற்புறுத்திக் கூறினர். உலக மக்களின் பொது நன்மையைப் பாதுகாக்கும் ஒரு கண்ணுகை—என்றும் மூடாமல் கூர்ந்து கவனித்துக் கொண்டே இருக்கும் ஒரு கண்ணுகை—சர்வதேச சங்கம் இருக்கவேண்டுமென்பது தான் வில்ஸனின் ஆசை. ஒரே மனிதவர்க்கமும், அது வாழும் ஒரே உலகமுமே வில்ஸனின் லக்ஷிய நோக்குக்குள் அடங்கியிருந்தன. ஆனல் சர்வதேச சங்கத்துக்குள் வந்த நாடுகளின் நோக்கம் அதுவல்ல. சங்க நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்டவர்கள், அரசாங்கங்களின் பிரதிநிதிகளேயன்றி மக்களின் பிரதிநிதிகள் அல்ல. ஒரு உலகத்தை அவர்கள் காணுததோடல்லாமல், தங்கள் நாட்டைக்கூட அவர்கள் கண்டவர்களல்லர். அவர்கள் கண்டதெல்லாம் தங்கள் நாட்டின் ஆளும் வகுப்பாரைத் தான். சர்வதேச சங்கமூலமாக அவர்கள் காப்பாற்ற முயன்றது அந்தந்த நாடுகளின் ஆளும் வர்க்கத்தாரின் நன்மையையே. அவர்களின் நன்மை பாதிக்கப்படாதவரையில் உலகின் எந்தப் பாகத்திலும் நடக்கும் எந்தச் சம்பவமும் அவர்களுக்கு அக்கரையை உண்டுபண்ணவில்லை. தன்னுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு சுண்டைக்காய் நாடுகூட ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போராட முன்வரும். ஆனல், உலக சமாதானத்தில் அக்கரை இருக்கிறதா என்பதைக் கண்டு பிடிப்பதற்கு ஒரேவழி, ஒரு நாடு அநியாயமாக ஆக்ரமிக்கப்

படும்போது பிற நாடுகள் என்ன செய்கின்றன என்பதைப் பார்ப்பதுதான். இந்தச் சோதனையில் சர்வதேச சங்க நாடுகள் படுதோல்வியடைந்துவிட்டன; ஆக்ரமிக்கும் நாடு சுண்டைக்காய் நாடாக இருந்தபோதும் பெரிய வல்லரசுகள் வாளாவிருந்ததோடு, அந்த ஆக்ரமிக்கும் நாட்டுக்கு யுத்த தளவாடங்களை விற்றுப் பணமும் சம்பாதித்தன.

இது அல்லாமல் சர்வதேச சங்கத்தில் வேறு சில குறைபாடுகளுமிருந்தன. நியாயமற்ற வெர்ஸைல்ஸ் உடன்படிக்கையை ஒட்டியதாக சர்வதேச சங்கம் அமைந்தது அத்தகைய முக்கியமான குறைபாடுகளிலொன்று. ஒரே உலகத்தின் கண்ணுகைச் சர்வதேச சங்கம் இருக்க வேண்டுமானல் உலகின் எல்லா நாடுகளுக்கும் அதில் இடமிருக்க வேண்டும். யுத்தத்தில் தோற்ற நாடு, வெற்றி பெற்ற நாடு என்ற வித்தியாசம் இருக்கக் கூடாது. ஆனல், ஆரம்பத்தில் தோல்வியுற்ற ஜெர்மனிக்குச் சர்வதேச சங்கத்தில் இடமில்லாமல் செய்துவிட்டார்கள். மேலும் ருஷ்யா சர்வதேச சங்கத்தில் சேரவில்லை. அமெரிக்க ஜனதிபதியான வில்ஸனே சர்வதேச சங்கத்தின் ஆதிகர்த்தாவாக இருந்தபோதிலும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் இச் சங்கத்தில் சேரவில்லை. ஆகையால், உலக மக்களின் பிரதிநிதியாகச் சர்வதேச சங்கம் இல்லாததோடல்லாமல், உலக நாடுகளின் அரசாங்கங்களின் பிரதிநிதியாகக்கூட அது இல்லை. அதில் முக்கிய நாடுகளாக விளங்கியவை பிரிட்டனும் பிரான்சும். மேலும் சங்க நாடுகள் தங்களுக்கிடையே எழும் பிரச்னைகளைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று சங்க விதிகள் கூறினவேயன்றி, அவைகள் மத்தியஸ்தத்துக்கு இணங்க வேண்டுமென்றே, மத்தியஸ்தரின் தீர்ப்பைச் சம்பந்தப்பட்ட நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றே சங்க விதிகள் கூறவில்லை. அத்தகைய தீர்ப்பைச் சம்பந்தப்பட்ட நாடுகளின்மீது

சுமத்துவதற்குச் சங்கத்துக்கு அதிகாரமோ, சக்தியோ இல்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் யுத்தம் ஏற்படாமல் செய்வதற்கான கடுமையான நிபந்தனை களையும் சங்கம் விதிக்கவில்லை. உலக சமாதானமும், உலக நன்மையும் நிலைநாட்டப்பட வேண்டுமானால், ஒவ்வொரு நாடும் தன் சுயநலத்தையும், சொந்த நன்மையையும் பொது நன்மைக்காகத் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அதற்காகத் தங்கள் அதிகாரத்தில் ஒரு பகுதியைச் சங்கத்துக்குக் கொடுக்க முன்வரவேண்டும். இதற்கு நேர்மாருகச் சர்வதேச சங்க நாடுகள் பூரண இறைமாட்சி அதிகாரத்தின் அடிப் படையின் மேல்தான் அங்கத்தினர்களாயின. இவை யெல்லாம் சர்வதேச சங்கத்தின் பிரதானக் குறைகள்.

உலகத்தில் யுத்தம் ஏற்படாமல் தடுப்பதற்குச் சிறந்த வழி, யுத்தம் செய்வதற்கு வேண்டிய வசதிகளே இல்லாமல் செய்துவிடுவது. அதற்காகத்தான் வில்ஸன், "ஒவ்வொரு நாடும் தன்னுடைய உள்நாட்டுப் பாதுகாப்புக்கு அவசிய மான அளவுக்கு மாத்திரமே ஆயுதங்களை வைத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினர். ஆனல், "உள் நாட்டுப் பாதுகாப்பு" என்பதைத் "தேசீயப் பாதுகாப்பு" என்று சர்வதேச சங்க விதிகளில் மாற்றிக்கொண்டு, நாட்டின் தற்காப்பைப் பலப்படுத்துகிறேமென்ற சால் ஜாப்புடன் எல்லா நாடுகளும் தங்கள் ஆயுதப் பலத்தை அதிகப்படுத்திக்கொண்டே போயின. இந்த நிலைமையில், 1932-ல் கூடிய ஆயுதப் பரிகரண மகாநாட்டினல் எந்த விதமான பலனும் உண்டாகாமல் போனதில் ஆச்சரிய மில்லை. 1931-ல் ஆரம்பித்த ஜப்பான்—மஞ்சூரியத் தகராறு சர்வதேச சங்கத்தின் உண்மைத் தன்மையையும் அதில் சம்பந்தப்பட்ட நாடுகளின் உண்மையான நோக்கத்தையும் வெளிப்படுத்திற்று. ஜப்பான் மஞ்சூரி

யாவை ஆக்ரமிப்பதைச் சர்வதேச சங்கத்திஞல் தடுக்க முடியவில்லை. வெறும் ஏட்டுக் கண்டனத்துடன் அது திருப்தியடைந்துவிட்டது. பிரிட்டனே அந்தத் தகராறில் நடுநிலைமை வகிப்பதாக வெளிப்படையாகக் கூறிவிட்டது. அதற்கு மேலாகப் பிரிட்டிஷ் முதலாளிகள், சில வர்த்தகச் சலுகைகளைப் பெறுவதன்மூலம் ஜப்பானுடன் சேர்ந்து மஞ்சூரியாவைச் சுரண்டுவதற்குத் திட்டம் போட்டார்கள். பிரான்சும் பிரிட்டனைப் பின்பற்றியது. இத்தாலி-அபிசீனி யத் தகராறிலும், இத்தாலிக்கு விரோதமாகப் பிரிட்டனும் பிரான்சும் நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. இத்தாலிக்கு விரோதமாக நடவடிக்கை எடுத்து யுத்தத்தில் இத்தாலியின் பாஸிஸ்ட் அரசாங்கம் தோல்வியடையுமானல், அங்கே தொழிலாளிகளின் அதிகாரம் ஏற்படும். அப்படி ஏற் படுவது பிரிட்டனின் ஆளும் வர்க்கத்தாரைப் பாதிப் பதுடன் ருஷியாவையும் பலப்படுத்தும். மேலும், அபிசீனியா இந்தப் போரில் வெற்றிபெறுமானல் ஆபிரிக்காவிலுள்ள கறுப்பர்களுக்குப் புதிய தைரியம் உண்டாகிவிடும். பிரான்ஸ் தன் ஆதிக்கத்திலுள்ள நாடுகளை இழக்க நேரிடும். ஆகையால், பிரிட்டனும் பிரான்சும் இத்தாலிக்கு விரோதமாக நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டன. சீன-ஜப்பான் யுத்தத்திலும், சீனவுக்கு உதவி செய்வதால் ஜப்பானிடமிருந்து கிடைத்த வர்த்தகச் சலுகைகள் போய்விடுமென்பதற்காகவும், சீன வெற்றி பெறுவதனல் தென்கிழக்கு ஆசியாவில் விழிப்பேற்பட்டுச் சுதந்திரக் கிளர்ச்சி பலப்படுமென்பதற்காகவும், ஏகாதி பத்திய நாடுகள் சீனவுக்கு உதவிசெய்ய மறுத்துவிட்டன. ருஷ்யாவுடன் சேர்ந்து ஜெகோஸ்லொவேகியாவுக்காக ஹிட்லருடன் போரிட்டால், ருஷ்யா பலமடைந்துவிடும்; ஜெர்மனி தோல்வியடைந்துவிடும். அதனல், ருஷ்யா வுடன் பின்னல் ஹிட்லர் போர் ஆரம்பிப்பதற்குச்

சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும் என்பதற்காக, மேல் நாடுகள் ஜெகோஸ்லொவேகியாவை ஹிட்லருக்குப் பலி யிட்டன. இப்படியாக, சர்வதேச சங்கத்தில் பிரதான அங்கம் வகித்த நாடுகளே அந்தச் சங்கத்தைக் கொன்று விட்டன. ஒரே உலகத்துக்குப் பதிலாக அந்த நாடுகள் கண்டது சுயநலம்தான். தங்கள் குறுகிய நோக்கத் தாலும், சுயநலத்தாலும், அவைகளே இரண்டாவது யுத்தத்தை வரவழைத்தன. தொழிலாளர் துறையிலும், பொருளாதாரத் துறையிலும் சர்வதேச சங்கம் ஏதோ சிலவற்றை உலக அளவில் செய்துவிட்டபோதிலும், முக்கியமான அரசியல் துறையில் அது அடியோடு தோற்றுவிட்டது. ஆகையால்தான், "சர்வதேச சங்கம் எதையும் உண்டுபண்ணவுமில்லை, கட்டுப்படுத்தவுமில்லை. அது அவசியமற்றதாக இருந்தது. ஆகாயத்தில் பய னற்றுப் பறந்துகொண்டிருந்த சரித்திரமென்ற ரதத்தின் உபயோகமற்ற ஐந்தாவது சக்கரமாக அது இருந்தது" என்று எச். என். ப்ரெய்ல்ஸ்போர்ட் (H. N. Brailsford) கூறுகிறார்.

சர்வதேச சங்கத்தின் தோல்வியிலிருந்து உலகம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் அநேகம். அந்தப் பாடங்களின் அடிப்படையின்மேல் நிறுவப்பட்டாலொழிய, புதிய ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனமும் சர்வதேச சங்கத்தைப்போலத் தோல்வியடையப்போவது நிச்சயம். இரண்டு விஷயங்களில் ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனம் சர்வதேச சங்கத்தைவிடச் சிறந்தது என்று சொல்லலாம். ஒன்று, அமெரிக்காவும், ருஷ்யாவும் அதில் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டு, ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்துக்கென்று தனி ராணுவம் இருக்கப்போ கிறது. இவை இரண்டைத் தவிரச் சர்வதேச சங்கத்தின் குறைகள் யாவும், ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனத்திலுமிருக்

கின்றன. இதுவரையிலும் வல்லரசுகள் இந்தப் புதிய ஸ்தாபனத்தில் நடந்துகொண்டிருக்கிற முறை நம்பிக்கையூட்டுவதாக இல்லை. ஒரே உலக லக்ஷியத்தை அடைவதற்குக் காலஞ்சென்ற வெண்டல் வில்கி மூன்று நிபந்தனைகளை விதித்தார். ஒன்று, உலக அடிப்படையின்மேல் நாம் சமாதானத்துக்குத் திட்டம்போடவேண்டும்; இரண்டு, அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் எல்லாத் தேசங்களும், எல்லா மக்களும் சுதந்திரம் பெற்றவர்களாக இருக்கவேண்டும்; மூன்று, சமாதானத்தை அடைவதிலும் நிலைநாட்டுவதிலும் நிர்மாண முறையிலே செயலாற்ற முன்வர வேண்டும்; அப்போதுதான் உலகில் அமைதி நிலவும். ஆனால், இன்று உலக அரங்கில் தோன்றும் நிகழ்ச்சிகள் இந்த நிபந்தனைகள் நிறைவேறுவதற்குச் சாதகமாக இல்லை.

சர்வதேச சங்கமோ, ஐக்கிய நாடுகளின் ஸ்தாபனமோ ஒரு கருவியேயாகும். உலக மக்களின் விருப்பம்தான் அந்தக் கருவியை இயங்கச் செய்யும் சக்தி. ஆகையால் கருவியிலிருக்கும் குறைகளைக் கர்த்தாவினுடைய திடத்தினால் நீக்கிவிடமுடியும். எனவே, ஒரே உலகம் என்ற லக்ஷியத்தை அடைவதற்கு முதற்சாதனமாக இருப்பது, அதை அடையவேண்டுமென்ற உலகமக்களின் விருப்பமும், உள்ளமும், உறுதியும்தான். ஆனால் அந்த உணர்ச்சி போதியஅளவில் இன்னும் உலகமக்களிடையே பரவவில்லை. அதற்குக் காரணம் உலகின் ஒருசில நாடுகளில்மட்டுமே மக்களின் அரசாங்கம் நடப்பதாகும். இதர நாடுகளிலெல்லாம் ஒரு குறிப்பிட்ட தனிவகுப்பார்தான் பெரும்பாலோரான பிறரை ஆள்கிறார்கள். ஆகையால், ஒரே உலக லக்ஷியத்துக்கு முதற்படி உலகின் ஒவ்வொரு நாட்டிலும் மக்களின் ஆட்சி நடைபெறவேண்டும். அத்தகைய ஆட்சியில் அரசியல், பொருளாதாரம், சமூகம் என்ற மூன்று

துறைகளிலும் ஜனநாயகம் நிலவவேண்டும். அந்தநிலையில் உள்நாட்டுச் சுரண்டலும், வெளிச்சுரண்டலும் தாமே நின்றுபோகின்றன. மக்கள் நேருக்குநேராகச் சர்வதேச அரங்கத்தில் சந்திப்பார்கள். மக்கள் கூட்டம் ஒன்று; மனித வர்க்கம் ஒரு குடும்பம்; அவர்கள் வாழும் இடம் ஒரே வீடு; ஒரே உலகம்; அதை நிர்மாணிக்கும் பொறுப்பு ஒவ்வொருவரையும் சேர்ந்தது என்ற புதிய உணர்ச்சி தோன்றும்; அப்போது ஒரே உலகம் என்ற லக்ஷியம் தானே நிறைவேறும்.

# 11. முதல் வேலை—கல்வி

குயவன் ஒருவனுடைய குடிசையின் வாயிலில் களி மண் குவிந்து கிடக்கிறது. அந்தக் களிமண்ணை எடுத்துப் பக்குவப்படுத்தி அதிலிருந்து பலவிதமான பாத்திரங்களை யும் பொம்மைகளையும் அவன் செய்கிறான். அவைகளில் சிலவற்றுக்கு அவன் விதவிதமான வர்ணங்கள் கொடுத்து அவைகளை வசீகரமிக்கவையாகவும் அழகுடையனவாகவும் செய்கிறான். வெளியில் கிடக்கும் களிமண்மேட்டின்மீது குழந்தைகள் ஏறி விளையாடுகின்றன. வழியிலே நடப் பவர்கள் ஒதுங்குவதற்காக அதன்மீது ஏறி அதனைத் தாண்டிச் செல்கிறார்கள். தண்ணீரில் அது ஊறி இருக் கும்போது அதன்மேல் காலைவைத்தால் அது வழுக்கிவிடக் கூடுமே என்று சற்று அஞ்சுபவர்களைத் தவிர அக்களிமண் மேட்டைக் கவனிப்பவர்களோ, அதைப்பற்றி யோசிப்பவர் களோ யாருமில்லை. ஆனால் அதே களிமண்ணால் செய்யப் பட்டு உள்ளே வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களையும் பொம்மைகளையும் கண்டு களிப்பதற்காகவும், பணம் கொடுத்து வாங்கிக்கொண்டு போவதற்காகவும், தனவந்தர் களும் உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர்களும் கலையுணர்ச்சி வாய்ந்தவர்களும் அந்தக் குடிசைக்கு வருகிறார்கள்.

மகாபலிபுரம் என்பது சென்னை நகரத்திலிருந்து 53 மைல் தூரத்தில் கடற்கரையோரமாயுள்ளதோர் ஊர். இந்தியாவின் பலபாகங்களிலிருந்து தென்னிந்தியாவுக்கு வரும் மக்களும், அந்நிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் மக்களும் பெரும்பாலும் இம் மகாபலிபுரத்தைச் சென்று காணாமலிருப்பதில்லை. அந்த ஊரில் சிறிதும் பெரி துமான பாறைத் துண்டங்கள் கிடக்கின்றன. இத் துண் டங்களுக்கிடையே, அதேமாதிரித் துண்டங்களை அழகு

---

ஆக்கூர் உயர்நிலைப்பள்ளி, வள்ளுவர் இல்லம் ஆகியவற்றின் சார்பாக 1950-ம் ஆண்டில் வெளியான சஞ்சிகையில் இக்கட்டுரை பிரசுரமாயிற்று.

பெறக் குடைந்தும் செதுக்கியும் செய்யப்பட்ட கோயில்களும் மண்டபங்களும் இதர உருவங்களும் அமைந்திருக்கின்றன. பஞ்சபாண்டவர்களின் ஐந்து ரதங்கள், மகிஷாசுர மண்டபம், கிருஷ்ண மண்டபம், இம் மண்டபங்களின் சுவர்களிலே செதுக்கப்பட்டிருக்கும் சித்திரங்கள், கடற்கரைக் கோயில், யானை ஆகியவை அற்புதமும் அழகும் நிறைந்த கலைச் சிருஷ்டிகளாகக் கண்டோரை நேரம் போவது தெரியாமல்—இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே நிற்கச்செய்கின்றன. ஆனல், அங்கே கிடக்கும் மற்ற பாறைத் துண்டங்களைப்பற்றிச் சிந்திப்பார் யாருமில்லை. அவற்றின்மீது ஏறி நடந்து தாண்டிச்செல்ல வேண்டிய அவசியம் ஏற்படும்போது சறுக்கி விழுந்துவிடாமல் ஜாக்கிரதையாகப் போகவேண்டுமே என்ற ஒன்றுதான் அவைகளைப்பற்றிய கவலை.

மனிதர்களிலும் அப்படியே; எல்லோருக்கும் தோற்றம் ஒன்ருக இருக்கலாம்; அவயவங்கள் ஒரேமாதிரியாக இருக்கலாம். ஆகையால் அவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான ஸ்தானத்தை அடைவதில்லை, சம அந்தஸ்தைப் பெறுவதில்லை. ஒரு கோஷ்டியார் பெயருக்கும் உருவத்திலும்தான் மனிதர்கள். அவர்கள் அறிவிலும், பண்பிலும், ஒழுக்கத்திலும் மனிதர்கள் ஆகவில்லை. ஆகையால் அவர்களுக்கு உண்மையான மதிப்பு, கௌரவம், செல்வாக்கு இல்லை. மற்ரெரு கோஷ்டியார் உருவத்தில் மனிதர்களாக இருப்பதோடு நின்றுவிடவில்லை. தங்கள் சீலத்திலும், ஞானத்திலும், நாணயத்திலும் மனிதர்களாக இருக்கிருர்கள். அவர்கள் மனித உருவத்தில் மிருகங்களாக இல்லாமல் மனிதர்களாகவே வாழ்கிருர்கள். அவர்களுடைய வாக்குக்குச் செல்வாக்கு இருக்கிறது. அவர்களுடைய நாணயம் மணக்கிறது; அவர்களுடைய ஒழுக்கம் ஓங்குகிறது. அவர்கள் ஒவ்வொருவரும் தத்

தமக்குத் தாமே மன்னராகவும், எல்லோருக்கும் மன்னராக வும் விளங்குகிருர்கள். இவ்விரு கோஷ்டியாருக்குமிடையே காணப்படும் இந்த வேற்று நிலைமைக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது எது? அதுதான் கல்வி.

வெளியே இருக்கும் களிமண்ணை எடுத்துக்கொண்டு வந்து பக்குவப்படுத்தவேண்டும். பின்னர் அதை வேண்டிய படி பாத்திரமாகவோ பொம்மையாகவோ செய்யவேண்டும். உருவில்லாமல், ஸ்திரமில்லாமல், லக்ஷியமில்லாமல் இருக்கும்–பிறந்தபடியே நிலைத்து நிற்கும்–மனிதக் களிமண்ணி லிருந்து இத்தகைய உருவை உண்டாக்க உதவுவதுதான் கல்வி. குறிப்பிட்ட உருவமில்லாமல் கரடு முரடாகக் கிடந்த பாறைத் துண்டங்களிலிருந்து வேண்டாத பகுதி களைக் குடைந்தோ செதுக்கியோ திட்டப்படி அகற்றிவிட்டு ஆச்சரியகரமான உருவங்களை வகுத்தெடுக்கும் உளியாக இருப்பது கல்வி. அறியாமை, மூடநம்பிக்கை, மாயை ஆகிய வேண்டாத பகுதிகளை அந்த உளி செதுக்கித் தள்ளி விடுகிறது. செதுக்கப்பட்ட பாகங்கள் புதிய பளபளப்புட னும் மெருகுடனும் மிளிர்கின்றன. வெறுந் துண்டங்களி லிருந்து அற்புதமான சிருஷ்டிகள் உதயமாகின்றன.

'கல்வி' என்ற சொல்லுக்கே ''கல்லுதல்'', ''தோண்டு தல்'' என்றுதான் பொருள். எனவே கற்றவன் என்பவன் தன்னையும் தன்னைச் சுற்றியிருப்பவற்றையும் ஆழத் தோண்டி ஆராய்ந்து தன் நிலைமையையும், தனக்கும் தன்னைச் சுற்றியிருப்பவற்றுக்குமுள்ள உறவையும் அறிந்த வனேயாவான். அந்த அறிவை ஒவ்வொருவனும் பெறும் போது மக்களுக்கிடையே பிறப்பு, தொழில்காரணமாக ஜாதி, மதம் என்ற பெயரால் தோற்றுவிக்கப்படும் வேற்றுமைகள் தாமாகவே மறைந்து விடுகின்றன. ஒரே இறைவனின் அம்சமாகிய எல்லா மக்களின் அடிப்படைத் தன்மையும் ஒன்றுகத்தான் இருக்கமுடியும். ஜாதியோ, மதமோ,

தொழிலோ அதனை வேறுபடுத்த முடியாது. அத்தகைய ஓர்மையை உணர உதவுவதுதான் கல்வி. அந்த உணர்ச்சி அறிவின் அடிப்படையின்மேல் அமைந்து செயலாகப் பரிணமிக்கும்போது மனிதவர்க்கம் ஒரே குடும்பமாகிவிடு கிறது. அந்த நிலைமை உண்டாகும்வரையில் மனிதர் களிடையே பொறாமையும், பகைமையும், குரோதமும் இருந்துகொண்டேதானிருக்கும். மனிதத்தன்மை அவர் களிடமிருக்காது. உண்மையில், அவர்கள் மனிதர்களே அல்ல; விலங்குகள்தாம். ஆகையால்தான்,

விலங்கொடு மக்கள் அனையர்—இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

என்று திருவள்ளுவர் உவமை வகுத்தார். அதுமாத்திர மல்ல; அவர்களுடைய விலங்குத்தன்மையினால் அவர் களுடைய மனிதத்தோற்றமும் கேவலமாகிவிடுகிறது.

கண்ணுடைய ரென்பவர் கற்றோர்—முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

என்று திருவள்ளுவர் கூறினபோது அவர் கண்ணோடு மாத்திரம் நிற்க நினைக்கவில்லை ; மனிதர்கள் உயிர்வாழக் கண்கள் எவ்வளவு இன்றியமையாதனவோ அப்படியே ஆத்மீக வாழ்வுக்கும் ஞான வாழ்க்கைக்கும் கல்வி இன்றி யமையாதது என்பதை வற்புறுத்த அவர் கண்ணைக் குறிப் பிட்டார். அத்தகைய கண்ணே புண்ணாகுமானால், பிற வற்றைப்பற்றிக் குறிப்பிடவும் வேண்டுமோ? விலங்குத் தன்மை விலங்குடலோடு அமைந்திருப்பதுதான் பொருத் தம். மனிதத் தோற்றத்துக்குள்ளே விலங்குத்தன்மை மறைந்து நிலைக்க முயன்றால் தோற்றத்தையும் தன் தன்மையதாகவே ஆக்கிவிடுகிறது. பண்டத்தின் மணம் பாண்டத்தைப் பற்றாமல் விடுமா?

பள்ளிப் படிப்பு ஒன்றினால்தான் கல்வியைப் பெறமுடி யும் என்று சொல்வதற்கில்லை. பள்ளிப்படிப்பு நிரம்பப்

பெற்றவர்களும் உண்மைக் கல்வியின் அடையாளமான பண்பாடு அற்றிருப்பதை நாம் பார்க்கிறோம். அதற்கு மாறாகப் பள்ளியையே எட்டிப்பார்க்காதவர்கள் பலர் அற்புத மான நுண்ணறிவும், அழகான உணர்ச்சியும், உயர்தர மான பண்பாடும் உடையவர்களாக இருப்பதைப் பார்க்கி றோம். அத்தகையவர்களுக்கு உலகமே பள்ளிக்கூடம்; வாழ்க்கையே படிப்பு. இதனால், கல்வித்தேட்டத்துக்குப் பள்ளிப் படிப்பு அவசியமில்லை என்று ஏற்பட்டுவிடாது. உண்மையான கல்விக்கு இந்தப் படிப்பை ஒரு இலகுவான சாதனமாகக்கொள்ளலாம். பள்ளிப் படிப்பினால் பிறக்கக் கூடிய அறிவுப் பயிற்சியும், கட்டுப்பாடும் கல்வியின் பல னுக்குச் சிறந்த அஸ்திவாரமாக அமையக்கூடும். ஆகை யால் நம்பிக்கையுடன் கல்வித்துறையில் முதற்படியாகப் பள்ளியைக் கொள்ளவேண்டும். அது நம்மை நாமே மனி தர்களாக்கிக்கொள்ள எடுத்துக் கொள்ளும் பெருமுயற்சி யின் பாதையிலே முதலடி எடுத்து வைப்பதாகும்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் நம் நாடு அரசியல் சுதந்தரம் பெற்றது. இப்போது நமது அரசியலமைப்பு குடியரசு ஆகிவிட்டது. ஜனநாயக முறையில் நம் ஆட் சியை நடத்த நம் தலைவர்கள் திட்டம் போட்டிருக்கிறார் கள். விரை நடுவதற்கு முன்னாலேயே விருந்து நடத்தத் திட்டம் போட்டிருக்கிறோம்; வயது வந்தவர்கள் அனை வருக்கும் வோட்டுரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் கள் அனைவரும் வோட் என்றால் என்ன என்று அறிவார் களா? அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காக அரசாங்கமோ, சமூகத் தலைவர்களோ ஏதாவது செய்திருக்கிறார்களா? கல்வி யறிவுபெற்ற வோட்டர்கள்தாம் ஜனநாயகத்தின் தூண்கள். கல்வி யறிவு அவர்களுக்கில்லாவிட்டால், தூண்கள் நொறுங்கிவிடும்; கட்டடம் கீழே வீழ்ந்து நாசமாகிவிடும். இன்று உடனடியாகச் செய்யப்படவேண்டியது ஒன்றே.

அதுதான் நம்நாட்டு மக்களை ஜனநாயகத்துக்குத் தயார் செய்வது. அவர்களிடையே காணப்படும் ஓர்மை யுணர்ச்சிதான் ஜனநாயகத்தின் ஜீவசத்து. மதம் காரண மாகவோ, ஜாதி காரணமாகவோ, வேறு எக்காரணம் பற்றியோ அவர்களிடையே காணப்படும் வேற்றுமை ஒவ் வொன்றும், ஜனநாயகமென்ற உடலின்மேல் உண்டாகி யிருக்கும் புண்ணாகும். அப்புண்கள் உடனே ஆற்றப் படாவிட்டால் அவை பொறைகொண்டு உடலையே அரித்துத் தொலைத்துவிடும். எனவே நம்முடைய புது வாழ்வு நல் வாழ்வாக வேண்டுமானால், அரசாங்கத்தாரும், சமூகத் தலைவர்களும் நம் நாடு நிறையப் பள்ளிக்கூடங்களை அமைக்கவேண்டும். படிக்கும் வயதுவந்த எந்தச் சிறுவ னும் சிறுமியும் எக்காரணம் பற்றியும் படிக்க வசதியற்றவர் களாக இருக்கக்கூடாது. ஜாதியும், மதமும் பொது வாழ் விலே தனியிடம் பெறக்கூடாது. அரசாங்கத்தாரின் ஒவ் வொரு செயலும், மக்களை ஒன்றுகப்பிணைக்கும் நோக்க மும் பலனும் பெற்றவையாக இருக்கவேண்டும்.

இப்பெருங் காரியத்தில் இந்நாட்டில் வாழும் ஒவ் வொருவருக்கும் பங்கு உண்டு. ஒவ்வொருவரும் தத் தமுடைய வாழ்க்கையைத் தூய்மைப் படுத்திக்கொள்ள முயலவேண்டும். எல்லோரும் இந்த முயற்சியில் ஈடு படும்போது சமூகம் தானகவே முன்னேறுகிறது. ஏனெ னில், தனி மனிதர்களின் தொகுதியே சமூகம். ஒவ்வொரு வரும் தம்தம் வாழ்க்கை, அறிவு, உண்மை, அன்பு கமழ்வ தாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். இது தான் இன்று சீரழிந்து, சிறுமை மலிந்து, பொய்மை மிகுந்து, சேவை மறந்து, நிலை நெகிழ்ந்து நிற்கும் பொது வாழ்வினைப் புனிதம் படிய, பொதுநலம் பெருக, தார்மிக மோங்க, ஒழுக்கம் தழைக்க, உண்மை உறைய மாற்றுவ தற்குரிய நிச்சயமான மார்க்கம்.

# 12. சரித்திரத்தின் விஞ்ஞானப் பான்மை

விஞ்ஞானப் பான்மை என்பதை இரண்டு கருத்துக் களில் உபயோகிக்கலாம். வெறும் நம்பிக்கையின் பேரிலோ, அல்லது ஊகத்தின் பேரிலோ அல்லாமல், எல் லோராலும் அங்கீகரிக்கப்பட்ட சில உண்மைகளின் அடிப் படையின் மேல், தர்க்கரீதியாகவும், அறிவு பூர்வமாகவும், படிப்படியாக எந்த விஷயத்தையும் தெளிவாக எடுத்துக் கூறுவதை விஞ்ஞானப் பான்மை என்று சொல்லலாம். இது முதல் கருத்து. இந்தக் கருத்துப்படி சரித்திரம் மாத்திரமல்ல, எல்லாப் பொருள்களையும், நூல்களையும் விஞ்ஞானப் பான்மையில் அமைக்கலாம். ஆனால், 'பௌதிகம், ரசாயனம் போன்ற விஞ்ஞான சாஸ்திரங் களுக்கு அமைந்துள்ள பண்புகளும், தன்மைகளும் எவ் வளவு தூரம் சரித்திரத்தில் அமைந்திருக்கின்றன' என்ற கேள்வியில் விஞ்ஞானப்பான்மை என்பதன் இரண்டாவது கருத்து அடங்கியிருக்கிறது. இந்தக் கருத்தில், சரித்திரத் தின் விஞ்ஞானப்பான்மை மிகக் குறைந்த அளவினதாகத் தான் இருக்கிறது என்று சொல்லவேண்டும். இதற்குக் காரணம் இவ்விரு பகுதி நூல்களும் வெவ்வேறான முறை யிலே, வெவ்வேறு விஷயங்களைப்பற்றி, வெவ்வேறான நோக்கங்களுடன் தோன்றியிருப்பதேயாகும். ஆகையால், சரித்திரத்தில் விஞ்ஞானப்பான்மை எந்த அளவில் பொருந்தியிருக்கிறது என்பதைப் பார்ப்பதற்குமுன் சரித் திரம் யாது? விஞ்ஞானம் யாது? என்பதைப் பார்ப்போம்.

லார்ட் ஆக்டன் (Lord Acton) என்பவர் சரித்

---

"சரித்திரத்தின் பயன்" என்ற தொடரிலே, "சரித்திரத்தின் விஞ் ஞானப் பான்மை"யைப் பற்றிய இப்பிரசங்கம் 18-12-1946-ல் அகில இந்திய ரேடியோவின் சென்னை நிலையத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டது.

திரத்தை விஞ்ஞானத்தோடு ஒப்பிடுகையில், விஞ்ஞான மானது, "ஒரே மாதிரியாக இருக்கிற உண்மைகளின் பெருந்திரளை ஒரு பொதுவான விதி அல்லது நியதி என்பதற்குள் சேர்த்துப் பிணைப்பது; குறிப்பிட்ட நிலை மைகளில் ஒத்த சம்பவங்கள் மறுபடியும் நிகழும் என்று நிச்சயமாக முன்கூட்டிக் கூறுவதை அந்த விதி அல்லது நியதி நமக்குச் சாத்தியமாக்குகிறது" என்று கூறுகிறார். இதன்படி விஞ்ஞானத்துக்கு அடிப்படையாகவும், உதவி யாகவும் இருப்பவை மூன்று அங்கங்கள்: (1) ஒரே மாதிரியான இயற்கை வாய்ந்த பொருள்கள். (2) அப் பொருள்களின் இயக்க முறைகள் ஒரு பொதுவான நியதிக்கோ, விதிக்கோ கட்டுப்பட்டிருக்கின்றன. (3) அந்த விதியையோ, நியதியையோ ஆதாரமாகக்கொண்டு, இன்னின்ன நிலைமைகளில் இன்ன முறையிலே தான் அப் பொருள்கள் இயங்கும் என்று நிச்சயமாகச் சொல்லுவது. ஆனால், சரித்திரத்தையோ இவ்வளவு சுலபமாக விவரித்து விடமுடியாது. "எல்லா விஞ்ஞான சாஸ்திரங்களுக்கும் வேராக இருப்பதே சரித்திரம் தான்" என்று கார்லைல் (Carlyle) என்பவர் கூறுகிறார்; "ஒரு விஞ்ஞானத்தின் சரித்திரமே விஞ்ஞானம் தான்" என்று கேதே (Goethe) என்பவர் கூறுகிறார். இத்தகைய பரந்த பொருளிலே சரித் திரமானது மனிதனுடைய சகல முயற்சிகளையும், நட வடிக்கைகளையும், அவற்றுக்கு அடிப்படையான அவ னுடைய குணங்களையும், உணர்ச்சிகளையும், எண்ணங் களையும் தன்னுடைய மண்டலத்துக்குள் அடக்கிக்கொள் ளும். எனவே, மனித வாழ்க்கையின் எந்தப் பகுதியுமே சரித்திரத்தின் எல்லையை விட்டுத் தப்பிப்போவ தில்லை. ஆகையால் விஞ்ஞானமும் மனிதனுடைய முயற்சியின் பலனாகப் பிறந்தது என்ற வகையில் சரித்திரத்தின் ஒரு பகுதியாகி விடுகிறது. விஞ்ஞானத்தின் ஒரு குறிப்பிட்ட

பகுதி, எந்தப்படியிலிருந்து ஆரம்பித்துச் சிறிது சிறிதாக வளர்ந்து இன்றைய நிலையை எப்படி அடைந்தது என்ற வரலாறு விஞ்ஞான வளர்ச்சிக்கு இன்றியமையாதது; ஆனால், இந்த வரலாற்றையே, அந்த விஞ்ஞான வளர்ச்சி யின் சரித்திரம் என்று கூறிவிடலாம். இது சரித்திரம் என்பதன் மிகப்பரந்த பொருள். இவ்வளவு விஸ்தாரமில் லாத மற்றொரு பொருளும் அதற்கு இருக்கிறது. ''பொதுக் காரியங்களுக்காகப் பல சங்கங்களில் ஒன்றாகச் சேர்ந்த மக்களின் தனிச் செயல்களினுடைய பொதுவரலாறு சரித் திரமாகும்'' என்று, முன்னே குறிப்பிட்ட லார்ட் ஆக்டன் கூறுகிறார். இந்தக் குறுகிய பொருளின்படி தனி மனிதர் களின் வாழ்க்கையும், அதன் சம்பவங்களும் சரித்திரத்தில் தனியாக இடம் பெறுவதில்லை. பொது நோக்கங்களுக் காகப் பலர் ஒன்று சேர்ந்து செயலாற்றும்போது, ஒவ் வொருவரின் நடத்தையையும் பற்றிப் பொதுவாகக் கூறு வதே சரித்திரம் என்பது இதன் பொருள். இக்கருத்துப்படி, காலத்துக்கும், மக்களின் கூட்டு வாழ்க்கைக்குமேற்ப, சரித்திரத்தின் பொருளடக்கம் மாறுபட்டுக்கொண்டே வந்திருக்கிறது. இதை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக் கலாம். முதலாவது கட்டத்தில் மக்களின் வாழ்க்கையில் முதலிடம் பெற்றது மதம். ஆகையால், அக்காலத்தைப் பற்றிய சரித்திரம் மக்களிடையே தோன்றிய மதாசாரியார் களையும், அவர்கள் ஆரம்பித்த மத இயக்கங்களையும், அவர்களைப் பின்பற்றிய சிஷ்யர்களின் செயல்களையும் பற்றிக் கூறுகிறது. இரண்டாவது கட்டத்தில் அவர்கள் வாழ்க்கையில் பிரதான இடம் பெற்றது அரசு. ஆகை யால், அக்காலத்திய சரித்திரம் மன்னர்களைப் பற்றியும், அவர்களின் ஆட்சி முறைகளைப் பற்றியும், அவர்கள் பிறமன்னர்களுடன் நடத்திய போராட்டங்களைப் பற்றியும் கூறுகிறது. மூன்றாவது கட்டத்தில்—அதுதான் நவீன காலக்

கட்டம்—மக்கள் வாழ்க்கையிலும், கருத்திலும் உயர்ந்த இடம் பெற்றிருப்பது உரிமை என்பது. எனவே, இக்கால சரித்திரங்கள் மக்களுக்கும் மன்னனுக்குமிடையிலுள்ள உறவைப்பற்றியும், மதம், அரசியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் மக்களின் உரிமைகள் யாவை என்பதைப் பற்றியும், அந்த உரிமைகளைப் பெறுவதற்காக மக்கள் நடத்திய போராட்டங்கள், செய்த புரட்சிகளைப் பற்றியும் கூறுகின்றன. இம் முக்காலத்திய சரித்திரமும் முற்கூறிய பொருளில் தான் சரித்திரம் என்ற பெயருக்கு உரித்தாகிறது. இனி, இந்தச் சரித்திரத்துக்கும் விஞ்ஞானத்துக்குமுள்ள ஒற்றுமையைப் பார்க்கலாம்.

விஞ்ஞானம் வளர்கின்ற முறையை நாம் யாவரும் அறிவோம். அது ஆராய்ச்சியின் மூலம் வளர்கிறது. திரும்பத் திரும்பச் செய்யும் பரிசோதனைகளின் மூலம் விஞ்ஞானிகள் விஞ்ஞான உண்மையைக் கண்டு பிடிக்க முயலுகிறார்கள். தங்கள் ஆராய்ச்சிக்கு வேண்டிய பொருள்களையும், உபகரணங்களையும் முதலில் அவர்கள் சேகரிக்கவேண்டும். அதற்குப் பிறகு தாங்கள் பரிசோதனையின் மூலம் கண்டு பிடித்த உண்மையை நிரந்தரமாக நிலை நாட்டுவதற்கு அவசியமானவை எவை என்பதை இவற்றிலிருந்து பொறுக்கி எடுக்கவேண்டும். இந்த இரண்டு செயல்களும்—அதாவது ஆதாரங்கள் தேடுவது, அவற்றை அவைகளின் உண்மைத் தன்மைக்கும், பொருத்தத்துக்கும் தராதரத்துக்கும் ஏற்பப் பாகுபடுத்துவது ஆகிய இரண்டு செயல்களும்—விஞ்ஞானத்துக்கும், சரித்திரத்துக்கும் பொதுவானவை. சரித்திராசிரியனும் தான் எழுதப்போகும் சரித்திரத்துக்கு வேண்டிய விஷயங்களைத் தேடவேண்டும். கல்வெட்டுகளி லிருந்தோ, தஸ்தாவேஜுகளி லிருந்தோ, வழக்கிலிருக்கிற கதைகளிலிருந்தோ, முன்னதாக எழுதப் பட்டுள்ள சரித்திரங்களிலிருந்தோ அவன் அந்த விஷயங்

களைச் சேகரிக்கிறான். பின்னர், இவ்வாறாகச் சேகரித்த விஷயங்களில் எது தான் எழுதப்போகும் சரித்திரத்துக்குப் பொருத்தமானது, எது உண்மையானது, எது வெறும் கட்டுக்கதை, வெறும் கற்பனை, எது நம்பகமானது என்று அலசி ஆராய்ந்து பார்த்துப் பொறுக்க வேண்டும் : இங்கு ஆசிரியன் தன் சொந்த விருப்பு வெறுப்புக்களை ஒதுக்கி விட்டு மிக்க ஜாக்கிரதையுடன், நுணுக்கமாக உண்மையைக் கண்டு பிடிப்பது என்ற ஒரே லக்ஷியத்துடன் வேலை செய்யவேண்டும். இதில்தான் அவனுடைய அறிவின் நுணுக்கமும், ஆராய்ச்சித் திறனும், அலசிப் பார்த்துப் பாகுபடுத்தும் சக்தியும் வெளிப்படும். இந்தக் கடினமான வேலை விஞ்ஞானிக்கும் உண்டு. இந்த இரண்டு அடிப்படையான வேலைகள் விஞ்ஞானத்துக்கும் சரித்திரத்துக்கும் பொதுவானவை. இவற்றுக்கப்பால், அவைகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளைவிட வேற்றுமைகளே பிரதானமாகத் தோன்றுகின்றன. அதன் காரணங்களை இப்போது காணலாம்.

விஞ்ஞான ஆராய்ச்சியை எதற்காகத் தொடர்ந்து நடத்தவேண்டும் ? இயற்கையிலே புதைந்து கிடக்கும் மகத்தான பேருண்மைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற புனிதமான அறிவுத் தாகமாத்திரமல்ல விஞ்ஞான வளர்ச்சிக்குக் காரணம். விஞ்ஞான உண்மைகள் நம்முடைய வாழ்க்கையிலே பயன்படுகின்றன. இயந்திரங்களமைத்து நம் வாழ்க்கையின் உடல் உழைப்பைக் குறைத்துக்கொள்வதற்கும், பொருள் உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வசதிகளையும் சௌகரியங்களையும் பெறுவதற்கும் அவை உபயோகப்படுகின்றன. ஆனால், சரித்திரம் இம்மாதிரி நேரடியாக உபயோகப்படுவதில்லை. அது கடந்த காலத்தையும், கடந்த காலத்து மக்களையும் பற்றிக் கூறுகிறது. அத்தகைய சரித்திரம் இன்றையத் தினசரி வாழ்க்கையில் எந்த

விதமான செளகரியத்தையும் செய்து கொடுக்கமுடியாது. ஆனல், மறைமுகமாக அது ஒரு சிலருக்கு உதவமுடியும். இன்றையப் பிரச்னைகளை உணர்ந்து கொள்வதற்கும், வருங் காலச் சம்பவங்களைச் சிறிது எதிர்பார்ப்பதற்கும், கடந்த காலத்தைப்பற்றிய சரித்திரம் ஓரளவு உதவி செய்யக்கூடும்; வழிகாட்டக்கூடும். வேறு சிலருக்குப் பழம் பெருமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டே இருப்பதற்குச் சரித்திரம் இட மளிக்கலாம். இதல்லாமல், விஞ்ஞானம் உதவுவதைப்போல, நேரடியாக, நீராவி இயந்திரம் கண்டு பிடிப்பதற்கோ, மோட்டார் கண்டு பிடிப்பதற்கோ, ஆகாய விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கோ, அல்லது அணுக்குண்டைத்தான் உற்பத்தி செய்வதற்கோ, சரித்திரம் உதவுவதில்லை. விஞ் ஞானத்துக்கும் சரித்திரத்துக்குமுள்ள இந்த வித்தியாசம் அவற்றின் தன்மைகளை வேருக்குவதோடு, சரித்திரத்தில் மக்களுக்குள்ள சிரத்தையையும் குறைத்துவிடுகிறது.

இரண்டாவதாக, விஞ்ஞானத்தின் விசேஷம், அதன் திட்டமான விதிகள். இன்ன காரணத்தால் இன்ன காரியம் நிகழ்கிறது என்று ஆராய்ச்சியின் பயனுகச் சில விதிகளை விஞ்ஞானிகள் நிர்ணயிக்கிருர்கள். இந்த விதிகளை வரை யறுத்துக் கூறமுடியும். உதாரணமாக, இரண்டு பாகம் ஜலவாயுவும் (Hydrogen) ஒரு பாகம் பிராணவாயுவும் (Oxygen) கூடினுல் தண்ணீர் உண்டாகிறது என்பது ஒரு விஞ்ஞான விதி. இது ஒரு திட்டமான விதி. இது எல்லா இடத்துக்கும் பொருந்தும். இந்தியாவில் இவ்விதி உண்மையானுல், இங்கிலாந்திலும் இது உண்மையே. இரண்டுநாடுகளுக்கிடையிலுமுள்ள சீதோஷ்ண நிலையின் வேறுபாடு இத்தகைய விதிகள் நிரூபிக்கப்படுவதைப் பாதிக்கு மானுல், ஒரு நாட்டில் மற்றொரு நாட்டின் சூழ்நிலையைச் செயற்கையாக உண்டுபண்ணிப் பரிசோதனை நடத்தி அவைகளின் உண்மையைக் காணலாம். ஆனல், இம்

மாதிரியான விதிகளைச் சரித்திரம் திட்டமாக வரையறுத்துக்கூற முடியாது. ஏனெனில், உயிரற்ற ஜடப்பொருள்களைப் பற்றியோ, அல்லது பகுத்தறிவற்ற தாவரங்களைப் பற்றியோ, மிருகங்களைப் பற்றியோதான் விஞ்ஞானம் தன் ஆராய்ச்சிகளைச் செய்கிறது. ஒரே இனத்தைச் சேர்ந்த தாதுப்பொருளும், தாவரமும் ஒரேமாதிரியாகத்தான் எல்லா இடங்களிலும் இயங்குகின்றன. ஆனால், சுயேச்சையும், சுய அறிவும், சுய உணர்வும் கொண்ட மனிதன் அப்படி இயங்குவதில்லை. ஒரே சூழ்நிலையிலுள்ள இருவர் வெவ்வேறு விதமாக நடக்கிறார்கள். ஒரே காரியத்தைச் செய்யும் இருவருடைய நோக்கங்கள் வெவ்வேறாக இருக்கலாம். ஒருவனுக்குத் துன்பத்தையளிக்கும் ஒரு நிகழ்ச்சி அதே சூழ்நிலையிலுள்ள மற்றொருவனுக்கு இன்பத்தையுண்டு பண்ணக்கூடும். ஒவ்வொருவனுக்கும் அவனுக்கே விசேஷமான தனித்தன்மையும், தனியுணர்வும், தனியமைப்புமிருக்கின்றன. ஒரே அடிப்படையின் மேல் தோன்றியிருக்கும் மக்களிடையே இத்தகைய வேறுபாடுகள் இருப்பது இயற்கையின் அற்புதம்; சிருஷ்டியின் அழகு. ஆகையால், விஞ்ஞான விதிகளைப்போலச் சரித்திர விதிகளை நிர்ணயிக்கமுடியாது. மேலும், இந்தியாவில் வாழும் ஒரு மனிதனுடைய வாழ்க்கையை அவனுடைய தனிப் பண்புகளுடன் அவன் நாட்டுக்கே உரித்தான சில விசேஷங்களும் பாதிக்கின்றன. நாட்டின் சீதோஷ்ண நிலை, அதன் பூகோள அமைப்பு, அதன் இயற்கை நிலவரம் ஆகியவையும் அவனுடைய மனப்போக்கை உருவாக்குவதற்குப் பெரிதும் காரணமாகின்றன. எனவே, எல்லா மக்களுக்கும் பொதுவான விதியொன்றை வரையறுக்கமுடியாது. மேலும் விஞ்ஞானத்தைப்போலச் சரித்திர உண்மைகளை மீண்டும் மீண்டும் பரிசோதனை செய்து பார்க்கமுடியாது. இறந்த காலத்தைச் சேர்ந்த மக்கள் அவர்களுடைய சூழ்நிலையில்

எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை இன்றைய மக்களேக்கொண்டு இன்றையச் சூழ்நிலையில் நிரூபிக்க முடியாது. மனித மனம் பலதரப்பட்டது ; மாறுந்தன்மை வாய்ந்தது. இடத்துக்கிடம், காலத்துக்குக் காலம் அது மாறுகிறது. ஆகையால், அப்படியே, ஏதாவதொரு சரித்திர விதியை, பல தேசங்களின் மக்கள், பல காலங் களில், கிட்டத்தட்ட ஒரேமாதிரியான நிலைமையில் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயித்தாலும், அந்த விதியின்படியே வருங் கால மக்களும் நடந்துகொள்வார்கள் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. இதற்குச் சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

17—18-ம் நூற்ருண்டில் வாழ்ந்த நியூடன் (Newton) கண்டுபிடித்த ஆகர்ஷண விதியை இன்றையத் தினம் கூட நாம் பரிசோதித்து அதன் உண்மையை உணரலாம். இந்தப் பரிசோதனையை உலகத்தில் எந்தப் பாகத்தில் வேண்டுமானுலும் நடத்தலாம். இது ஒரு விஞ்ஞான விதி. உலகத்தில் பலநாட்டு மக்கள் புரட்சி செய்திருக் கிருர்கள். பிரஞ்சுப் புரட்சியும், ருஷியப் புரட்சியும் நாம் எல்லோரும் அறிந்தவை. இவற்றின் காரணங்களை ஆராய்ந்து பார்த்த சரித்திராசிரியர்கள், பஞ்சமும் பட்டினியும் புரட்சியை உண்டுபண்ணுகின்றன என்ற சரித்திர விதியைக் கண்டுபிடித்தார்கள். இந்த விதி மனித வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் விதியாகாது என்று ஜி. எம். ட்ரவெல்யன் (G. M. Trevelyan) கூறுகிருர். புரட்சியை உண்டுபண்ணுவதற்குப் பதிலாகப் பட்டினியும் பஞ்சமும் மிகக் கேவலமான அடிமையுணர்ச்சி யையே உண்டுபண்ணுகின்றன என்பதற்குச் சரித்திரத்தில் உதாரணங்கள் இருக்கின்றன என்று அவர் எடுத்துக் காட்டுகிருர். 1943-ம் வருஷத்தில் நம் நாட்டில் வங்காள

மாகாணத்தில் உண்டான பஞ்சத்தில் லக்ஷக் கணக்கான மக்கள் பட்டினியால் இறந்தார்கள். ஆனால், மேற்கூறப் பட்ட சரித்திர விதியை நிரூபிப்பதற்கான எந்தவிதமான சம்பவமும் உண்டாகவில்லை. மற்றொரு உதாரணமும் பார்க்கலாம். அமெரிக்க ஐக்கியநாடுகள் தங்கள் அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் பிரிட்டனுடன் ஆயுதந் தாங்கிப் போரிட்டன. அதேமாதிரிதான் தென்னமெரிக்க நாடுகள் ஸ்பெயினுடன் போரிட்டன : இத்தாலி ஆஸ்திரிய சாம்ராஜ்யத்துடன் போரிட்டது. அயர்லாந்து பிரிட்டனுடன் சண்டையிட்டது. இவையெல்லாம் சரித்திர நிகழ்ச்சிகள். இவற்றிலிருந்து, அடிமை நாடுகள் தங்கள் அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதற்காக ஆயுதந் தாங்கிப் போரிடுகின்றன என்ற ஒரு சரித்திர விதியைச் சிலர் நிர்ணயித்தார்கள். ஆனால், இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் இந்த விதியை ஊர்ஜிதம் செய்வதாக இல்லை. மகாத்மா காந்தி தோன்றி, தம் அஹிம்ஸைக் கொள்கையின் மூலம் இந்தச் சரித்திரவிதியை மறுத்துவிட்டார். ஆகையால், விஞ்ஞானத்தைப் போலச் சரித்திரத்தில் திட்டமான, நிச்சயமான விதிகளை நிர்ணயிக்க முடியாது என்பது தெளிவாகிறது.

மேலும், விஞ்ஞான உண்மைகள் எல்லா நாட்டுக்கும், எல்லாக் காலத்துக்கும் பொருந்தும்படியாக இருக்க வேண்டும். ஆனால், சரித்திரத்தின் வேலை அதுவல்ல. ஒரு நாட்டு மக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திலோ, பல நூற்றாண்டுகளாகவோ வாழ்ந்த வாழ்க்கையைச் சரித்திரமாக எழுதலாம். இல்லாவிடில், உலகமக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடத்திய வாழ்க்கையைச் சரித்திரமாக எழுதலாம். ஆனால், எல்லாக் காலத்திலும் உலக மக்கள் யாவரும் இன்னமாதிரியாக வாழ்ந்தார்கள் என்று ஒரே சரித்திர உண்மையாகக் கூறமுடியாது. காலத்தையும்,

இடத்தையும் குறிப்பிடுவது சரித்திரத்தின் முக்கியமான அம்சங்களில் ஒன்று.

விஞ்ஞானத்துக்கும் சரித்திரத்துக்கும் மற்ருெரு முக்கியமான வித்தியாசமுண்டு. விஞ்ஞான உண்மைகள் யாவும் நேரடியாக ஒருவன் தன் கண்ணுல் கண்டதை அடிப்படையாகக் கொண்டவை. முற்கூறப்பட்டதைப் போல நியூடன் (Newton) இன் விஞ்ஞான விதிகளை இன்று நம்முடைய பரிசோதனையால் நிரூபிக்கலாம். ஆனுல், சரித்திரம் அப்படி யல்ல. சரித்திர உண்மைகள் யாவும் பெரும்பாலும் ஊகத்தை அடிப்படையாகக் கொண்டவை. தற்கால சரித்திர மொன்றில்தான் ஆசிரியன் தன் சரித்திரத்தின் சம்பவங்களை நேரில் பார்க்கிறுன். அப்போதுங்கூட அவனுடைய சரித்திரத்தில் அந்தச் சம்பவங்கள் நடந்தது நடந்தபடியே கூறப்பட்டிருக்கின்றன என்று திண்ணமாகச் சொல்லமுடியாது. ஏனெனில், ஆசிரியனின் மனம், அவன் கண்ணுல் கண்ட சம்பவங்களை வேறு விதமாகக் கண்டிருக்கக்கூடும். இறந்த காலத்தைப் பற்றிய சரித்திரம் உண்மை என்ற உரைகல்லில் மாற்று இன்னும் சற்றுக் குறைந்தே காணப்படக்கூடும். ஏனெனில், ஆசிரியன் தன் சரித்திர நிகழ்ச்சிகளைப் பிறர் கண்கொண்டு பார்க்கிறுன்; பிறர் கண்கொண்டு மாத்திரமல்ல, பிறர் மனம் கொண்டும் பார்க்கிறுன். ஆகையால், பிறருடைய கண், மனம், ஆசிரியனுடைய கண், மனம் ஆகியவற்றைத் தாண்டிச் சரித்திர நூலிலே இடம் பெறும் சம்பவங்கள் நடந்தது நடந்தபடியே அமைவது அரிதாகும். இதற்கு ஒரு நல்ல உதாரணம் சர் வால்டர் ராலே (Sir Walter Raleigh) என்பவரின் வாழ்க்கையில் நடந்ததொரு சம்பவம். அவர் சிறையிலிருக்கும் போது சிறை ஜன்னல் வழியாகத் தூரத்தில் நடந்த சம்பவமொன்றைப் பார்த்தார். பின்னுல், அவ்வழியாகச் சென்ற மூன்று வழிப்போக்கர்

களை அழைத்து அங்கே என்ன நடந்தது என்று கேட்டார். அம்மூவரும் மூன்று விதமாகப் பதில் சொன்னார்கள். தானோ, வேறொரு விதமாக அதைப்பற்றி ஊகித்திருந்தார். இம்மாதிரி நடப்பதற்கு விஞ்ஞானத்தில் இடமில்லை.

சரித்திரத்தில் வெவ்வேறான இரு பான்மைகளுக்கு இடமுண்டு; ஆராய்ச்சியில் அது விஞ்ஞானப்பான்மையைப் பெறுகிறது; இலக்கியப் பண்புடன் வரலாற்றைச் சொல்லுகிறமுறையில் அது கலைப்பான்மையைப் பெறுகிறது. இந்த இருபுறப்பான்மையை மறப்பது சரித்திரத்தின் உண்மைத் தன்மையை மறப்பதாகும். சரித்திரம் வெறும் விஞ்ஞானமானால், தனி மனிதனுக்கு அதில் இடமில்லை. ஆனாலும், தனி மனிதன்தான் சரித்திரத்தின் சிருஷ்டி கர்த்தா; அதன் கதா நாயகன். அவனுடைய அநுபவமே சரித்திரம். சரித்திரத்தை ஒரு சிறந்த மாளிகையுடன் ஒப்பிட்டால், தனி மனிதன் ஒவ்வொருவனும் அம் மாளிகையின் அஸ்திவாரக்கல் மாதிரி. மேலும், விஞ்ஞான உண்மைகளைப் போல், சரித்திர நிகழ்ச்சிகளும் விதியாகும் போது மனிதனின் முன்னேற்றப்பாதை அடைபட்டுப் போகிறது. சரித்திரம் விதியாகுமானால் சிந்தனை உலகம் நிரந்தரமாக அடிமையாகி விடும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. ——
108773
VI
151